www.padippakam.com



# இலங்கை தமிழரின் எழுச்சி வரலாறு

ஆக்கியோன் . இ. நாகராசா

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை தமிழரின் எழுச்சி வரலாறு

இ. நாகராசா

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

கல்தோன்றி மண் தோன்றிய காலத்தே முன்தோன்றி மூத்த குடியாகி முதல் மொழியாளராகி முதற் சமயத்தவராகி முதல் நாகரீகராகி ஆண்ட சாதியாய், அகிலமெலாம் தெரிந்த சாதியாய் கடலெலாம் கப்பல் ஓட்டி உலக நாடெல்லாம் தொடர்பு கொண்ட இனமாய் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற இனமாய் வாழ்ந்த தமிழர் இன்று ஆளப்படுவோராய் நாடற்றவராய் நலம் பல கெட்டவராய் வாழ வழியற்றவராய் ஆருக்கோ வாழ்பவராய் நாதியற்ற சமுதாயமாய் வந்ததற்குக் காரணங்கள் என்ன என்பதைப் படித்துக் கேட்டுப் பார்த்து அறிந்தவற்றுள் சிலதை சில கட்டுரைகளால் உங்கள் முன் வைத்துள்ளேன்.

அடியேன் அறிவுக்கெட்டியவரை எழுதியுள்ளேன். குற்றம் களைந்து குணங்கண்டு அறிய வேண்டியது, உங்கள் கடமையில் விடுகிறேன்.

மாற்றாரால் துண்டாக்கப்பட்டதால் ஒன்றுமில்லையாகினோம் என்பதை அறிந்து இனியாவது துண்டுபடாது ஒன்றுபட்டு ஒத்துழைத்து வீறுகொண்ட வீரதீரராகிச் சுதந்திரம் அடைந்து வளம் பல கண்டு நலம்பல காணும் தமிழ் ஈழம் பெற்று ஆளும் சாதியாகிப் புலிக்கொடியேற்றி உலகம் போற்றும் புகழுடன் வாழ்வோம். இதுவே என் இதயத்துடிப்பு

வணக்கம்

இ. நாகராசா
யாழ். வேலணையூரான்
தமிழ் ஈழம்



படிப்பகம்

www.padippakam.com

# எம் இன்றைய நிலை

தமிழன் நிலை இன்று இங்குமில்லை அங்குமில்லை எங்குமில்லை. நாடில்லாது நாடெல்லாம் அலைகிறோம். ஆரோ வாழ உழைத்து மாழுகிறோம். தாழுகிறோம். இன்னும் புத்தி வரவில்லையே. ஒன்றுபட்டு ஒத்துழைக்க வழியில்லையே. பாழ் பட்ட சாதி தான்வாழப்பார்த்து இனத்தைக் காட்டிக் கொடுத்து ஆயிரம் ஆயிரமாண்டாய் அழிந்துபோகின்றோமே. இன்னும் புத்திவரவில்லையே. ஒன்றுபட்டால் நமக்கு நிகருண்டா. ஓர் இஞ்சி நிலம் நமக்கின்றிருக்கா? மணிகட்டிக் கொடிகட்டிச் செங்கோல் ஓச்சித் தரணி ஆண்ட முடிமன்னர் பரம்பரை இன்று மாடாய் உழைத்து ஆரோ வாழ ஓடாய்ப்போகிறானே. அதிகாரம் பேசினால் கேட்டால் அவ்வந் நாட்டார் இவன் எந்நாட்டானென உடனே பிடித்தனுப்புகின்றாரே. சிந்தனை செய். இனமின்றி இடமின்றி ஆருக்காலும் உழைக்க வேண்டியது தானா. மாண்டு மடிய வேண்டியது தானா. மண்டியிட்டுக் கைகட்டி வாய் பொத்தி மாழ வேண்டியதுதானா. இனமின்றி மொழியின்றி மதமின்றி நிறமின்றி கலப்படமாகிக் கரையவேண்டியதுதானா. குற்றேவல் செய்து கூலிவேண்டிக் கீழாகிப் போகலாமா. உரிமையோடு நமக்கென்றொரு நாடிருக்கா. இடமின்றிப் போனா மணமின்றிப் போமே. முதலான மொழியர் முதலான நாகரீகர் முதலான சமயத்தார் உலகெலாம் கப்பல் ஓட்டித் தரணியாண்டவர் இமயம் சென்று கல்லெடுத்துக் கண்ணகிக்குக் கோவில் கட்டியவன் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்துப் புகழ் படைத்துத் தரணியாண்ட மன்னர் பரம்பரை ஏன் இப்படி ஆகினான். யாரால் ஆகினான். இன்னும் மதியில்லையா. அறியு மறிவில்லையா. வரலாறு இன்னும் தெரியவில்லையா. இரத்தத்தோடு ஊறவைத்து விட்ட விடயங்களைத் தெரியவில்லையா. இன்னும் எங்களை இந்நிலைக்காக்கியவருக்காக உழைத்து அவர்கள் வாழ வைத்து நாம் மாழலாமா. சாகலாமா, நாடின்றி அலையலாமா இனமின்றிக் கரையலாமா. நம்நாட்டை நம் நிலத்தை நம் மண்ணை ஆரோ ஆளப் பார்த்துக் கொண்டிருக்கலாமா. எட்டப்பன் கூட்டம் இன்னுமிருக்கலாமா. அவர்களைப் பூண்டோடு அழித்து விட்டு நாடெலாம் இருக்கும் தமிழரெல்லாம் ஒன்றுபட்டால் நாடாகுமே. நிச்சயம் நாடாகுமே. நமக்கு நிகர் நாமே. சிந்தித்துச் செயலாற்றுவோம். வீர வேங்கைகளாவோம். வெற்றி காட்டுவோம். புலிக்கொடி நாட்டுவோம். தமிழன் குல தெய்வமான முருகன் எல்லாம் தந்திடுவார். வாழ்க ஈழம்.



படிப்பகம்

www.padippakam.com

# சமுதாயத்தில் கழிய வேண்டிய களிம்புகள்

பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் இனம் தோன்றி அகில உலகெங்கும் பரவிப் பல பல நாடுகளிலே பல பல விதங்களாக முன்னேறியும், முன்னேறாமலும், வாழ்கிறார்கள். ஆள்வோராகவும் ஆளப்படுவோராகவும் வாழ்கிறார்கள்.

அன்றுமுதல் இன்றுவரை மனிதனை மனிதன் ஏமாற்றியே வாழுகிறான். விவேகமுடையோர் வீரமுடையோர் தமக்குக்கீழ்ப்பட்டோரைத் தமக்காக்கி அவர்தம் உழைப்பை உறிஞ்சியே வாழுகின்றனர். நீதி நியாயங்கூட அவர்களுக்காகவே பலனளிக்கக்கூடிய சமுதாய ஒழுங்குகளை ஆக்கிப்பழக்கி அவற்றைக்கீழான சமுதாயத்தில் இரத்தத்தோடு ஊறப்பண்ணிவிட்டார்கள்.

நம் சமுதாயச் சீர்கேடுகளை எண்ணிப் புரட்சியாக்கிய சமுதாயச்சிற்பி திரு.ஈ.வே.இராமசாமிப்பெரியார் அவர்வழி தமிழக ஒளிவிளக்கு பேரறிஞர் அண்ணா, மறைமலை அடிகள் பாரதியார் இன்னும்பல அறிஞர்கள் தோன்றித்தோன்றித் தொடராகச்சீர்திருத்தம் பேசியும் எழுதியும் வந்தபோதிலும் நம் தமிழ் மக்கள் நிலை மன நிலை எள்ளளவேனும் மாற்றமடையவில்லை.

முன் தோன்றிய மூத்தகுடி எனப்போற்றிப்புகழ்ந்து பேசப்படுகின்ற நம் தமிழ்ச்சமுதாயம் முன்னாகவே முன் ஒரு காலம் இருந்தது. தமிழன் வாழ்வின் பெருந்தன்மையை வடித்துக்கட்டி அவன் வாழ்வின் சட்டப் புத்தகம் போலப் பெட்டகமாக்கித்தந்தார் வள்ளுவப்பெருமான். அவர் காலத்திலும் முன்னாகப் பல ஆயிரமாண்டுகளில் தனி நாகரீகராக இருந்த படியாலேயே இந்நூல் தமிழன் வாழ்வின் மூலமாகி இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட தமிழன் இப்போ எப்படி இப்படி வந்தான் என்று ஆராய வேண்டியது நம் கடமை. "யாதும் ஊரே யாவருங்கேளிர்" என்றும், தீதும் நன்றும் பிறர்தரவாரா என்றும், சாதி இரண்டொழிய வேறில்லை என்றும், யாவரும் சமம் என்று புறாவுக்குத்தசை வெட்டி ஈய்ந்த சிபி, மகனை ஆவின்கன்றுக்காகத் தேர்ச்சில்லிடைவிட்ட சோழமன்னன் முல்லைக்கொடிக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் ஈந்த பாரி இன்னோர் வாழ்ந்த



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயம். அரசனெவ்வழி குடிகளுமவ்வழி. தமிழ்ச் சமுதாயம் அன்று நன்றாகவே இருந்தது.

ஆரியர் வந்தனர், அடுத்து மொகலாயர் வந்தனர் அடுத்து மேலை நாட்டினர் அடுக்கடுக்காக வந்தனர். சீரான சமுதாயம் சீர்கெட்டுச்சீரழிந்து உயர்வு தாழ்வு ஏற்பட்டுக்கீழ் மேலாகிச்சாதி பேதங்களாகி ஆண்டார் என்றும் அடிமை என்றுமாகிப் பரம்பரைக் கொத்தடிமையாகித் தடம்புரண்டு தறிகெட்டு உழைப்போர் கூட்டமாகி நீ அங்கே நில் நான் இங்கே நிற்கிறேன் என்றாக்கித் தாழ்வு மனப் பான்மையை வளர்த்துப் பொருளாதாரத்தைச் சிதைத்துத் தாமதை அநுபவிக்க எம் தமிழ் இனத்தை எல்லா விதங்களிலும் தமக்காக்கினர்.

கப்பல் ஓட்டிய தமிழன் கடல் வாணிகம் கண்ட தமிழன். உரோமாபுரிவரை சென்ற தமிழன். அவுஸ்திரேலியாக்கண்டம்வரை ஆபிரிக்காக்கண்டம்வரை சிறப்பொடு தொடர்பு கண்ட தமிழன். குமரிக்கண்டம் அவன் பதில் சொல்லும்.

இப்படியான சமுதாயத்திலே அந்நியரால் களிம்புகள் சேர்ந்தன. ஒன்று பிழைத்தால் ஒன்பது பிழைக்கும். பாரிய இயந்திரமொன்றில் பல் ஒன்று உடைந்தால் இயந்திரம் பாழாகும் களிம்புகள் ஒன்றாக ஒன்றாகப் பலவாகக்களிம்புகள் தமிழன் சமுதாயத்திலே வேரூன்றி ஏன் இரத்தத்தோடு சேர்ந்துவிட்டது.

இன்று நம் தமிழ்ச்சமுதாயத்திலே சவப்பெட்டியில் வைத்து மண்ணுட்புதைக்க வேண்டிய, சாவுமணி அடிக்க வேண்டிய எத்தனை விடயங்கள். இவையெல்லாம் நாம் சிந்திக்கவேண்டும் செயற்படுத்தவேண்டும்.

ஒன்றா இரண்டா பாருங்கள் சாதிப்பாகு பாடு அதனால் ஏற்படும் சாதிச்சண்டைகள் பெண்களின் அடிமைத்தனம், விதவை நிலை, பால்யவிவாகம், சீதனம், சமய சம்பந்தமான சடங்குகள், உடன்கட்டையேறுதல், இன்னோரன்ன பாழான பழக்க வழக்கங்களுக்காளாகி ஒற்றுமை குறைந்து பெலவீனமாக்கப்பட்டு வந்தார் வரத்தாரின் ஆளுமைக்குட்பட்டுத் தங்களுக்காகத் தங்கள் பிற்சந்ததியாரும் மிக இலேசாக வாழ்வதற்கேற்ற நிலையை நம் இனத்தில் ஆக்கி வெற்றியுங்கண்டனர். நம்மவர் பொருளாதாரம் குறைந்து தரம் குறைந்ததால் எம் இனத்தைத் தாங்கள் பிடித்த வேறு பல நாடுகளிலும் தம் பொருளாதார முன்னேற்றத்துக்காகக் கூலிப்பட்டாளமாக்கிக் கொண்டும் போயினர்.

நம் தமிழ் மொழி சங்கம் வைத்து வளர்த்த மொழி. இறைவன் இலக்கணம் அமைத்த மொழி முதற் கண்டமொழி. சகல கலைகளும் உள்ள மொழி இம் மொழியைக் கூடக் கீழ்ப் படுத்தித் தம் மொழிகளில் நிர்வாகம் செய்தனர். நம் மொழி மங்கச் செய்தனர். தம் மொழியை நம்மேலாக்கினர். கடவுளுக்கும் கூடப்பூசனை செய்ய வேறுமொழி. நாம் வெளியே அவர் உள்ளே பூசை. நாம் கீழே அவர்கள் மேலே நம் கை கீழே அவர் கை மேலே நம்மை அறியாமல் கை எடுத்து அவர்களைக் கும்பிடவேண்டிய நிலைக்குப் பழக்கப்பட்டு விட்டோம். பட்டினி கிடந்து பணந்தேடி வீடு சென்று அழைத்து வந்து சாட்டாங்க வணக்கம் செய்து கொடுக்கவும் பழக்கி விட்டனர். சமுதாயமே சிந்தித்துப் பாருங்கள் இவைகள் திருந்த வேண்டும். நம்மொழியில் எல்லாம் ஆக வேண்டும். கோவில் பெயரைச் சாட்டி நடக்கும் ஆடம்பர வேடிக்கைகள் நீங்கவேண்டும், பெருச்சாளிகள் ஆட்சி நீங்கவேண்டும். மேலாகச்செலவு செய்யும்



படிப்பகம்

www.padippakam.com

பணம் நம் சமுதாய முன்னேற்ற அபிவிருத்திகளுக்குச் செலவிடலாம் அல்லவா சிந்தியுங்கள். கடவுள் இல்லை என்று சொல்ல வரவில்லை. அவன் செயலே எல்லாம். ஆனால் செயல்கள் திருத்தப்படவேண்டும் என்பதே என் கொள்கை.

கோட்டிலே நீதி கேட்க வேறுமொழி. நம்மவர் முன்னே இம்மொழியிலா நீதி கேட்டனர். இல்லை. கணவனை இழந்த கண்ணகி மன்னன் முன்னே சென்று மனுநீதி தவறிய மன்னா உடனே பதில் சொல் என்று தமிழ் மொழியால் தான் கேட்டார். இந்நிலை மாறவேண்டும். நம்மொழிதான் நம்மை ஆளவேண்டும் நமக்கென நாடுவேண்டும். அதைப்போற்றித் தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அதற்கொரு குணமுண்டு என்ற நிலையைக் காட்டித் தமிழன் உலகம் போற்றும் உத்தம இனமாக வேண்டும்.

சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம். என்றார் பாரதியார். பிறக்கும் பொழுது எல்லாக் குழந்தையும் ஒன்றே. ஏனைய இந்தப்பாகுபாடு. முன்னோர் தமக்காகத்தான் சுகமாக வாழ்வதற்காக ஆக்கிய பாகுபாடுகளை இன்னமும் நாம் போற்றலாமா சிந்தியுங்கள்.

இந்த நிலை கூடிய விரைவிலே நீங்கவேண்டும். சாதி என்ற சொல்லுக்கே இடம்மில்லாமல் போகவேண்டும். சமுதாயம் போற்றி வாழப் பழக வேண்டும். உயர்வு தாழ்வு மாறவேண்டும். ஒரே இனமாகவேண்டும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் இனத்தை, நாட்டை முன்னேற்றவேண்டும். ஆண்டான் என்றும் அடிமை என்றும் உள்ள நிலை மாறவேண்டும் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற நிலை ஆகவேண்டும். ஈவாருமில்லை இருப்பாருமில்லை என்றநிலை ஆகவேண்டும். பட்டினி பறக்கவேண்டும். இவையெலாம் ஆகும் வெற்றி தரும், சாதி ஒழிந்தால்.

பெண்களை ஆண்களின் அடிமைகள் என்ற எண்ணம் தொலைய வேண்டும். இருவரும் சமநிலை என்ற மனப்பழக்கம் வரவேண்டும். இருவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும். பழைய சம்பிரதாய பழக்க வழக்கங்களுக்குச் சாவு மணி அடிக்க வேண்டும். புதியதோர் சமுதாயம் காணவேண்டும். சமனாகப்போராடி நாட்டைப் பெற சுதந்திரம் பெறப் பாடுபடும் இன இளநங்கையரைப் பாராட்டுகிறேன். பெண்கள் முன்னேறிவிட்டனர் என ஆனந்தமடைகிறேன். நாட்டுக்காக உயிர்நீத்து வீரதீர சாகசங்களுக்காகப் பாராட்டுகிறேன். பெண்கள் அடிமை நீங்கிவிட்டார்கள். உலகுக்கு முன்னோடியாக முதலாக முன்னேறிவிட்டார்களென்று பெருமைப்படுகிறேன். பெண்கள் அடிமை எம் இனத்தில் தொலைந்துவிட்டது. இப்பெருமை எங்கள் பெருந்தலைவர் திரு. பிரபாகரன் அவர்களைச்சாரும். அவர்களுக்கு எம் இனம் துதி செய்யும்.

எங்களைக் கெடுத்த எம் இனத்தைப் பாழ் படுத்திய சீதனம். இதனால் நம் இனம் பட்ட துன்பம் சொல்லும் தர மன்று இதை நன்றாயறிந்து, வாழ முடியாத பொருளிழந்த நங்கையர் படும் துன்பமறிந்து, இதனால் கீழ் மேலாகின்ற நிலை அறிந்து இதனாலாகின்ற சமுதாயச்சீர்கேடுகளை எல்லாம் அறிந்து எம் தலைவன் 1.09.95ல் சட்டமாகக் கொண்டு வந்தார். பாராட்ட வேண்டும். பலனடைய நாம் ஒத்துழைக்கவேண்டும். நாம் எல்லோரும் நம்பெருந்தலைவனைப் பாராட்டி வணங்கவேண்டும்.

முதலாளி தொழிலாளி என்ற நிலை மாறவேண்டும். உழைப்பவனுக்கே ஊதியம்



படிப்பகம்

www.padippakam.com

ஆகவேண்டும். நெற்றி வியர்வை நிலத்திற்சிந்த உழைப்பவன் பட்டினியாற் சாகிறான் ஓட்டைக்குடிசையில் இருக்கிறான். உண்ண உணவில்லை உடுக்க உடையில்லை இருக்கவீடில்லை படுக்கப் பாயில்லை அந்தோ பரிதாபம். அவன் உழைப்பு அங்கே மாடிவீட்டிலே குடி போதையிலே வயிறு புடைக்க உண்டு பால்பாழம் அருந்திப் பஞ்சணை மெத்தையிலே கட்டியணைத்து முத்த மிட்டுத் தூங்கையிலே பலனாகிறதே. நீதியா நியாயமா சிந்தியுங்கள். தொழிலாளி அவன் பாட்டாளி உழைக்கிறான் யாரோ அநுபவிக்கிறான். குதிரைப்பந்தயமும் ஓடுகிறான். இந்த நிலை மாறவேண்டும். பொருளாதரம் குவியாது ஒருபகுதிமேலோர் அநுபவியாது எல்லோரும் சமசீராய் அநுபவிக்க வழியாகவேண்டும். தவறான நிகழ்ச்சிகள் நிகழாது நல்ல சமுதாயமாகும்.

சமுதாயத்திலே விதவையானோர் மறுமணம் செய்ய மறுமலர்ச்சிவேண்டும். வீட்டில் மறைவிடத்தில் ஒதுக்கிவைக்கின்ற நிலை மாறவேண்டும். மக்கள் சமுதாயத்தில் கொஞ்சமும் கவலையின்றிப் பழகக் கூடிய நிலையாகவேண்டும் அவர்நிலை உயரவேண்டும். மறுமணம் செய்யச் சமுதாயம் முன்வரவேண்டும். பார்க்கப்படாத தாய்தந்தையர் வயதுவந்தோர்,கஷ்டப்பட்டோர் ஊனமடைந்தோர் தீரா நோயுடையோர், கயவர்களால் வஞ்சிக்கப்பட்டுக் கர்ப்பமானோர் அநாதைத் சிறுவர்கள் இவர்களையெல்லாம் நாம் நன்றாகக் கவனிக்கக்கூடிய ஸ்தாபனங்கள் நம் மத்தியிலே ஆகவேண்டும். அவர்கள் துன்பம் நீங்கவேண்டும்.

சமுதாய மக்கள் மத்தியிலே நான் என்ற எண்ணம் வளர்ந்து சுயநலமடைந்து போலிகளாகி வெளிவேடம் பூண்டு ஆசாடபூதிகளாகிப் பதவி பட்டங்களுக்காகத்தாமும் தம் சந்ததியும் வாழ்ந்தாற் போதுமென்ற நிலையாகி இனத்தைக் காட்டிக்கொடுக்கின்ற கயவர் கூட்டத்துக்குத் களையடி அடிக்கவேண்டும். சமுதாயம், இப்படிப்பட்டோரைச் சமுதாயம் தூக்கிவீசவேண்டும். நாம் என்ற எண்ணம் மலரவேண்டும் அது வளரவேண்டும். எல்லோரும் வாழவேண்டும். ஒன்று படவேண்டும். துண்டுபடாது ஒன்றுபட்டு வெற்றி பல காணவேண்டும்.

நம் சமுதாயத்திலே தாம் மாத்திரம் வாழ வல்லோரால் மூளை உள்ளோரால் ஆக்கப்பட்ட மூட நம்பிக்கைகள் நீங்கவேண்டும்.

உதாரணங்களாகச் சூனியம் செய்தல் சூனியம் எடுத்தல் ஆடு,கோழி பலியிடுதல். வசியம் செய்தல். கழிப்புக்கழித்தல். சாமி ஆடுதல். சாமிபோல் நடித்தல், சாத்திரம் சொல்லுதல். நேர்த்தி செய்தல். முழிவிசேடம் பார்த்தல் ஆண்டான் அடிமை, பார்த்தல் வழிவழியாகத் தொண்டு செய்தல், அவர் பெரியார் இவர் சிறியார் என நினைத்தால் பிராமணரைப் பார்த்துச் சாமியார் சொன்னாச் சரியாகும் என நினைத்தல். தும்முதல், காகம்கரைதல் பல்லிசொல்லுதல் இப்படியான இன்னும் எத்தனையோ மூடநம்பிக்கைகள் நம் சமுதாயத்திலே இரத்த ஊறலாக நம்பிக்கையடைந்து நாமே பாழாகின்றோம். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினாலே என்றாங்கு இவைகளெலாம் களையவேண்டும் புதிய தரம் பட்ட திறமையான சமுதாயமாகவேண்டும்.

காரியாலங்களில் கைலஞ்சம் தாண்டவமாடுகின்றன காவற்காரன் முதல் காரியதரிசிவரை தெட்சணை கொடுத்தேயாகவேண்டும். வேலை வாய்ப்புக்கள் பின் கதவால் வழங்கப்படுகிறது திறமைசாலிகள் முன் கதவால் போகடிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். திறமைசாலி தெரிபடவேண்டும். திறம்படநாட்டு நிர்வாகம்



படிப்பகம்

www.padippakam.com

நடைபெறவெண்டும்.

இன்று நம் மக்கள் நிலை கண்டும் காக்கைவன்னியன் கூட்டம் ஆளும் வர்க்கத்தாரோடு காட்டிக்கொடுக்கும் கயவராக இருக்கிறாரே. தமிழ்ப் பெயரைத் தாங்குகின்றாரே முந்தானையைப் பிடிக்கின்றாரே. தமிழ் மண்ணில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகின்றதே. இன்னும் இவர் மனம் திருந்தவில்லையே. பாராளுமன்றமே பாக்கியமென்றிருக்கிறாரே. இவர்களை ஆட்சியாளர் நம்புவார்களா மதிப்பார்களா. அந்தோ பரிதாபம்.

நம் சமுதாயம் இக்கேதியடைந்த நிலையிற் சில களிம்புகள் பற்றிக்கூறினேன். இக்களிம்புகள் களையப்படவேண்டும். புதிய சிந்தனை பிறக்கவேண்டும். ஊறிப்போனவை அகலவேண்டும். பழைமைவாதிகள் புதுமையாகவேண்டும். மக்கள் மனங்களிலே புரட்சிகரமான புதிய எண்ணங்கள் பிறக்கவேண்டும் உண்மை நீதி நிலைக்கவேண்டும். மக்கள் சுதந்தரமாகப்பேச எழுத நடமாட நிலையாகவேண்டும்.

ஆசாட பூத்தனங்களும், சாதிப்பாகுபாடுகளும், பெண் அடிமைத்தனமும் காட்டிக்கொடுப்புகளும், நம்மைப்பிடித்த இரத்த ஊறலோடு சேர்ந்த களிம்புகளும் களையப்பட வேண்டும் தலைவன் தலைமையில் ஒன்றுபட்டு உறுதிபூண்டு போராடி இரத்த ஆற்றிலே நீந்தி நாடு பெறுவோம். புதிய நிர்வாகம் செய்வோம். வெற்றி நமதே. ஆதரவுடன் தலைவன் வாழ்க. புலி வாழ்க புலிக்கொடி வாழ்க.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழன் வருடப்பிறப்பு

கல்தோன்றி மண்தோன்றிய காலத்தே முன்தோன்றி மூத்தகுடியாகி முதல் நாகரீகராகி முதல்மொழியாளராகி முதல் மதத்தவராகி வாழ்ந்த தமிழன் தனக்கெனத் தனித்துவமான முறையில் வாழ்வதற்கு வழியமைத்து நதிக்கரையை நாடிப் பயிர்த்தொழிலையாக்கிப் படிப்படியாய் முதிர்ச்சியடைந்து அகரமுதலாக எழுத்தமைத்துச் சிந்தித்துத் தாமினியர் எனக் கருத்தமையத் தம் இனம் தமிழர் எனப் பெயரமைத்து, இனியவர் பேசும் மொழி இனியமொழி எனக் கருத்தமையத் தம் மொழி தமிழ்மொழி எனப் பெயரமைத்து நன்றாக்கி நலம் படவாழ்ந்தனர்.

ஒன்றுபட்டு ஒற்றுமையாகிக் கூடி வாழ்ந்து பயிர்த் தொழில் செய்து, ஓய்வு நேரமதிகமாக அதிகமாகச் சிந்தித்துச் செயலாற்றிக் கலைகளெலாம் வளர்த்தனர்.

தமிழ் மொழி வளமடைந்து தன்னகத்தே பலபல கலைகளையுடையதாகி வளர்ச்சியடைந்து, தனக்கெனத் தமிழன் தனியான கலாச்சாரம் அமைத்துச் சீருடன் சிறப்பாக வாழ்ந்தான்.

தமிழரின் முன்னேற்ற ஆரம்பம் பயிர்த்தொழில் ஆனதால் அதற்குதவியான மூலகாரணர் சூரியன் எனக்கண்டான். வணங்கினான் நன்றி பாராட்டினான். கற்கடகரேகையில் சூரியன் வடக்கிலிருந்து சமரேகை நோக்கி நகர்ந்து சமரேகைக்குச் சமமாகிச் சமரேகையை விட்டு நகரும்போது தான் தமிழன் தனக்கு மழைதரும் மாரிகால மெனக்கண்டு பயிர்த்தொழிலை ஆரம்பித்தான். பல் இனப் பயிர்களை விதைத்துப் பலனடைந்தான். சூரியன் மகரரேகைக்குச் சமாகித் தெற்கிருந்து வடக்காகி நகர்வது போல ஆகும் போது பயிர்களெல்லாம் விளைவடைந்து பலனடையும் போது சூரியனை நன்றி பாராட்டவே தைப் பொங்கல் பொங்கினான். விவசாயத் தொழிலுக்காதாரமான ஆவினத்தைப் பாராட்டி நன்றி காட்டவே அடுத்தநாள் பட்டிப்பொங்கல் பொங்கினான். மகிழ்ச்சியடைந்தான்.

சூரியன் தெற்கிலிருந்து பூமத்திய ரேகையையடைந்து தமிழன் வதிவிடத்துசாமாகி வடக்கு நோக்கி கர்க்கடக ரேகைக்கு நகரும் போலாகித்தெரியும் போதுதான் தமிழர் வீடெல்லாம் பூவகை, இலைவகை, காய்வகை, கனிவகை, கிழங்குவகை, தானியவகை, நிரம்பித் தமிழன் ஆனந்த மடைந்து புதுவாழ்வெனப் புது வருடமெனச் சித்திரையைத் தெரிந்தெடுத்தான் சிந்தித்தால் சித்திரமாயிருக்கும்.

தமிழன் வருடப்பிறப்பென்றால் கொண்டாட்டம் தான் கொடுக்கல் வாங்கல்தான் ஆனந்தம்தான். நாடெலாம் ஒரே குதூகலம். ஓரே அக்கணிப்பு. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உண்மை வாழ்வேதமிழன் வாழ்வு.

இளவேனில் சிரித்து வரத்தென்றலும் சிறிதாடிவர வீடு நிரம்பியதைக் கொடுப்பார்க்குக் கொடுத்து, இடுவார்க்கு இட்டு இரப்பார்க்கு ஈந்து, இறைவனை வணங்கிச் சுற்றத்தார் சூழப் பெருவிருந்திட்டு வருடப் பிறப்பெனப்புது வாழ் வெனப் புதுக்கிய மனையிலே புத்தாடைகளணிந்து, மனத்திலேயுள்ள மாசு மறுலெலாம் தூசு தட்டிப் புனிதமாக்கிக் கொண்டாட்டங்களை முன் வருடத்திய மாறான பிணக்கான பிரிவான நினைவெலாம் மறந்து புதுவாழ் வமைக்கின்றான்.



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளரெல்லாம் வாழ வழியமைத்து அவர்தம் பங்கைக் கொடுத்து அவர்களை வாழவைக்கிறான். வருடப்பிறப்பிலிருந்து மறு வருடப்பிறப்புவரையுள்ள காலத்தை வகுத்து ஆய்ந்து மாசி பங்குனி பின்பனி சித்திரை வைகாசி இளவேனில் ஆனி ஆடி முதுவேனில் என்றும் இவ்வாறான பின்பனி இளவேனில், முதுவேனில் மூன்றும் சேர்ந்த ஆறுமாதம் கோடைகாலம் என்றும், ஆவணி புரட்டாதி கார்காலம், ஐப்பசி, கார்த்திகை, கூதிர்காலம், மார்கழி, தை, முன்பனி என்றும், இவ்வாறான கார்காலம் கூதிர்காலம், முன்பனி மூன்றும் சேர்ந்த ஆறு மாதம் மாரிகாலம் எனவும் வகுத்தனர்.

மாரியிலேயே தேடிக்குவிர்ந்த பொருளைக்கோடையிலே வருடப்பிறப்பிலிருந்து கொடுத்தே வாழ்ந்தான். முடியும்வரை கொடுத்தான். இளவேனில் முதுவேனிலாகிய காலங்களிலே பெருவிழாக்கள் எடுத்து இயல் இசை நாடகம் வளர்த்தான்.

கடவுள் விழா, மணவிழா, பூப்படையும் விழா, சங்கீத விழா, நாடகவிழா, இன்னோரன்ன பலவித விழாக்களை கொண்டாடி சமுதாயம் மகிழ்ச்சியடையக் கலைஞரெல்லாம் உயர்ச்சியடைய வாழ்ந்தான். பொருள்ளெல்லாம் பெட்டியிற்பூட்டாது பதுக்காது என்றும் பொதுவுடைமை வாதியாகவே தமிழன் வாழ்ந்தான். புதுவருடம் பிறந்தது அடுத்த புதுவருடம் வரும்வரை கொண்டாட்டங்கள்தான்.

வினாடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், பின்பனி, இளவேனில், முதுவேனில், கோடை, கார்காலம், கூதிர்காலம், முன்பனி, மாரி என்றெல்லாம் கணித்து வருடம் கண்டான். வருடாவருடம் காலம் கணித்து அவ்வக்காலத்து அவ்வவ்வேலைகள் செய்து வருடப்பிறப்பை அளவிலா ஆசையோடு கொண்டாடியே வந்தான் தமிழன்.

கோயில் கண்டான் கோத்திரம் கண்டான் குலம் கண்டான் சாத்திரம் கண்டான் அஞ்ஞான மெஞ்ஞான விஞ்ஞானம் கண்டான்ஈ ஊறுபட்டு வேறுபட்டுக் கூறுபடாது தாறுமாறாது, எல்லாம் ஒன்றெனக் கண்டு ஒருவரை ஒருவர் மதித்து ஒற்றுமையாக வாழ்ந்தனர். பஞ்சாங்கம் அமைத்தனர், அறுபது ஆண்டெனவகுத்து அது திரும்பத் திரும்ப ஊழிவரை வருமென வகுத்தனர்.

அன்பர்களே யுவ ஆண்டு முடியப் போகிறது தாது ஆண்டு வருகிறது. நம் கலாசாரத்தை மறவாது வருடப்பிறப்பைக் ஆண்டாண்டாய் கொண்டாடி மகிழுங்கள்.

புலம் பெயர்ந்த நாம் இன்னும் நன்றாகப் பேணிப் போற்றி நம் இளைய சமுதாயத்தை நம் கலாசாரத்தை மறவாது வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தைக் கொண்டாடச் செய்யுங்கள்.

காய்த்த மரமே கல்லடிவாங்கும் என்பது போல காலத்தின் கோலத்தால் காலங்காலமாய் ஆண்டாண்டாய் நூற்றாண்டு நூற்றாண்டாய், ஆயிரம் ஆயிரமாண்டாய், பல்லாயிரமாண்டாய் நம்மினம், நம்மொழி, நம்மதம், நம் கலாசாரத்திற்கு வளர்ச்சிக்கும் எதிர்ப்புக்கள் இருந்தே வருகின்றன.

இதை நினைத்து நம்மை நாம் போற்றி எனியாவது வீறு கொண்டு வெற்றிகண்ட ஒற்றுமை பூண்ட ஒருபேரினமாக வாழ வழிவகுத்து வாழவேண்டுமென வேண்டுகிறேன்.



படிப்பகம்

# தமிழன் கலாச்சாரம்

தமிழன் முன்தோன்றி முன் நாகரீகமடைந்து தனக்கெனத் தனித்துவமான கலாச்சாரம் அமைத்து ஏனையோர் அன்றும் இன்றும் என்றும் பின்பற்றக் கூடிய முறையில் வாழ்ந்தான்.

மத்தியாசியா இருந்து கைபர் கணவாய் வழியாக இந்து நதிக் கரையடைந்து குடியேறி நவநாகரீகராகி வாழ்ந்தனர். இதனையே இந்து நாகரீகமெனப் பல்கலைக்கழகங்களிலே பட்டப்படிப்புக்காக ஆராய்ச்சி செய்கின்றனர்.

தமிழர் பட்ட, தொட்ட கட்டிய பக்குவங்களை மொகஞ்சதாரோ, கரப்பா எனுமிடங்களில் அகழ்வாராய்ச்சியாளர் அகழ்ந்து ஆய்ந்து தமிழரின் பண்பாடு கலாசாரம் என்பவற்றை நிலைநிறுத்தினர்.

தமிழர் கண்ட உலகைக் கொண்டு காணாத கடவுளைக் கண்டு கடவுள் உருவம் அமைத்து கற்கோயில் கட்டி நாள் வீதம் விளக்கேற்றிப் பூசை செய்து பூரண பலனடைந்தான். இந்து நதி மக்கள், இந்துமக்கள் இந்து மக்கள் சமயம் இந்துசமயம் எனப்பெயரமைத்து உலகிலே முதற்சமயமாகி முதல் இனத்தவராகி முன்னேறிவாழ்ந்தனர்.

ஓய்வுநேரம் அதிகமாகக் கூடி ஒன்று பட்டு ஒற்றுமையடைந்து மொழிவளர்த்து கலைகள் கண்டான். கட்டிடங்கள் கண்டான். சோதிடம் வைத்தியம் மாந்திரீகம், விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம், குடியியல் அரசியல் சமூகவியல், வரலாற்றியல் இன்னோரன்ன எல்லாம் கண்டு அவைகளைப் பயன்படுத்தி ஒப்பாரில்லாது உல்லாசமாய் யாதும் ஊரே யாவருங்கேளிர் எனவாழ்ந்தான். நான் என்ற சொல்லுக்கிடமில்லாது நாங்கள் என்றே வாழ்ந்தார்கள்.

வீடுகள் கோவில்கள் மடங்கள் சத்திரங்கள் பாடசாலைகள், கலைமுறைப்படி காரணகாரிய கலாச்சார வரலாறுகளை அறியக்கூடிய, பின் சந்ததி தெரியக் கூடியவாறு உருவங்கள் அமைத்து வர்ணந்தீட்டிக் காலம் காலமாய் நிலைக்கக் கூடியவாறு அமைத்தனர். கலைவிழா சங்கீதவிழா, நாடகவிழா, பரதம் நாட்டியம் அமைத்துச் சமூகம் ஆனந்தமாக வாழவகுத்து வாழ்ந்தான். ஓவியம்தீட்டினான். காவியம் ஆக்கினான், இலக்கணம் அமைத்தான். சட்டங்கள் செய்தான். மன்றங்கள் அமைத்தான். நீதிநிலை நாட்டினான். மணிகட்டிக்கொடிகட்டிக் கோலோச்சினான். ஆவின் கன்றுக்காகத் தன் மகனைத் தேர்க்காலிடை போட்டான். புறாவுக்காகத் தசையிட்டான். மயிலுக்குப் போர்வை போர்த்தினான். முல்லைக்குத் தேர்விட்டான்.

www.padippakam.com

தர்மம் இரக்கம், உண்மை, வன்மை, நீதி நேர்மை வீரம் முதலிய சீலங்கொண்ட கலாச்சாரங்கள் அமைந்த வாழ்க்கை வாழ்ந்தான்.

தன் சமயம் இந்துசமயம் அதன் அடையாளம் நீறு தன்வாழ்வுக்கு முன்னின்று வழிநடத்திய ஆவினை வணங்கி நன்றி பாராட்டி அதன் கோமயத்தை சொல்லப்பட்டதாய முறைப்படி நீறாக்கி ஆண்டவனுக்கிட்டுத் தானணியவேண்டிய இடமெலாம் குறியிட்டான். நெற்றி, பிடரி, தோள்முட்டு, முழங்கை மணிக்கை, விலா, நெஞ்சு இப்படிப் பிரதான உறுப்பெலாம் அணிந்து இறைவனை வணங்கி இன்றும் நன்றிக்காக இறைவனுக்கே ஆவின் கன்றை வாகனமாக்கி வணங்கி நின்றான்.

கோசலம் கோமயம் தயிர் நெய் பால் கலந்து பஞ்ச கௌவியம் எனப் பாராட்டிப் பாவித்தான். வீட்டை ஆதிகாலத்தே படைத்தல் காத்தல் அழித்தல் என்ற கருத்தமைய பிரமா விஷ்ணு உருத்திரன் என்றநிலையில் விளக்கம் காட்ட வீடு, தலைவாயல், அடுக்களை என அமைத்தான், வசதி கூடியவர் மூன்றையும் தொடுத்து நாற்சாராக்கி நடுவில் முற்றங்கண்டு வடிகாலமைத்துக் கட்டி வாழ்ந்தனர்.

ஆவின் சாணத்தை காலையில் வீட்டு முற்றம் பெருக்கித் தொற்று நீக்கியாகத் தெளித்தான்.

விடியுமுன் ஐந்து நாழிகைக்கு முன்னெழுந்து கழிவுப் பொருட்களை நீக்கிக்கால் முகம் சுத்தி செய்து கடவுளைக் கும்பிட்டான் சிவசிவா எனவும் முருகா எனவும் செபம் செய்தான். சக்தி செபம் பிள்ளையார் வணக்கம் செய்தான். உருவங்கள் பல என்றாலும் தெய்வம் ஒன்றெனக் கண்டான். கடவுள் எவ்வகை வணங்கினும் அவ்வகை வருவார். கடவுள் கடந்தவர் உருவ மற்றவர் உருவமுடையவர் அரு உருவமானவர். எண்ணியபடி வருபவர். அவனருளின்றி அணுவும் அசையாது இலை அசைவதும் ஈசன் செயல் என்றெலாம் அறிந்தவன் தமிழன். ஆடினான், பாடினான் தாளம் போட்டான், மத்தளம் அடித்தான், யாழ்வாசித்தான் மேளங்கொட்டினான் வீணை மீட்டினான் குழல் ஊதினான் இன்னுமின்னும் எத்தனை எத்தனை வாத்தியங்கள் கண்டான் பண்கண்டான், பரதங்கண்டான், அதற்கொரு காரணங்கண்டான் ஆட்டம் ஆடினான் ஒவ்வோர் அங்க அசைவிலும் ஒவ்வோர் அர்த்தங் கொண்டு ஆடினர். பாட்டமைத்தான். அதற்கமைய ஆடினர். பெண்கள் ஆடினர் ஆண்கள் ஆடினர். ஆண்டவன் சந்நிதியில் ஆடினர். ஆட்டமெலாங்கூடிப் பார்த்து அக மகிழ்ந்தனர் மக்கள். இறைவனை நம்பி பக்தி மேலோட்டமாகக் காவடியாட்டம் கண்டான், கரகமாடினான், துலாக்காவடி, மயிற்காவடி என்றெலாம் ஆடினர் பாடினர் பரவசமடைந்தனர். பக்திபூண்டனர். நாமும் ஒன்றெனக் கண்டனர். உயர்வு தாழ்வில்லை எனக் கொண்டனர்.

தோய்ந்து அங்கமெலாம் நீறு பூசிச் சந்தனமணிந்து விரதமிருந்து கோவில்வந்து தூய மனத்துடன் ஆண்கள் அட்டாங்கவணக்கம் பெண்கள் பஞ்சாங்க வணக்கம் செய்து உள்வீதி புறவீதி உருண்டு, குனிந்து வணங்கி இறைவனை வேண்டினர். உடல்நிலை உறுப்பெலாம் திடப்பட அப்பியாசமாயுமிருக்கலாம். கோயில்கள் வீதிகளருகிலே யோகாசன பக்தர்கள் ஒருபுறம், பாடுவார் ஒருபுறம் கூடுவார் ஒருபுறம், வேண்டுவார் ஒர்புறம், கூட்டுப்பிரார்த்தனை செய்வார் ஒருபுறம், எங்கும் பூசையொலி நாத ஒலி தாளஒலி, மேளஒலி அரோகரா என்ற சத்தம் இவையெலாம் தமிழன் வாழ்வின் பண்பாட்டுக் கலாசாரங்களே.



படிப்பகம்

கோவில்களில் விழாவெடுத்தல் சப்பறம் ஓடுதல் தேரோடுதல் எல்லாம் காரண காரியங்களே இறைவனின் அருள் சொரியும் விடயங்களே. தமிழன் வீட்டிலே விருந்து பசாரங்களுக்குக் குறைவே கிடையாது துறந்தார்க்கு இறந்தார்க்கு இல்லார்க்கு ஈய்ந்தே வாழ்ந்தான். சொல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருந்தான். எவரையும் மதித்தான் தனக்கென வாழாப் பிறர்க்குரியனாக வாழ்ந்தான். எத்தொழிலாளரையும் மதித்துப் போற்றிக் கணித்துத் தக்க சமயத்தில் தக்க கொடையளித்து முதன்மை கொடுத்து பாராட்டியே வாழ்ந்து நாமெலாம் ஒரே சமுதாயமக்கள் எனக் கருத்தமைய வேறுபாடின்றி ஒரே கூட்டமாக ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

தமிழன் வாழ்ந்த தேசம் சூடான சுவாத்திய மானதால் சூட்டைத் தாங்கக் கூடிய பருத்தி உடையணிந்தான். கொண்டாட்ட காலங்களில் மக்கள் கூடும்போது பட்டுடை அணிந்தான். விழாக்கள் செய்யும்போது மக்கள் கூடுவதால் மக்கள் வெளியே மூச்சுவிடும் கரியமிலவாயுவை உள்வாங்கிச் சுத்தம் செய்யப் பச்சிலைகளால் தோரணங்கள் கட்டி வாழைகள் கட்டி அலங்காரம் செய்வது போலவும் காட்டிக் காரணமாகவும் செய்தான். விநாடி நாழிகை நாள் கிழமை மாதம் வருடம் எனக் கணித்துப் பஞ்சாங்கம் அமைத்து அறுபது வருடமாக்கி அது திரும்பத் திரும்ப வருவதாகக் கொண்டு சோதிடங்கண்டு அதில் தன் வாழ்வுக்கமையப் பிரதான காலங்கள் விரதங்கள் விழாக்கள் எனத் திட்டமிட்டு அதை வழி நடத்தியே வாழ்ந்தான்.

மாதம் மாதமாய் அமாவாசை பூரணை கண்டு ஈர்ப்புச்சகதி கூடிய காலமென விரதமநுட்டித்தான். இளவேனில் முதுவேனில் கார்காலம் ஆகிய சித்திரை வைகாசி ஆனி, ஆடி, ஆவணி, மாதங்களில் விழாக்கள் கொண்டாட்டங்கள் செய்து அகமகிழ்ந்து தன் பொருளைப் பகிர்ந்தளித்துக் கலைஞர்களெலாம் வாழ வகுத்து வாழ்ந்தான்.

விழாக் காலங்களில் எல்லாத் தொழிலாளரும் பங்கு பற்றி வாழ வழிவகுத்து அவரவர்கட்குரிய முறையில் பொருள்கள் அளித்துப் பெருமைகொண்டான். அன்னதானம் தாகசாந்தி கோவில்களில் செய்து வாழ்ந்தான்.

வாழ்வின் வழியைக் கண்டு அகம் எனவும் புறம் எனவும்கண்டு அதற்கென இலக்கணம் கண்டு நூல்களாக்கி அதன்படி வாழ்ந்தான். புராணங்களாக்கி சமயம் அநுட்டித்துக் கடவுளிடம் பக்தி பூண்டு முக்தியடைந்தாரைப் போற்றி வாழ்ந்தான். சம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரங்களையும் மணிவாசகரின் திருவாசகத்தையும் தங்கள் உயிரெனப் போற்றிப் பாடிப்பர வசமடைந்து பக்தி வளர்த்தனர். அருணகிரியான் திருப்புகழ் போற்றினர் இன்னுமின்னும் எத்தனையோ அடியாரின் ஆக்கங்களைப் போற்றினர். ஐம்பெருங்காப்பியங்கள் ஆக்கினர் படித்தறிந்து பாக்கள் ஆக்கிய பாவலர்களைப் பணமளித்துப் பாராட்டிப் பட்டங்களும் கொடுத்து ஆதரித்துத் தமிழ் வளர்த்தனர். கோடைகாலத்தில் பரிவாரத் தெய்வங்களுக்குப் பொங்கலிட்டு பலகாரம் சுட்டு மோதகம் அவித்து பழவகைகள் எல்லாம் படைத்து மடைபோட்டுக் கர்ப்பூரம் ஊதுபத்தி கொழுத்தித் தெய்வத்தை வணங்கி மலரிட்டுஆட்டம் ஆடி மெய்மறந்து ஆனந்தமாகி அனைவருக்கும் அந்த இடத்தே பகிர்ந்தளித்து மகிழ்ந்தான்.

சூடான தேசத்துண்டான, சூடான தேசத்து மக்களுக்குப் பொருந்திய நெல்லரிசி, நவதானியங்களையே உணவாகக் கொண்டனர். இலைவகை, காய்வகையில் பலவித

பொருட்களைக் கலந்து அறுசுவை உண்டியாக உண்டனர். பழவகை பால்தயிர் நெய் பாவித்தனர். தம் உணவுவகைகளில் கராம்பு, கறுவா, ஏலம், மிளகு, கஸ் தூரி என்பன சேர்த்து உணவுகளாக்கி உண்டனர்.

நலலெண்ணெய் என்று பல்லாயிரமாண்டுகட்கு முன்னமேயே எண்ணெய்யை அதன் பெருமையறிந்து தலைக்கு வைத்து முடிதிருத்தி கிழமை முடிவில் தலைக்கு நிறையவைத்து உடல் முழுதும் பூசி அரப்பு தேசிக்காய் வைத்துச் சனிநீராடி மகிழ்ந்து வாழ்ந்தனர். உணவிலும் கலந்து சாப்பிட்டனர்.

நல்லெண்ணெய் உடம்புக்கு உறுதியானது ஆக்கமானதென மேலை நாட்டார் இன்றே கண்டனர். பாவிக்கவும் தொடங்கி விட்டனர். வெள்ளைப்பூடு இஞ்சி வெண்காயம் வேண்டிய அளவு தமிழன் தன் உணவில் சேர்த்தே உண்டான். இவையெலாம் சுகநலத்துக்கு உரியது என இப்போதுதான் மேலை நாட்டினர் ஆராய்ந்தறிந்தனர். தமிழன் உணவெலாம் உடம்புக்காதாரமாவதோடு உடம்பில் எவ்வித நோயும் தீண்டாவாறான பொருட்களை உணவுடன் கலந்து ஆக்கியே சாப்பிட்டான். உண்பனதின்பன, நக்குவன, பருகுபன, குடிப்பனஎலாம் ஒரு நேரத்தே பாவித்து மகிழ்ந்தான். வயிற்றைப் பூரணமாய் நிறைக்காது அரைவயிறுண்டு கால்வயிறு நீரருந்தி காவயிறு லீவாகவே சாப்பிட்டான். சாப்பாட்டை நொறுங்கத் தின்றால் நூறு வயது என நன்றாகச் சப்பியே சாப்பிட்டான். உண்டபின் நூறடி உலாவியே துயின்றான். சேமம்புகினும் சாமத்துறங்கு என்பதற்கமைய உறங்கும் நேரம் உறங்கினான். காதலரிருவர் கருத்தொருமித்தாதரவு பட்டதே இன்பம் என ஆண் பெண் விரும்பியே தேடித் தெரிந்தே பொருத்தம் கண்டே இணக்கம் அறிந்தே சோடியாக மணம் புரிந்தனர்.

இனத்தார் சுற்றத்தார் யாவரும் ஒன்று கூடி நல்வாழ்வமையக் கூட்டிவைத்து ஒன்றும் குறைவிலாது, அது என்றும் உள்ளவாறாக்கி நல்லதோர் சமுதாயமாக ஆக்கிவிடுவர். நோய்க்கிடங் கொடேல் என்றவாறு தமிழன் வாழ்ந்தான்.

இல்லறம் எனும் நல்லறத்தில் தலைவனும் தலைவியும் ஒன்றெனப்பொருந்தி அன்பெனும் ஆயுதத்தால் இன்பம் கண்டு நல்லதோர் சமுதாயத்தில் நல்ல அங்கத்தவராகக்கூடிய சற்புத்திரர்களையே பெற்று மகிழ்ந்து ஆக்கிவிடுவர். ஆயள்வேத வயித்தியத்தை அனைவரும் ஆதரித்தனர். அதெற்கெனச் சாலைகளும் அமைத்தனர். மருத்துவ மூலிகைகளும் வளர்த்தனர். நோயெல்லாம் பறந்தோடச்செய்து குறைவிலாது வாழ்ந்தனர்.

தமிழன் சின்ன வயதிலேயே குழந்தைகட்கு காதுகுத்திப் பொன்னாபரணம் பூணுவான். இரத்தினங்களும் சேர்த்தும் அணிவான். காது குத்துதல் ஆபரணங்கள் அணிதல், உடம்புக்கு நன்மையானது. ஆதாரமானது என இன்றுதான் மேல்நாட்டார் அறிந்தனர். ஆண்கள், பெண்கள் அனைவரும் அங்கமெல்லாம் அணிகின்றனர். முடிவளர்த்தான் தமிழன் அப்போது காரண காரியத்தோடேதான் வளர்த்தான். இன்று மேல்நாட்டார் முடிவளர்க்கின்றனர்.

தமிழன் முடிவெட்டினால் முழுகவேண்டும். ஆஸ்பத்திரிக்குப் போனால் முழுகவேண்டும். செத்தவீடு போனால் முழுகவேண்டும் உடுப்புகள் தோய்க்க வேண்டும். வெளியே போனால் கால்முகம் கழுவ வேண்டும். விலக்கிருந்தால் கரிக் கோடிட்டு நாலு

www.padippakam.com

நாளிருந்து தோயவேண்டும். பிள்ளைப்பேறு நடந்தால் முப்பத்தொருநாள் மறைந்திருந்து ஆசௌசம் அகற்றித்தான் வெளியே வரவேண்டும். பிள்ளைப் பேறு பார்க்கப்போனாலும் முழுகவேண்டும். ஒருவர் இறந்தால் ஒரு பெண்பிள்ளையைப் பெற்றால் இரத்த உறவினர்க்கு ஆசௌசம் என்பார்கள். இரத்த உறவினரை அறிவதாயிருக்கலாம். அடுத்து இரத்த உறவினர் நடந்த இடத்து அதிகம் பழகியிருந்தால் அவ்விட நோய்க்கிருமிகள் பொது இடங்களுக்குப் போகாது செய்வதற்காகவுமிருக்கலாம். தமிழன் வாழ்வெல்லாம் அவன் கலாச்சாரம் எல்லாம் சுகாதார சட்டதிட்டங்களே. அதிற்கூட சுயநலமில்லாது பரநலமாகவே தானும் சுகமாக இருக்க சமுதாயம் சுகமாக இருக்கக் கையாண்ட பழக்கவழக்கங்கள் பண்தொட்டே எல்லாவிதங்களிலும் பொருள் வகை நடை, கொடை, உடை, பழக்கவழக்கம் பொதுவுடமைவாதியாக வாழ்ந்தார்கள்.

வேலையில்லா ஓய்வு நேரங்களில் கூட்டம் கூட்டமாய்க் கூடி விளையாடினான். போட்டிகள் நடத்திப் பரிசுகளும் கொடுத்தான். கெந்தியடித்தல், கிளித்தட்டு மறித்தல், பாடியோடுதல், பழம் பொறுக்கல், பந்தடித்தல், கிட்டியடித்தல், அஞ்சலோட்டம், தடையோட்டம், நீந்தல், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முதலான சுதேச விழையாட்டுக்களில் ஆண்களும், பெண்களும் பயின்றனர். போட்டிகளில் கலந்தனர். பரிசில்களும் பெற்றனர்.

தமிழன் ஆரம்பகாலந் தொட்டு இன்றுவரை அவன் வாழ்வு தனித்துவமானது. மகத்தானது. மற்றையோர் பின்பற்றக்கூடியது. இப்படிப்பட்ட தமிழன் காய்த்த மரம்தான். கல்லடி வாங்கும் என்றாங்கு ஆதிகால முதல் இன்று வரை பல்லினத்தாராலும் எதிர்ப்புகளடைந்து வாழ்ந்தான். பயெடுப்புக்களால் பாதிக்கப்பட்டான். உலகெங்கும் பறந்தே குடியேறிவிட்டான். எங்கு சென்றாலும் எங்குவாழ்ந்தாலும் தன் கலாச்சாரத்தை விடாதே வாழுகின்றான்.

தமிழர் பாசம் கூடியவர். தந்தை, தாய், மக்கள், சகோதரர்கள், உற்றார் உறவினர், வயோதிபர், நோயாளர், இவர்களைப் பாச உணர்வுடன் அன்புகாட்டி ஆதரிக்கின்ற பழக்கம் இரத்தத்தோடு நன்றாக ஊறிய உணர்வுடையார். அக்காலமிருந்து நாட்டையும் காக்கின்ற வீர உணர்வுமுடையர். பழைய காலம் தொட்டே வீட்டுக்கொரு ஆண்மகன் நாட்டிற்கு என்ற பழக்கமிருந்தது. சமுதாயத்து ஏற்பாடு சச்சரவெலாம் பஞ்சாயம் மூலமாகத் தங்களுக்குள்ளெ தாமே பேசித் தீர்த்துக்கொள்வர்.

பழைய காலமிருந்தே காணிகண்டான் எல்லையமைத்தான். வேலிபோட்டான். வீடுகட்டினான். தான் தான் தனித்தனி இருந்து தாயமாகிக் கூடிவாழ்ந்து கிராமம் கிராமமாகக் கூடித் தேசமாகி ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் இருந்த சாதி நம் இனத்தின் கலாச்சாரப் பெட்டகமே இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட வள்ளுவர் திருக்குறள். அவர் நம் கலாசாரத்தை வடித்துக்காட்டி அமைத்திருக்கிறார். அவருக்குப் பல்லாயிரமாண்டுகளுக்கு முற்பட்ட நாகரீகராயிருந்திருக்கிறார்கள் நம் தமிழர்

நம்தமிழர் வாழ்வின் கலாசாரத்தில் எந்த ஒரு நிகழ்ச்சியையும் தள்ளமுடியாது சிந்தித்துப்பார்த்தால் சிறப்பு விழங்கும். இப்டிப்பட்ட சிறப்புடைத் தமிழனுக்கு இன்று நாடிருக்க இல்லை. இதைப்புரிந்து செயல்படுவார்க்கு உதவியாகி வீட்டிற்கொரு மைந்தனை பழையமுறைப்படி கொடுத்து நாடு பெற வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# சதியா, விதியா, கதியில்லையா?

நம் தாய் நாடு சுதந்திரங்காண அடிபட்டார். உதைபட்டார். மண்டையுடைபட்டார். பல்லுடைபட்டார். செருப்படி சவுக்கடி பிரம்படிபட்டார். கற்பழிபட்டார். சிறைப்பட்டார். சித்திர வதைப்பட்டார். சுடுபட்டார், அரிபட்டார். மிதிபட்டார்.

எரிபட்டார் எறிபட்டார், முறிபட்டார். உடையுரிபட்டார். பட்டினி இருந்தார். பட்டாளத்தாற் பதைபதைத்தார். பல்லாயிரமாய் உயிரிழந்தார். படாதபாடெல்லாம் பட்டார். கெடாத கேடெல்லாம் கெட்டார்.

ஈற்றிலே மகான் மகாத்மாகாந்தியின் அகிம்சா தர்மம், ஆங்கிலேய ஆட்சியாளரை ஆட்டியது. கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வந்தது. பாரெல்லாம் பாராட்டியது, சக்கரவர்த்திப் பட்டம் தலையாடியது தலைசரிந்தது. சுதந்திரமாகியது.

1947ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 15 ந் தேதி டெல்கியில் செங்கோட்டைச் சுதந்திர சதுக்கத்தில் அசோகதர்மசக்கரக் கொடி கோலாகலமாய் வானளாவப் பறந்தது.

தோளோடு தோள்நின்று ஒன்றாகியுழைத்த ஜின்னா காலமறிந்து சமயம் பார்த்து இரண்டாக்கித் துண்டாக்கித் தனக்குத் தனி நாடு வேண்டுமென துணிவுடன் இறுக்கமாகக் கேட்டார். வெற்றிகண்டார். மேல், கீழ் பாகிஸ்தான் பெற்றார். பார்த்தீர்களா, நம் தமிழனமே சிந்தித்துப் பாருங்கள்.

ஆட்டுக்கு விலைதீரும் போது குட்டிக்கு வேறாக விலை போடுவதில்லை, தாய்நாடு, சுதந்திரமாகத் தானாகவே மிக லேசாகவே ஒலிவர் குணதிலகாவின் கூத்தாட்டக் கொண்டாட்டத்தோடு 1948ம் ஆண்டு பெப்ரவரி நாலாந்தேதி இலங்கை சுதந்திரமடைந்தது. சிங்கக்கொடி கையில் வாளொடு வானளாவப் பறந்தது. யாரேன் ஏதேன் கேட்டால் வெட்டிப்போடுவேன். தெரியுமா என்றது போல.

பட்டார்களா கெட்டார்களா பத்தெட்டிறுத்தார்களா பட்டாற்தானே பாடுதெரியும். பெறுமதிதெரியும். இவர்களுக்கது தெரியாது,

பக்கத்தில் நடந்ததைப் பார்த்திருந்த, நாமனுப்பிய நம் பெருமக்கள் முட்டினார்களா மோதினார்களா தட்டிக்கேட்டார்களா, இடித்துரைத்தார்களா. இல்லை பகிஷ்கரித்தார்களா?



படிப்பகம்

www.padippakam.com

D.S சேனநாயக்காவின் மாயமந்திர, தந்திர வலைகளிற் சிக்கித் தம்மையே மறந்து தம் இனத்தையே மறந்தனர்.

தாம் பெற்ற பெறப்போகும் அற்பசொற்ப சலுகைகளுக்காக தம் இனத்தை தம் பிற்சந்ததியை அடிமைகளாக்கினர். அவர்கள் விட்டபிழை அவரவர் வழியார்க்கும் அடி, இடி, உதை, குத்து, வெட்டு நடப்பதை உயிரோடிருப்பவர்கள் பார்த்துக் கவலைப்படுவார்கள் என நினைக்கிறேன்.

நான் நினைப்பது பிழை என்று நினைக்கிறேன் இன்றும் நிலை உணராது, இனம்படும் பாடுதெரியாது அடிவருடிப் பதவி பட்டம் பெற்றுக் காட்டிக்கொடுத்து இனத்தை அழிக்கும் கொலைஞர்களாக இருக்கிறார்களே. வேதனை தாங்கமுடியவில்லையே.

காலத்துக்குக் காலம் தமிழனைக் காட்டிக் காட்டி மாறி மாறி வந்த சிங்களத் தலைவர்கள் ஏமாற்றியே வந்தனர்.

ஜின்னா பக்கத்துக் கேட்டுப் பெற்றதைக் கண்டிருந்த நாமனுப்பிய கனவான்கள் ஒன்றாகிக் கேட்டிருந்தால் கட்டாயம் சுதந்திரம் நமக்கும் நம்மெல்லைகளுடன் கிடைத்தே இருக்கும். கறுவாக் காட்டில் ஒன்றாகி மாறி மாறிக் கொண்டாட்டமாடிக் கூத்துக்களுமாடிய நம் தலைவர்கள் விட்ட பிழைகளால் இன்றும் நம்மினமே பந்தாடப் படுகிறது. துண்டாடப் படுகிறது, ஒரு சிலர் விட்ட பிழை எந்தளவுக்கு நம் இனத்தை அழித்துவிட்டது.

கெட்டிக்காரன் தான் D.S சேனநாயகா. போட்ட திட்டங்கள் தொடர்கின்றன. பறிபோகின்றது நம்மண்.

கல்லோயாத்திட்டம், கந்தளாய்த்திட்டம், அல்லைத்திட்டம், பதவியாத்திட்டம், மொரவீவாத்திட்டம், வெலி ஓயாத்திட்டம் இவைகளெலாம் திட்டம் தீட்டியபோது நம்மவர்களும் இருந்தார்தானே. இலங்கை இந்தியத்தமிழர் குடியுரிமைத்திட்டம் திட்டமிட்டுப் பறித்தபோது நம்மவர்களும் ஒத்துழைத்தார்தானே. பட்டம் பதவிகளுக்காகப் பந்தம் பிடித்தார்கள். அடிவருடினார்கள்.

பட்டிப்பளை ஆறு சேனநாயக்கா சமுத்திரமாகியது. மணலாறு வெலிஓயா ஆகியது. நம்மவர் மண் போய்விட்டதே. புண்ணியவான் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகமில்லாவிட்டால் நம் கோடிக்குள் கூட வந்திருப்பார்கள்.

தகுதி காண் பரீட்சையிற் தகுதியானவர்களைத் தமிழினமெனத் தரப்படுத்தித் தட்டினாரே. தட்டிக்கேட்டார்களா முட்டி மோதினார்களா.

பற்பிடுங்க ஊசிபோட்டுவிட்டு ஊசிபோடப் படாத மறு கொடுப்புப்பல்லைப் பிடுங்கிய மதியீனர் போன்றவர்களை ஆட்சியாளர் தகுதியாக்கிப் பதவிகளில் வைத்தனர். ஆட்டம் காணுகின்றது அரசாங்கம்.

புத்தியாளர்களை வெளியே விட்டதால் போராட்டம் நடக்கிறது. இனங்களழிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றா, இரண்டா எத்தனை எத்தனை சேர்த்து அடுத்து கூடிக்கொஞ்சிக் குலாவித் திட்டம் தீட்டி மட்டந்தட்டி அழித்து அழித்துச் சுவைகண்டு இனத்தை முற்றாக எதிர்த்தும் அழிக்கத் தொடங்கினர். 56, 58, 71, 77, 81, 83, 87, 90,.. இப்படியே தொடர்கிறது இனமழிகிறது.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. பொங்கினர். நம்இளையவர். இப்படி நம்மினத்தை வேரோடு பிடுங்கப்பார்த்ததைக் கண்ட திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் வெகுண்டமுந்தார். தம்மினக் காளயைரைக் கூட்டினார். தன்தலைமையில் வேங்கைகளாக்கினார்.

சிங்கள அரசாங்கம் செய்யும் அநீதிகளை அறிந்து தட்டிக் கேட்டு முட்டிப்பார்த்து எங்கள் முட்டுக்களைத் தீர்க்கப் பாருங்கள். அன்றேல் எங்களை நாங்கள் ஆளக்கூடியவர்களாக நீங்களே ஆக்கப்போகிறீர்களென்று அறை கூவினார். அரசாங்கம் நடத்தும் ஆட்சியாளர் சிந்தித்தனர்.

பல பல புதிய கட்சிகளும் நம்மிடையே தோன்றின. இதுதான் நம் சாபக்கேடு. இவர்களை ஆட்சியாளர் அரவணைத்து ஆவன கொடுத்துத் தம்வசமாக்கி ஆயுதங்கள் கொடுத்து தம்படையினரோடு சேர்த்து தம்படை உடுப்பினைக் கொடுத்து நம்மினத்தை அழிக்கும் கயவராக்கிவிட்டனர்.

நம்மையைப் பிடித்து நம் தலையிற்குட்டுகிறார்களே. அந்தோ பாவம், பரிதாபம். இவர் நிலை என்னே. முகமூடிபோட்டுக் காட்டுகிறார்களே. இவர்களை அவர்கள் நம்புவார்களா. மதிப்பார்களா. இதை அறியாது நடக்கிறார்களே. எப்போ புத்திவரும்.

அரசாங்கத்தில் அங்கம் தாங்கும் நாமனுப்பிய நம் மினக்கனவான்கள். ஆட்சியாளர் வெளிப்படுத்திய அரைஅவியற் பரவலாக்கத்திட்டத்தை அறியாது ஆசையோடு கையேந்தி ஆதரிக்கிறார்களே. இதென்னகாலம் அந்தோ இவர்நிலை பரிதாபம்.

1987ல் நம்மை இக்கதிப்படுத்திய நரித்தந்திரமுடைய இராசதந்திரி ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமர் ராஜீவைப்பிடித்து அவர் படை மூலம் எம்மையடக்கப்பார்த்தார். இந்தியப்படைவந்து செய்யாதனவெல்லாம் செய்து சீரழித்து விட்டுப் புலிகளோடு மோத முடியாதெனக் கண்டு பின்வாங்கித் தம் நாட்டுக்கே அபகீர்த்தியைத் தேடிக் கொண்டு பெறுமதி மிக்க பேரழிவோடு உயிர்களழிவோடு மானமிழந்து வீரமிழந்து தோல்விகண்டு சென்றனர். வால் பிடித்து நம்மவரைப்போலி நாடகமாடிச் சில நாள் ஆட்சி நடத்தியவரும் வாலறுபட்டு அவர் பின்னே இந்தியா சென்றனர்.

இந்தியப்படை முடியாதெனக்கண்டு இளைத்துக் களைத்துப் போகப் பொங்கியெழுந்த புலிகளை அரசாங்கம் 90 யூனிலிருந்து இன்றுவரை தன்னாலான மட்டும் அடக்கப் பார்க்கிறது முடிகிறதா இல்லையே இன அழிவே தாண்டவமாடுகிறது.

ஆளுபவர் ஆதரிக்க வேண்டியவர் நீதியின்றி அழித்தொழிக்கலாமா. ஆலயத்தில் கூடி இருங்கள் ஆபத்தில்லை என்று கூறிவிட்டு குண்டுகள் போட்டார்களே. தமிழினம் ஒழியட்டும் என்று திட்டமிட்டே ஆலயத்தில் ஒன்றல்ல ஒன்பது குண்டுகளைப் போட்டார்களே. உலகறியச் செய்தார்களே. ஓட்டைகள் வெளிப்பட்டு விட்டதே. சூழ்ச்சிகள்



படிப்பகம்

தெரிந்துவிட்டதே.

நீதியைப் பின்னாக்கி அநீதியை முன்னாக்கி அகதிகளாக்கலாமா. தமிழினம் அழிகிறதே. பட்டினியாற் சாகிறதே குழந்தைகள் பாலின்றிப் பதைக்கிறதே. மருந்துகளின்றி மாளுகின்றனரே ஆளுபவர்க்கிரக்கமில்லையா. எங்கள் வாக்குகளுக்குப் பெறுமதி இல்லையா.

ஒரே நாட்டில் ஓர் இனத்துக்கு வீடில்லை பொருளில்லை விறகில்லை லைற்றில்லை விளக்கெரிக்க மண்ணெண்ணெய் இல்லை போக்குவரத்து வசதிகளில்லை ஊணில்லை உறக்கமில்லை உடையில்லை உழைப்பில்லை தோய்க்க வழியில்லை. மருந்தில்லை நடந்தாவது போகவழியில்லை. ஒரே அல்லோல கல்லோலம்.

எங்கேபோவது எங்கே இருப்பது ஒரே புறப்பாடு ஒரே கூக்குரல் வீசிய வெறுங்கையுடன், குஞ்சு குழந்தைகளுடன் வெளிப்பட்டாலும் செல்லடி குண்டடி துவக்குச்சூடு, வாள்வெட்டு கத்திக்குத்து, பொல்லடி இரும்புக்கம்பியடி, கற்பழி, கொள்ளையடி நம்மினம் படும்பாடுகளைப் பாருங்கள். முன்னவர் தேடிய தேட்டத்தைப் பின்னவர் படுவதைப் பாருங்கள். தமிழினமே சிந்தியுங்கள்.

ஆட்சியாளரே புத்தசமயம் காக்கும் புண்ணியரே ஆசையை நீக்குமின் அறிஞராய் வாழுமின் அறம்பல போற்றும் மின்மறம் பல கடிமின் என்றாரே புத்தர். மேலும் புத்தம் சரணங்கச்சாமி, சங்கம் கரணங்கச்சாமி, சர்மம் சரணங்கச்சாமி என்றாரே நீங்களா புத்த சமயத்தார். நெஞ்சைத் தட்டிக் கேட்டுப்பாருங்கள்.

ஒன்று பிழைத்தால் ஒன்பதும் பிழைக்கும், பஞ்சம், பசி, பட்டினி, கொள்ளை, கொலை, குத்து, வெட்டு, கொள்ளை நோய் தீவைப்பு இவையெலாம் கயிற்றின் புரிகள் போலத் தகுதியிழந்து தடம்புரளும் சமுதாயத்தில் ஏற்படுவன. நாமின்று அதை அனுபவிக்கிறோம்.

தமிழர் வீடுகளின் நிலைகள், கதவுகள், யன்னல்கள் காசில்லாமல் கப்பல் ஏறுகின்ற நம்மவர் நகைகள் அடுத்தவர் போடுகின்றனர்.

ஆமி ஒருபக்கம் கொள்ளையடி, கொள்ளையடிக்கும் கள்ளர் கூட்டம் ஒருபக்கம் கொள்ளையடி சாவார் ஒருபக்கம் அழுவார் கண்ணீர்விடுவார் ஒருபக்கம், என்னடா தமிழன் வாழ்க்கை இவ்வளவு பாவம் செய்தானா.

இது தருணம் சமயம் பார்த்துப் பகிர்ந்துண்ணாது பதுக்கி ஆனைவிலை குதிரைவிலை விற்றுக் கழுத்தறுத்துப் பணம் சம்பாதிக்கும் எளியசாதிக் கூட்டத்தை என்னென்போம் ஏதென்போம். இரக்கமற்ற சுயநலம் படைத்த துரோகக் கூட்டம், இப்படிப்பட்ட துரோகிகளால் தான் தமிழினத்துக்கு இக்கெதி வந்ததென்பதை இன்னுமறியாதிருக்கின்றாரே. நாமின்னு முய்ய வழியில்லையா. நெல்லினுள் நெற்சப்பி போன்றோரைக் களைநீக்கும் புண்ணியவான் எம்தலைவனை நம் பின்னவர் போற்றுவர்.

பதுக்கித் தட்டுப்பாடாக்கி முட்டுப்பாடானவர்க்கு விற்ற விலைகளைப் பாருங்கள் மண்ணெண்ணெய் போத்தல் 300 ரூபா, சீனி கிலோ 60 - 80 ரூபா, அரிசி கிலோ 60

ரூபா, சில நேரம் எந்த விலைக்குமில்லை. மா கிலோ 60 ரூபா, காய்கறி கிலோ 40 - 80 ரூபா, பயறு 60 ரூபா, சவர்க்காரம் ஒன்று 75 ரூபா, லக்ஸ் 80 ரூபா, தீப்பெட்டி 80 ரூபா, குச்சியொன்று 1 ரூபா, இப்படியே அவர்கள் நினைத்தவிலை. இப்படிப்பட்டவரா முட்டுப்பட்டார்க்கு முட்டுக் கொடுக்கக் கூடியவர்கள். இவர்கள் தான் முட்டுப்பட்டாரை முட்டாக்கி முட்டாளாக்குபவர்கள்.

சில மாதங்களாக உணவுக் கப்பலில்லை அரசாங்க அதிபர் அறிவித்தும் ஆக்கமில்லை எனக் கண்டுநேரில் சென்று பேசியும் இன்னுமொரு வழிஇல்லைப் போற்தெரிகிறதே. ஆட்சியாளர் திட்டமிட்டு மட்டந்தட்டி மக்களைப் பட்டினி போட்டுச் சாகடிக்கும் மோசடியான திட்டமா சிந்தியுங்கள்.

எம் இனமே இத்தருணத்தில் தன்கையே தனக்குத் துணையென உடன் குறுகிய கால எல்லையிற் பயன்தரக்கூடிய உணவுற்பத்திகளைக் கடின உழைப்புடன் ஒன்றுபட்டுழைத்துப் புத்திகளைத் தீட்டி உத்திகளைப் பாவித்து உற்பத்திகளைப் பெருக்கவேண்டும். பாதுக்காத்து பகிர்ந்துண்ணவேண்டும். பட்டினியைப் போக்கவேண்டும் நம் இனத்தைக் காக்கவேண்டும்.

பட்டினியாற் சாகும் நம் இனத்தை நம் பஞ்சம் தாங்கிப்பனையே ஓரளவு உயிர் பிடிக்கின்றது. கற்பகச்சோலை இயக்கம் கைகொடுக்கிறது. கற்பகதரு கவலை வேண்டாமென்கிறது. நிமிர்ந்து நின்று என்னைவிட்ட உங்களை நீங்கள் விட்டாலும் நான் சமயமறிந்து உதவுகிறேன். உதவுவேன் என்று சொல்கிறது.

என்னை உற்பத்தியாக்குங்கள் எந்த வித மண்ணிலும் என் விதையைப்புதைத்து விட்டாற்போதுமே. புதையல் புதையலாகத்தருவோமே என்கிறது. என்பலனை, முழுவதையும் முற்றாக அநுபவியுங்கள் என்கிறது. புதிய விஞ்ஞான உத்திகளைக்கொண்டு புதுப்புதுப் பொருட்களை ஆக்கி உணவுகளை ஆக்கிப்பாவியுங்கள் வெளிநாடுகளுக்கனுப்பி அந்நிய செலாவணியையும் தேடுங்கள் என்கிறது.

நம்மண்ணே, நம்மண் உற்பத்திகளே நமக்குத்துணை என்ற பாடத்தைப் படித்துவிட்டோம். அந்நிய உணவு வேண்டாம் அந்நியர் ஆட்சி வேண்டாமென்ற பாடமும் படித்தோம். பனையை அதன் பழத்தை, பனாட்டை, பிட்டை, புழுக்கொடியலைக் கூழை, இன்னும் அதன் மூலமாக்கப்படும் புதிய நவீன உணவுகளை நாம் உண்ணவேண்டும். பஞ்சத்திலுதவும் பனையை மறவாது அதுசெய்யும் உதவிகளை மறவாது உற்பத்திகளை நன்றாக உண்டாக்க வேண்டும்.

அந்நிய மோகத்தால் நம்பனையை மறந்து அதன் பலனை மறந்து அதுதரும் உணவுகளை மறந்து, அவைகளைப்பாவித்தால் மதிப்பில்லை என்ற நிலையை மறந்து பழைய நாம் விட்ட பிழைகளை மறந்து புதிய முறையில் முன்னேற்ற நிலையில் வாழப்பழகவேண்டும். நம்பனையை நாம்மறந்தாலும் நம்பனை நம்மை மறக்கவில்லை. உடம்பில் உயிர் இருக்க உற்றதருணத்தில் உதவி செய்கின்றது. பனைபோல் நம் இனம் வாழவராதா. பனையைத்தறிக்கப்படாது, உற்பத்திகளை உண்டாக்குவதன்றி அழிக்கப்படாதென்ற, எம் இன அவதார புருஷனான் எம் தலைவன் சட்டத்தை ஆதரிக்கவேண்டும்.

www.padippakam.com

நம்தமிழினமே நம்மவர் சிலர் விட்டபிழையால் நாம் படும் பாடு போதும். ஆண்டசாதி ஆளப்படும் சாதியாகினோம். கப்பலோட்டிய தமிழினம் கண்ணீர் விடும் இனமாகினோம். மாற்றார் அடிப்படுத்தி மாறுபடுத்தி எம்மினமூளையை, கடின உழைப்பை வீரத்தைத் தமக்காக்கித்தாம் சுகபோகமாக வாழ்வதற்கு எம்மை ஆக்கி வாழ்ந்தாரை இன்னுமறியாது இருக்கலாமா, நம்பினோம். மோசமாகினோம் ஏமாந்தோம் ஏமாறுகிறோம் இன்னும் ஏமாறவேண்டும். இன்னுமா போட்டிகள், இன்னுமா காட்டிக்கொடுப்புகள், இன்னுமா முகமூடிகள், ஆட்சியாளர் ஆயுதத்தால் உன்னினத்தை அழிக்கலாமா. தம்பி அண்ணனை அழித்தால் ஆவதென்ன. அடுத்தவன் தான் வாழத்தன்னினம் வாழ உன்னைப்பிடித்து உன்கையிலாயுதத்தைத் தந்து உன்னினத்தை அழிப்பிக்கிறானே உன்னினம் சாகிறதே, பட்டினியாற் பரதவிக்கிறதே மருந்தில்லாது மாய்கிறதே சிந்தித்துப்பார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கனவான்களே அந்தரத்திலிருக்கும் ஆட்சிக்கு முட்டுக்கொடுத்து உன்னினத்தை அழிக்கலாமா. துணிவுடன் இறுக்கமாக உணவுக்கப்பலை அனுப்பவேண்டும் பட்டினியைப் போக்கவேண்டும் மருந்துகளை அனுப்ப வேண்டும் போரை நிறுத்த வேண்டும். எம் இனத்துக்கு ஆக்கமான அதிகாரம் கொண்ட ஆட்சியைத் தரவேண்டும். இல்லையேல் ஆட்சியாளரே நாங்கள் வெளியேறுகிறோமென்றால், ஒரே குரலில் ஒத்து நீங்கள் நின்றால் ஆட்சிதடுமாறும் தலை சரியும். இந்த நிலை கண்டும் இன்னுமா இன்னுமா இனம் வாழ விருப்பமில்லை.

அந்நியராட்சியால் அந்நியமோகத்தால் அந்நிய நாகரீகத்தால் அழிந்துபோனோம். இருப்பது உடுப்பது, உண்பது, கேட்பது, கதைப்பது, பார்ப்பது, ஏன் எல்லாமேதான். உறிஞ்சப் படுகிறது அந்நியருக்கே. இதனாலேற்பட்ட கதி தான் என்பதைச்சிந்தித்து நம் பொருளே நம்கதி என்ற பாடத்தைப் படித்துவிட்டோம். மகான் மகாத்மாகாந்தி ஏன் ராட்டையை ஆட்டினார். ஏன் நாலு முழத்தை உடுத்தார். நாலுமுழத்துடன் மேலில் ஓர் துண்டுடன் லண்டன் ஏன் வந்தார். எம்மினமே இவைகளைச்சிந்தியுங்கள்.

நம் உற்பத்திகளை மதித்துப் புதுப்புது விஞ்ஞான உத்திகளைப்புகுத்திப் புதுப்புதுப் பொருட்களின் உற்பத்திகளைப் பெருக்கிப் புதுப்புது உணவுகளை ஆக்கிப்புதுமை வாழ்வைப்படையுங்கள்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்.
தனி ஒருவனுக்குணவில்லையெனில் இந்த சகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதியார்.

உழுதுற்பத்தியாக்கும் உழவன் தான் உலகம் படைக்கும் உத்தமன் என மதித்துப்போற்றிக் கணித்து நடவுங்கள். புது உலகம் படையுங்கள்.

துன்பத்தின் முடிவு இனபம் பட்ட பாட்டின் வீச்சைக் கொண்டே இன்பம். இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃதொப்பதில் என்றார் திருவள்ளுவர்.

பட்டுவிட்டோம் கெட்டுவிட்டோம் பல்லாயிரகோடி இழந்துவிட்டோம். பல்லாயிர உயிர்களை


படிப்பகம்

www.padippakam.com

இழந்துவிட்டோம். இரத்தம் சிந்தி ஆறாகப்பெருகி ஓட விட்டுவிட்டோம், ஓட விடஇருக்கிறோம். உயிராயுதங்களாகிச் சிந்திச் சிதறிவிட்டோம். இன்னும் சிந்திச்சிதற இருக்கிறோம். தமிழ் ஈழமே உயிரெனக் கண்டுகொண்டோம்.

ஆட்சியாளர் நம்மினத்தை முற்று முழுதாயழிக்க பல்லாயிரக் கணக்கான படையினரை அனுப்பி ஆயிர கோடிக்கணக்கான பெறுமதியுடைய ஆயுதங்களை அனுப்பி ஓரேமூச்சில் வீச்சில் நாலுதிசைகளாலும் தாக்கி அழிக்கத் திட்டமிட்டுள்ளனரே. பாராளுமன்றத் தமிழர் அங்கத்தினர்களே காட்டிக்கொடுக்காதீர் மாட்டிக்கொள்ளாதீர் இனியும் ஆட்சியாளரின் ஏமாற்று வித்தைகளுக்காளாகாதீர். சரித்திரம் படைக்காதீர். தமிழ் ஈழம் தான் முடிபு என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மறவாதீர். ஒன்று படுங்கள் துணிவுடன் ஆட்சியாளரை இறுக்கமாகக் கேளுங்கள். செவியேற்காவிட்டால் துணிவுடன் வெளியேறுங்கள். ஆட்சியாளர் வீழ்ச்சி. நீங்கள் வரலாறு படைப்பீர்கள்.

தமிழனே தமிழினமே சிந்தனை செய்வாய் கண்ணை விற்றுச் சித்திரம் கொள்ளலாமா. இனம் அழிந்தபின் நாடேன்? மண்ணேன்?

குற்றங்குறை பாராது நூற்றுக்கு நூறாய் ஒன்று படுங்கள். ஒன்றாக நின்று ஓர் முடிபு காணுவோம் என்று நினையுங்கள். சிந்தியுங்கள் செயற்படுங்கள்.

நம்புலிகளின் வீரதீர சாதனைகளை உலகமே போற்றித் தமிழன் என்றொரு இனமுண்டு அதற்குத் தனியே ஒரு குணமுண்டு என்றதைப் போற்றுகிறார்கள் ஏத்துகிறார்கள். உலகினர் எல்லாம் நம் தமிழ் ஈழம் வந்து பார்த்துச் செல்கின்றார்கள் ஆகவே ஒன்றுபட்டு யாவரும் புலிகளாகுவோம் தமிழ் ஈழம் காண்போம் மாற்றாரைப் புறங்காண்போம்.

சதியா, வதியா, கதியில்லையா? சதியும் தான் விதியும் தான் இரண்டும் தான் இவ்வளவு நாளும் தான் ஒன்று படாது இந்நிலை அடைந்தோம்.

சதியையும் விதியையும் மதியால் வெல்லலாம். கண்டு கொண்டோம். கதியுண்டு கதியடைவோம் நிச்சயம். ஒன்று பட்டு ஒத்துழைத்து நாடுபெற்று நலம் பல பேணுவோம். தமிழனுக்கென்றொரு தனி நாடு, தமிழ் ஈழம் பெற்று உலகம் போற்றும் உத்தமநாடாக்கி வளம் பல பெற்று வாழுவோம்.

தமிழ் இனம் வாழ்க, தமிழ் ஈழம் வாழ்க,
தமிழ்வாழ்க, புலிக்கொடி வாழ்க,
நம்பெருந் தலைவன் வாழ்க,
ஒன்று பட்டாலுண்டு வாழ்வு,
குண்டுபட்டால் ஒன்றுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழனே சிந்திப்பாய்

தமிழன் சமுதாயமே யோசித்துப்பார். இனியாவது திருந்தவேண்டாமா.

தமிழனுக்கு ஏன் இக்கெதி என்று சிந்தித்தீர்களா. தமிழன் வீரமெங்கே. விவேகமெங்கே. நாகரீகமெங்கே. சமுதாயப் பண்பாடெங்கே. வள்ளுவன் கண்ட சமுதாயமெங்கே. இவையெலாம் பொய்யா, மெய்யா, புழுகா, என நினைக்க வேண்டியதாக வந்து விட்டதே. இதை யோசித்துப் பார்க்கிறீர்களா.

தமிழன் தமிழ் கண்டான். தரணியெலா மாண்டான். மதம் கண்டான். மக்களினம் கண்டான். மகிமையுடனிருந்தான். மாற்றா ரினங் கண்டு அதைப் புறம் கண்டு மதிப்புடனிருந்தான். கங்கை முதற் கடாரம் வரையாண்டான். இமயங் கண்டு கல்லெடுத்துக் கண்ணகி கோயில் கட்டிப் பெருமை கொண்டான். கப்பல்கள் கட்டிக் கடலெலாம் கப்பல்கள் ஓட்டி உலக நாடெல்லாம் வணிகமாற்றித் திரவிய மெலாங் குவித்துக் குறைவிலாது வாழ்ந்தான்.

இப்படி வாழ்ந்த தமிழனுக்குத் தற்போது நாடிருக்கா இல்லை இல்லை. அகில உலக நாடெலாமோடி ஆரோ வாழ உழைக்கும் பாழ்பட்ட பாழான சீரற்ற சிறப்பற்ற தீரமற்ற கோழையான சமுதாயமாக மாறி விட்டதே. ஈதென்ன கோலம்.

எங்களுக்குள் எத்தனை சாதி. எத்தனை உயர்வு தாழ்வு. மாறுபட்ட, வேறுபட்ட கூறு பட்ட, குல கோத்திரங்கள். இவையெப்படி வந்தன. சாதி யிரண்டொழிய வேறில்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர். தீதும் நன்றும் பிறர்தர வாரா. என்று சமுதாயத்திலே வாழ்வாங்கு வாழ்வதைக் கண்டார்கள். பொறாமை கொண்டார்கள்.

மாற்றார் புகுந்தனர். மாறு படுத்தினர். வேறு படுத்தினர். கூறுபடுத்தினர். நாடு பிடித்தனர். நலமெலாங் கொண்டனர். நாடற்ற மக்களாக்கினர். உழைப்பெலாம் உறிஞ்சினர். நாதிகளற்ற நாய்ச் சமுதாயமாக்கினர். தங்களுக்காக உழைக்கும் கூட்டமாக்கினர். தாங்கள் சுறண்டும் நாடுகளெலாம் தமிழரைக் கூலிப்பட்டாளமாக்கி உழைப்பை



படிப்பகம்

www.padippakam.com

உறிஞ்சித் தமிழனைப் பட்டினியாக்கித் தாங்கள் பால் பழம் அருந்தித் பஞ்சணை மெத்தையிற் படுத்தனர். ஏனின்றும் தமிழனால் சுகபோகம் தான். சிந்தித்தால் விளங்கும்.

அரச னெவ்வழி குடிகளு மவ்வழி. என்றாங்கு சிறிய மீன்கள் பெரிய மீன்களுக்கிரைபோல உறிஞ்சுவோர் பெரியோராக உறிஞ்சப்படுவோர் சிறியோராகவும் ஆகிவிட்டனர். பொருளாதாரம் சமச் சீரற்ற மேல் கீழாகியது.

ஒற்றுமை போனது, உயர்வு போனது, நாடு போனது, நாகரீகம் போனது, மதமும் மொழியும் தேய்ந்து போனது. நாங்கள் என்ற எண்ணம் போய் நான் என்ற எண்ணம் நன்றாக மேலாடி வளர்ந்து சுய நலம் இரத்தத்தோடு ஊறிவிட்டது. காட்டிக் கொடுக்கும் கூட்டமாகினோம். மதம் மாறினோம். வேறு மொழி படித்தோம். மாற்றார் வாழ்வதற்கு வழியாகினோம். நாம் வாழ அவர் பாதம் வருடினோம்.

கடவுளிடம் வரம் கேட்க வேறு மொழி. அரசனிடம் நீதி கேட்க வேறு மொழி. இதென்ன வாழ்வு. நம் மொழி கீழே. அவர்கள் மொழி மேலே. நாம் கீழே அவர்கள் மேலே என்ற எண்ணம் நம் தலைமேலே ஏறி விட்டது. அவர்களுக்காக உழைத்து அவர்களைக் கண்டவுடன் கும்பிடும் சமுதாயமாக மாறி விட்டது. ஆண்ட பரம்பரை ஆளப்படும் பரம்பரை ஆகியது.

அட தமிழனே! ஐந்து நூறாண்டு போய்விட்டதே. இனியாவது உன்னை யோசிக்கிறாயா. யோசித்தவர்க்கு உதவி செய்கிறாயா. யோசித்துப்பார். உனக்கு நாடிருக்கா. வீடிருக்கா. கட்ட இடமிருக்கா. நம்மதம் தேய்கிறதே. நம் தமிழ் தேய்கிறதே. நம்மினம் அழிகிறதே. இன்னுமா சுயநலம். இன்னுமா பதவிகள் பட்டங்கள். தமிழா சிந்திப்பாய். ஒன்றுபடுவாய். வெற்றி பெறுவாய். ஆளுபவன் இல்லை எனும் உன் நாட்டிற் கூட உனக்காக உழைக்கிறாயா. அந்நியர் பழக்கி விட்ட மோகத்தால் அந்நிய பொருட் பாவிப்பால் உன் உழைப்புக் கப்பல் ஏறுகின்றதே.

உலகெலாம் ஓடித் திரிந்து ஆருக்காகவோ உழைக்கிறாயே. சிந்தித்தாயா. உன்னை உன்னிடமிருந்து கழுத்தறுத்து உன்னைக் கொண்டு உழைப்பித்துத் தான் தன்னிடம் சென்று உல்லாசமாக வாழ வழி அமைத்துக் கொண்டு ஆளையாள் தலைமயிரைப் பிடிக்கவிட்டு உன்னை அநாதரவாய் விட்டு விட்டு வந்தவனது பின்னும் தேடி ஓடி வந்து அவனுக்காக உழைக்கிறாயே சிந்தித்தாயா.

அட பாழ்பட்ட தமிழனே தமிழினமே உனக்கு எப்போ புத்தி வரும். நான் என்ற எண்ணம் போய் நாங்கள் என்ற எண்ணம் எப்போ வரும். எத்தனை கட்சி எத்தனை விதம் வீறு கொண்டவர்கள் ஏன் ஒன்றாகக் கூடாது. நாமொன்றுபட நாமின்றுவரை இழந்தது போதாதா. இல்லையின்னும் காணாதா. இன்னுமுயிர் போக வேண்டுமா. இனத்துக்காக உயிராயுதமாய்ச் சிந்திச்சிதறும் உயிர்களையாவது நேசியுங்கள். ஒன்று படுங்கள்.

தமிழினமே இப்போதும் மாற்றார் ஆளும் வர்க்கத்தார் ஆத்திரங்கொண்டோர் சூழ்ச்சி பலிக்கிறதே. இதைச் சிந்திக்கிறீர்களா. நம்கையைப்பிடித்து நம் தலையிற் குட்டி நம்மைப் பிளவு படுத்தி வாழுகிறார்களே. ஆளுகிறார்களே. நம்மை நாம் ஆள முடியாதா. காலம் வாராதா.



படிப்பகம்

www.padippakam.com

நம் வீரமென்ன, தீரமென்ன. ஒன்று பட்டாலதன் உயர்வென்ன. நம்மைக் கூறுபடுத்திக் கெடுக்கும் மாற்றாரை இன்னுமறியாதிருக்கிறீர்களா. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வல்லவா. துண்டுபட்டாலொன்றுமில்லையல்லவா. சிந்திக்கிறீர்களா. ஒன்றுபட்டுவிட்டால் நம்முன்னெதிர்நிக்க முடியுமா. இல்லையே. வெற்றி நிச்சயம். இந்நிலை எப்போ காண்போம். காணுவோம். ஒன்றுபடுவோம். நாடுபெறுவோம். காலம் பதில் சொல்லும்.

மாற்றார் புகுந்து நம் சமுதாயத்தைப் பாழடித்த ஊறிப்போன சீர்கெட்ட பழக்கவழக்கங்களுக்கெல்லாம் சாவுமணியடித்துச் சவப்பெட்டியுள் வைத்து மண்ணுட் புதைத்துவிட்டப் புதியதோர் சமுதாயமாக்கி எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் இந்நாட்டுமன்னர். என்ற மனநிலையையாக்கி எல்லோரும் சமச்சீரான பொருளாதார நிலையாக்கி நம் மண்மூலப் பொருளே நமக்கென ஆக்கி நம் உழைப்பெலாம் நம் இனத்துக்காக்கி நம் நாட்டுப்பொருட்களையே நம் இனம் பாவிப்பாராக்கி நம் செல்வம் கப்பல் ஏற விடாது நமக்கென ஆக்கி ஏற்பாரில்லாத சகலரின் உழைப்பால் உயர்ந்த நாடாக்கி ஏற்றம் பெறும் கல்வியால் மேலான நாடாக்கி மதம் மொழியெலாம் பேறாக்கி ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்ற நிலையையாக்கி சீர் கண்ட சிறப்புக்கொண்ட தனித்துவ அமைப்பான நாடாய் வர நாமெலாம் கூடி ஒன்றுபட்டு உழைத்து மேலாக்கி உலகம் போற்றும் உத்தம நாடாக்க வேண்டும். வீறு கொண்ட வீரமிக்க இனமாகவேண்டும்.

நாடு பெற உயிராயுதமாய் உயிர் விட்ட வீரவேங்கைகளை நினையுங்கள். இன்னுமுயிர் ஆயுதமாய் உயிர் விட இருக்கும் வீர வேங்கைகளை நினையுங்கள். சரித்திரம் படைக்கும் உலக உத்தமிகளாய் உலகத்துக்கு முன்னோடிகளாய் உலகம் போற்றும் வீர சிரோன்மணிகளாகி தம்மினத்துக்காக உயிர் விட்டு வீரசொர்க்கமடைந்த, அடையப்போகும் பெண் வீர வேங்கைகளை நினையுங்கள். இனியாவது நூற்றுக்கு நூறாய் ஒன்று படுங்கள்.

பட்டம் பதவிக்காக அடுத்தவனை அடிவருடிக் காட்டிக்கொடுக்கும் கயவர் கூட்டமாக இனியும் இருக்கலாமா. தமிழா சிந்திப்பாய்.

கட்டப்பொம்மனைக் காட்டிக்கொடுத்தான் எட்டப்பன். சங்கிலியனைக் காட்டிக்கொடுத்தான் காக்கைவன்னியன். இக்கேடு பட்டோம். பட்டபாடு போதும். கெட்டகேடு கண்டு வீறு கொண்ட வேங்கைகளுடன் சேருவோம். நாடு காணுவோம். நலம் பல பெறுவோம்.

வருங்கால நம்பியரே! நங்கையரே! வருங்காலம் உருவாக்கும் பெற்றியரே! புலி வாழ்க. புலிக்கொடி வாழ்க. இனம் வாழ்க. மொழி வாழ்க, நம் தமிழ் ஈழம் வாழ்க. எம் தமிழ் இன மீட்சித் தலைவன் வாழ்க பல்லாண்டு வாழ்க.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களை போற்றுவோம்

மாற்றார் வரமுன் இருந்த அன்றைய தமிழன் சமுதாயம் பெண்ணை போற்றினான். கண்ணெனக் காத்தான். சத்தியில்லாமற்சிவமில்லை என்று கண்டான். சத்தியாலேயே எல்லாமாகின்றது எனக்கண்டு அன்பு பூண்டு கண்ணொடு கண்ணினை நோக்கிக் கண்டு பிடித்து உளம் ஒன்ற ஒருமைப்பட சமச்சீராக, சரிநிகர் சமானமாக இல்லை இன்னும் கூடுதலாக அன்பு கொண்டு பொன்னும் மணியும் தானேயிட்டு புத்தாடைகளும் பரிசாககக்கொடுத்து உடல் ஒன்ற உரிமை கொண்டாடி பெருமை கொண்டு பேணிப்பாதுகாத்து மதிப்பளித்து, மகிழ்ச்சி கொண்டான்

தரமான வாழ்க்கை திறமாக நடந்தால் நீயே நான் நானே நீயென உண்மை அன்புடன் வாழ்க்கை ஓடம் ஓடியதால் திறம்பட்ட தரம்பட்டமக்களைப் பெற்று தமிழன் வீரம்மிக்க விவேகமிக்க சமுதாயத்தை உருவாக்கினான் எல்லாம் சரியாக இருந்ததால் எல்லாம் சரியாகவே இருந்தது

அக்காலப் பெண்கள் நல்ல சமுதாய நெறிகொண்டவர்களாக வாழ்ந்தார்கள். கற்புநெறிகொண்ட உத்தமபெண்களாக இருந்தார்கள். அன்னை தாயையும் அடியாள் பணியும் பொன்னின் அழகும் பொறையும் மதியுக மந்திரி மதியும், சிறந்த கல்வி அறிவும் வீரமும் உடையவர்களாகத் தலைவணங்கத் தக்கவழிநிறுத்தி தலைமைதாங்கி நல்லமுறையில் குடும்பம் நடத்தினார்கள். தமிழன் சகலவிதங்களிலும் கலைகளிலும் முன்னேறி உலகுக்கு எடுத்துக்காட்டான முன்னோடிகளாக வாழ வழிஅமைத்து நடத்திய பெருமை பெண்களுக்கே உரியது.

சுளகுகொண்டு புலிவெருட்டிய வீரப்பெண் தமிழ். களம் சென்று, தன் மகன் புறமுதுகுகாட்டி காயம்பட்டிறந்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன் எனச்சபதம் இட்டு வாளொடுசென்று பார்த்து தன் மகன் நெஞ்சிற்காயம்பட்டே இறந்தான் எனக்கண்டு ஈன்றபொழுதிலும் பெரிதுவந்தாள். தமிழ் வஞ்சிப்பத்தனால் வஞ்சிக்கப்பட்டு கோவலன் கள்வனெனக் காவலராற் கொலைபடக் கண்ணகிசீற்றங்கொண்டு ஒற்றைச்சிலம்புடன் அஞ்சாது அரசவை சென்று நீதிகேட்டு சிலம்பை உடைத்துக்காட்டி உண்மை நிலை நிறத்தி மன்னர் பரம்பரை அழிய மதுராபுரி எரியச்செய்தவர் கண்ணகி தமிழ்.

ஒளவையார், காக்கைபாடினியார், மங்கையற்கரசியார், திலகவதியார், புனிதவதியார் கற்றறிந்த பெருமாட்டிகளே . அருந்ததி, சாவித்திரி, நளாயினி, தமயந்தி, சந்திரமதி, நம்மினப்பெண்களே இன்னுமின்னும் புகழ்படைத்த தமிழினப்பெண்கள் கணக்கிலடங்கா. மாற்றார் வந்தனர். தமிழன் சகல முறைகளிலும் தாழ்விலாது ஆனந்தமாக வாழ்வதைக்கண்டு பொறாமையடைந்து கூடிக்கழுத்தறுத்தனர். அடுத்துக்கெடுத்தான்



படிப்பகம்

www.padippakam.com

புத்திபுகட்டி தம்வசப்படுத்தி தமக்கென உழைப்போராக்கினர்.

தமிழன் சமுதாயம் சிதைந்து அழிந்து வலுவிழந்து புலம் கெட்டு குடிகெட்டு குணங்கெட்டு இனங்கெட்டு நலங்கெட்டு பொருளாதாரம் சின்னாபின்னமாக்கப்பட்டு சீரழிந்த சமுதாயமாகி உயர்வுதாழ்வெனும் பாசிபடர்ந்து ஒற்றுமைகுலைந்து நாசமாகிப் பாழ்பட்டுவிட்ட சமுதாயமாகியது. சிந்தியுங்கள். ஜப்பானில் போடப்பட்ட அணுகுண்டினாலும் அடுத்துக்கெடுத்த இந்தக்குண்டு மிக மிக வேதனைக்குத் தமிழன் சமுதாயத்தை ஆக்கியது. பால்ய மணப்பழக்கம் உடன்கட்டை ஏறுதல் வீட்டில பெண்ணை பூட்டிவைத்தல் வீட்டிற்கே பெண் வெளிப்படப்படாது ஆணுக்கே அடிமை ஆணின் வீட்டாருக்ககடிமை சீதனம் இன்னோரென்ன பல புதிய பழக்கங்களைப்புகுத்தி சுதந்திரமான சமுதாயத்தை பல வழிகளிலும் முன்னேறவிடாது கீழாக்கி தாழ்வுமனப்பான்மை அடையச்செய்தனர்.

பால்ய மணத்தால் பெண்கள் மொட்டையடித்து முக்காடிட்டனர். பெண்கள் உடன் கட்டை ஏறப்பழகினர். பெண்களைப்பூட்டிவைத்து தலைவனது வேலைகள் மாமன் மாமி மைத்துனர் மைத்துனிமார் வேலைகள், சீதணம், நகைகள், பணம், இனாம், இப்படியே பெண்களை கொல்லாமல் கொல்லப்பழகிவிட்டனர் கல்வியில்லை இத அணுகுண்டா? இல்லையா? சிந்தியுங்கள். பெண்ணை பெற்றவனையும் பித்தனாக்கினர்.

சுதந்திரமான சீரான வீரமான சமுதாயம் பெண்களால் வலு இழந்த சீரழிந்து உயர்வு தாழ்வாகி மாறுபட்டு, வேறுபட்டு இனமே அழிந்து கொண்டிருக்கிறது. இவையெல்லாம் பெண்களில் தான் தங்கியிருக்கிறதென்பதை, இன்னும் அறியாமலிருக்கிறோமே.

புதிய தமிழன் சமுதாயமாக வேண்டும் பழைய உருக்கி உழுந்து போக்கவேண்டிய மாற்றாரால் புகுத்திய பழக்கவழக்கங்களுக்கு குழிதோண்டிப் புதைத்துப் பெண்களை நாங்கள் விடுதலை செய்யவேண்டும். இப்பழக்கங்கள் நம் சமுதாயத்தில் வேரூன்றியதாலேயே இனத்தொகையும் குறைந்தது. சிந்தியுங்கள் இன்னம் காலம் வேண்டுமா? வீட்டிற்குள்ளே பெண்களை பூட்டிவைத்த அந்த விந்தை மாயமாய் மறைந்து விட்டார் என்னார்.

பெண்ணைக் கொண்டு பொருளைக்கொண்டு பெண்ணை மதியாதே. பண்பைப்பார். அன்பைப்பார் படிப்பைப்பார் உன் கண்ணுக்கினிய கண்ணைப்பார். ஒன்றையொன்று கவ்வப் பார்த்தால் உடனே கையேற்றிப்பார். சாதி வேண்டாம் சமயம் வேண்டாம் பொன் வேண்டாம் மண் வேண்டாம் பணம் வேண்டாம். இனாம் வேண்டாம். கைறேற்று நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க முன்வாருங்கள் வாலிபரே. சிந்திப்பாய் கையிருக்கு, காலிருக்கு, வாயிருக்கு, மெய்யிருக்கு உழைத்துண். உண்மையான அன்புடன் ஒன்றுபட வாழ்வுக்கு நிகருண்டா. உவமானமுண்டா.

நற்குடிப்பிறந்தோர் கோடிபெறுவர். வாழவழியற்றோரை வாழவைக்கவேண்டும். நலிவுற்றோரை நலமாக்கவேண்டும். சீதணமற்றோரை சீராக்கவேண்டும் பாழும் சமுதாயத்தில் பண்பட்டவர்களால் பழுதாக்கப்பட்ட பெண்கள் வாழக்கூடிய விதைவைப்பெண்கள் வாழ்வழிக்கவேண்டும். குற்றம் கண்டு குறைகூறி ஒதுக்கப்படாது இப்படி நடந்தால் பிழைவிடாததோர் புதிய சமுதாயம் அமைக்கலாம். வாலிபரே சிந்திப்பீர்.


படிப்பகம்

www.padippakam.com

சீதனம் வேண்டாம் அதை அறவே நீக்குங்கள் வாலிபரே சீதனம் கேட்டுப் பொருளாதாரம் கீழ்மேலாகிறது. உயர்வு தாழ்வாகிறது. சமுதாய பங்கீடுகள் பிழைக்கிறது. களவுகள் நடக்கிறது. பொய் புரட்டுக்கள் நடக்கிறது. வாழ வழியற்ற பொருளற்ற பெண்ணின்வீட்டில் பாரமாகின்றனர். அந்நியர் பழக்கி நம்மைப் பாழாக்கி நம்மைத் தமக்காக்கிய கொடிய பழக்கங்களை இன்று மறியாதிருக்கலாமா. சிந்தியுங்கள். பெண்களை விடுதலையாக்கினால் நம்மினம் விடுதலையாகும் சீதனம் வேண்டாம் நம் சமுதாயத்தை பாழாக்கும் சீதனம் வேண்டாம் எல்லாரும் வேண்டாமென்றால் வேதனையேயில்லை.

வருங்கால வாலிபரே சிந்தியுங்கள். செயலாற்றுங்கள். வாழ்வழியுங்கள். புதியதோர் சமுதாய உலகம் செய்யுங்கள்.

வருங்கால நங்கையரே நீங்களும் பழைய சீரற்ற ஊறிப்போன பாழ்பட்ட சமுதாய சீர்கேடான பழக்கவழக்கங்களை மாற்றிச் சாவு மணியடித்து, எல்லோரும் வாழக்கூடிய பணத்தால் ஏற்றத் தாழ்வான சமுதாயமாக்காது. பணத்திற்கு மதிப்புக் கொடுக்கும் வாலிபருக்குச் சாட்டையடித்து நான் வாழ்ந்தாற் போதுமென்ற குறுகிய நோக்கம் விட்டு நலிந்த மெலிந்த குறைகூறிய குறை கண்ட விதைவையான எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழக்கூடிய முறையாக்கிப் புதியதோர் புதியதோர் உலகம் ஆக்கும் வீரப்பெண்மணிகளாகத் திகழ்ந்து வாழ்வமைத்து நல்லதோர் சமுதாயம் அமைக்க உதவுங்கள். நம்மை நம் இனத்தை நம் மண்ணை நம் மொழியை விடுவிக்க வந்த நம் தெய்வத் தலைவன் தந்த சீதனம் ஒழிய வேண்டும் என்ற சட்டத்தை நம் தமிழ் சமுதாயம் நூற்றுக்குநூறாய் ஆதரிக்க வேண்டும்.

நல்லதோர் சமுதாயமாகிவிட்டால் பின்னைய சமுதாயம் உலக எடுத்துக்காட்டான நல்லதோர் சமுதாயமாகிவிடும்.

இரு பாலாருமிதிற் சிந்தனை செய்து தீரமுடன் செயலாற்றுங்கள்.

தமிழன் சமுதாயம் சீரழிந்து சீர்கெட்டுப்போனது சீதனத்தாலேயே. அன்றைய தமிழன் பெண்ணுக்கு கையுறை கொடுத்தே கையேற்றான். மாற்றான் போட்ட மாய வலையை அறுத்தெறிந்திருப்பது அறிவீனம் அறுத்தெறியுங்கள். தலைவன் சொல்லை சிரமேற்றிக் கொள்ளுங்கள். ஏனையோர் தங்களுக்காக எங்களையாக்கி எங்கள்மேல் தாங்கள் சவாரிவிட்டு தாங்கள் உல்லாசமாய் வாழ எங்களைப்பிரிந்து உயர்வு தாழ்வாக்கி கூறுபோட்டு மாடாக்கிப் பாடாக்கி எங்கள் உழைப்பை உறிஞ்சும் கூட்டத்தாருக்கு சாவுமணியடிக்க இன்னம் காலம் வேண்டுமா?

இன்றைய வருங்காலச் சமுதாயமே இதை சிந்தித்துந் செயலாற்றிச் வீறுகொண்ட வீரமிக்க பழைமையான தமிழனைப்போல அதிலும் புதுமைமிக்க சமுதாயத்தை உருவாக்கி நாடாக்கி நலமுடைய கொள்கைகளை உடையவர்களாக்கி, அகிலமெல்லாம் போற்றும் உத்தம மக்களினமாக வாழ வழிவகுப்பீர். நம் பெண்ணினம் ஓங்க உயர்க, வாழ்க, நம்மினம் வாழ்க நம்நாடு வாழ்க நம்மை விடுதலை அடையச்செய்து நமக்கு நாடுபெற வந்த நம் பெருந்தலைவன் வாழ்க. நம் தமிழ் ஈழம் வாழ்க.



படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் அலைகள்

*மக்கள் ஆட்சி மக்களுக்காக மக்களால் ஆக்கப்பட்ட மக்களால் நடத்தப்பட வேண்டும் வேற்றுமையை விட்டு ஒன்றுபட்டு ஒற்றுமையாக ஓட்டைப் போட்டால் உரிமைகள் தேடிவரும் ஓடிவரும் அது கூடிவரும்.*
*ரஷ்யாவின் தலைமையாயிருந்த கொபர்சேவை நம்பிக்கைத்துரோகம் செய்து யெல்ஸ்டின் கைப்பற்றினான். அந்தோ அவன் படும்பாடு சோவியத் சாம்ராச்சியமே சுக்குநூறாகித் தனித்தனி இராச்சிய நாடுகளாகி கொம்யூனிசமும் பஞ்சாய்ப்பறந்து ரஸ்ய நாடும் ஆட்சிசீரழிந்து பொருளாதாரம் சீரழிந்து நாடே பெரிய கேவலமாகி அல்லோலகல்லோலப்படுகிறது.*

*உலகில் சீராகச் சிறப்பாக வல்லாதிக்கமாக இருந்த நாடு வெள்ளையர் சூழ்ச்சியால் பிரித்தாளும் தந்திரத்தால் தங்களுக்கு எதிரிபோல் இருந்த நாட்டை இன்று இந்த நிலைக்காக்கி உலகில் தாங்களே முதன்மையானவர்கள் என்ற நிலையை ஆக்கிவிட்டார்கள். இவர்கள் எந்தநாடு முன்னேறினாலும் அந்தநாட்டை முன்னேறவிடாது தங்கள் ஆதிக்கத்துக்குப் பங்கம்வராது காப்பதில் குள்ளநரிகள்தான்.*

*கள்ளங்கபடமான அதிகார சேவையால் முன்னேறி இலங்கையின் தலைவனாகினான் பிரேமதாசா. ஈற்றில் கண்டதுண்டமாய் துண்டுகளே கண்டெடுக்கமுடியாததாய் குண்டினால் 1.5.93 ல் கொலை செய்யப்பட்டான். சமுதாயமே இதையறிந்து மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்று நினைத்துத் தூயமனத்துடன் சேவைசெய்யுங்கள்.*

*1987ல் இலங்கையின் பாதுகாப்பு மந்திரியாக இருந்த அத்துலத்முதலி தமிழ்மக்களை அழிக்கவேண்டுமென்று துவேசம் கொண்டு வடஇலங்கையில் வடமராச்சியில் ஒப்பிரேசன் லிபரேசன் என தானே முன்னின்று இராணுவத்தைக்கொண்டு 1987ல் பல்லாயிரக்கணக்கான தமிழரைக்கொன்று குவித்து இந்திய இராணுவத்தையும்*



படிப்பகம்

www.padippakam.com

வரவழைத்து கோடானுகோடியான பொருளாதாரத்தையும் கல்வியையும் சீரழித்தான். ஈற்றில் 23.4.93 ல சுடுபட்டிறந்தான். தீர்ப்பை பார்த்தீர்களா?

மகாவலி அபிவிருத்தி மந்திரி காமினிதிசாநாயக்கா தென்கீழ் ஆசியாவிலே திறம்பட்ட முதல்நூல் நிலையம் என்ற தமிழரின் இதயம் போன்ற நூல்நிலையத்தை தானே முன்னின்று காடையர்களைக்கொண்டு எரிப்பித்தான். அத்துரோகிக்கு என்ன நடந்தது. சூடுபட்டிறந்தான். ஆண்டவன் தீர்ப்பை பார்த்தீர்களா?

பதவிமோகம் கொண்ட பண்டாரநாயக்கா திடீரெனத் தமிழினத்தை துவேசமாக்கிப் பதவிக்குவந்தான். ஈற்றில் துப்பாக்கியால் சுடுபட்டிறந்தான். வாளை எடுத்தவன் வாளாலே அழிவான் என்ற யேசுநாதரின் வாக்கியம் எவ்வளவு உண்மை.

மக்களே வருங்கால சமுதாயமே ஒன்றுபட்டு ஒருவருக்கும் தீமையற்று உண்மையான தூயமனசேவை செய்வதே சமுதாய பேதமற்று இனமத பேதமற்றுச் சகலரையும் முன்னேற்ற உழையுங்கள். கபடநாடகமான தலைமை கனகாலம் நில்லாது.

உங்கள் விஷ்கிப்போத்தலில் இருப்பது எங்கள் உரிமையும் வியர்வையும் உங்கள் மதுக்கிண்ணங்கள் எங்கள் இரத்தத்தால் நிரப்பப்பட்டுள்ளது. அடக்கி ஒடுக்கி உழைப்பை உறிஞ்சப்படும் இலங்கை இந்தியத்தமிழினம் படும்பாடு சொல்லும் தரமன்று.

ஓட்டை வாங்க ஒன்பதாகவும் வளைந்து விழுவாங்கள். ஓட்டுப்போட்டுப்பதவி வந்தவுடன் நிமிர்ந்துநின்று இந்தியத்தமிழருக்கு குழிதோண்டுவார்கள். அன்றுமுதல் இன்றுவரை நடக்கின்ற காரியம்.

நன்றாகச் சிந்தித்து மலைநாட்டுத் தமிழினமே ஓட்டுப்பலந்தான் நம் பெலன் என்று ஒன்றுபட்டுத் துண்டுபடாது உரிமைகளை நாடிப்பெற்று உறுதியுடன் வாழத்துணிவுகொண்டு உறுதிபண்ணுங்கள்.

முன்னேற வேண்டுமானால் உங்கள் கால்களால் நடந்து போங்கள். பிறர்முதிகின்மேல் சவாரி செய்யாதீர்கள். இந்திய மந்திரி நெஞ்சுரம் கொண்ட வல்லவராய் படேல் கூறியது வானமே இடிந்து வீழ்ந்து பூமியே இரண்டாகப் பிளந்தாலும்சரி லண்டன் சென்ற பிரதிநிதிகள் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி அரசியல் நிர்ணயசபை கூடியே தீரும். எவருக்கும் எந்நாட்டுக்கும் சுதந்திரம் நிரந்தரமாகவேண்டும். ஒருவனை ஒருவன் அடக்கிஆண்ட காலம் அப்பாலுக்கப்பால் இக்காலம் முடியாது. தமிழர் நெல்லிக்காய் மூட்டைகள் தென்னங்குலையல்ல (பாராளமன்றத்தில் தமிழன் உடைத்த கொழும்புச் சோடாப்போத்தல் காஸைப்போல ஜோன் கொத்தலாவல சுதந்திரம் எமது உரிமை. அதை அடைவது எமது கடமை. நம் உள்ளத்து ஊழலை அகற்றி ஒன்றுபட்டு நம் உரிமையை வென்றெடுக்க நான் என்ற எண்ணம் நீங்கி நாங்கள் என்ற எண்ணம் என்று வருமோ அன்றுதான் விடுதலை. நம் இலங்கை அரசாங்கத்தில் எத்தனை எத்தனை குத்துக்கரணங்கள் மூடுமந்திரமடா. நம் அரசாங்கம் துரும்புச்சீட்டாட்டம் மாதிரி இருக்கிறது. மக்களால் மக்களுக்காக ஆக்கப்பட்ட மக்கள் ஆட்சிதான் ஜனநாயகம். நம்நாட்டில் சனநாயகம் சர்வநாயகமாகிவிட்டதால் சர்வநாசமான ஆட்சியே நடக்கிறது. சுரண்டிப்பிழைக்கும் சுயநலவாதிகளிடம் அதிகாரம் இருந்தால் பாதாளத்துக்கே விழுகிறது. பரநலம் படைத்த



படிப்பகம்

www.padippakam.com

பண்புள்ள மக்களாட்சி என்று வருமோ அன்றே விமோசனம்.

பெரியமீன்கள் சிறிய மீன்களை உண்டுவாழ வாழச் சிறிய மீன்கள் இல்லாது போகப் பெரிய மீன்கள் இரையில்லாது சாகவேண்டிய காலம் வரலாம். எல்லாமீன்களும் ஓரளவில் சமச்சீராக வாவது வாழக்கூடிய நிலையுண்டானால் நாடும் சமுதாயமும் ஓரளவு வாழலாம். உ-ம் இங்கிலாந்து பெரிய மீன்களிடம் மறைமுகமாக வார்ந்து சிறிய மீன்களும்வாழவிட்டு சிறிய மீன்களிடம் பெரிய மீன்கள் வார்ந்து வாழவிட்டு இப்படியே சுழல்சக்கரமாக இருபகுதியாரும் வாழுகிறார்கள். முதலாளித்துவ சனநாயக ஆட்சியாக ஆளுகிறார்கள் இங்கிலாந்தில்.

அப்பனே முருகா நம் நாட்டில் பாரதி கண்ட சமுதாயம், மகாத்மாகாந்தி கண்ட கிராம இராச்சியம் ஏழையென்று எவருமில்லை இந்நாட்டிலே என்ற ஆட்சி, ஈவாருமில்லை இரப்பாருமில்லை என்ற நிலையாட்சி, யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற ஆட்சி, ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்ற ஆட்சி என்றுவருமோ அன்றுதான் நம்நாடு நம்நாட்டுமக்கள் நலமடைவார்கள். சூட்டோடு சூடாய் அழிவோடு அழிவாய் இறுதி இறுக்கமான முடிபு வரும்வரை முன்வைத்த காலை பின்வைக்காது இந்த அளவுக்கு வந்து பின் ஆகப்படாது இன்னும் துணிவுடன் போராடு. நம்மவன் விட்டபிழையால் நம்மவனுக்குச் சங்கடம் வளருது. இனம் அழியுது. சிங்களவன் இன்றும் நம்மவனைப்பிரித்து நம்மவனைக்கொண்டு ஆயுதம் கொடுத்து நம்மவனை அழிக்கிறான். இதென்னகாலம் இந்தநிலை கண்டும் இனம்படும் துன்பம் கண்டும் நம்மினம் ஒன்றாகுதில்லையே. இதென்ன சாபமா. இனத்தை இனம் அழிப்பது நீதியா. ஒன்றுபட்டு நம் உரிமையைப்பெறவேண்டும். அந்தநிலை ஆகவேண்டும். ஒன்றுபடாவிட்டால் நம்இனம் அழிவுதான். சிங்களவனுக்கு வாசியாகும். இந்தநிலைமாறி நமக்கொருமீட்சி, துன்பத்துக்கு தக்க இன்பம் கட்டாயம் கிடைக்கும். நம்பிக்கைத்துரோகிகள் இனத்தை அழித்த இனத்துத் துரோகிகள் நிலை என்னாகுதோ.

நம்மவன் விட்டபிழையால் நம்மினம் நாடுநாடாகி உலகநாடெல்லாம் அகதிகளாய் அனாதைகளாய் வெளியேறி அலைகின்றாரே. எம் நிலை இங்குமில்லை அங்குமில்லை எங்குமில்லை என்றாகுமே. அந்தந்த நாட்டார் ஓர்கால் இவர்கள் இந்நாட்டவரில்லை என்று ஏற்றியும் அனுப்பும் காலம்வரலாம். தனக்கென்றொரு நாடு அது சொந்தநாடு வேண்டும். அதைவிட்டு இனமின்றி இடமின்றி ஆருக்காலும் உழைக்கலாமா சிந்தியுங்கள். கை கட்டி வாய்பொத்தி காலம் கழிக்கலாமா? இனமின்றி மொழியின்றி மதமின்றி நிறமின்றிக் கலப்படமாகி கரைய வேண்டியதுதான். நம் தாய்மொழியாம் தமிழைமறந்து வீட்டிலே தந்தை தாய் மக்களோடு தமிழில்பேச வெட்கமென்று ஆங்கிலத்தில் பேசிப்பழகுகின்றாரே. இதென்ன கோலம். பின்னவர் நம் தாய் மொழியாம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி தெரியாதுபோகிறாரே அவர்நிலை என்னாகுமோ அறியோம்.

மணிகட்டிக் கொடிகட்டிச் செங்கோலோச்சித் தரணியாண்ட முடிமன்னர் பரம்பரை மண்டியிட்டு கீழ்ப்பட்டுப்போனோமே. உலகில் தமிழனுக்கென்றொரு நாடிருக்கா. உலகிலுள்ள இனமெல்லாம் வாழ நீ பாழாகி உழைத்துக் கீழாகின்றாயே. உனக்கு உரிமையோடு ஓர் இஞ்சி நிலமிருக்கா? சிந்தனை செய். இடமின்றி இனமின்றி போனால் நம் மணமின்றி போமே. நம்இனியமொழி இன்றிப்போமே. உலகமெல்லாம் இருக்கும் தமிழரெலாம் ஒன்றுபட்டால் நாடாகாதா ஆகும். ஒன்று படுவோம். நாடு பெறுவோம். நலம் பல காணுவோம். விட்ட, விடுகின்ற பிழைகளை விட்டு ஒன்றுபட்டு



படிப்பகம்

www.padippakam.com

ஒத்துழைத்து வெற்றிபெற்று நாடுகண்டு வீறுகொண்டு வீரமிக்க தமிழராகி, உலகமெல்லாம் போற்றும் உத்தம இனமாகி வாழவேண்டும்.
சனநாயக ஆட்சி பெரும்பான்மையான ஆளுங்கட்சி அதிகமாகினால் அது சர்வாதிகார ஆட்சியாகிவிடும். உ-ம் ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலம் அப்போ கொடுங்கோல் மன்னராட்சியிலும் கொடுமையாகிவிடும். உ-ம்- ஜே.ஆர். சனநாயக ஆட்சி சீராக நடக்க பலம் கொண்ட எதிர்க்கட்சி வேண்டும்.

நம் முன்னவர் விட்டபிழையை மூடி மறைக்க முடியாது. சரித்திரம் சொல்லும். அடைபட்ட தமிழினம் உடைபட்டுப் பொங்கி ஓடுகின்றது. ஆங்கிலர் பிழையா சிங்களர் பிழையா தமிழர் பிழையா சிந்தி. சுயநலம் படைத்த ஒரு சிலர் விட்டபிழையால் இடம்போச்சு இனம் போச்சு ஏன் எல்லாம் போச்சு. தமிழன் ஐம்பதாண்டு பின்னாச்சு. சிங்கள நூற்றாண்டு முன்னாச்சு. யோசி இன்னும் மாற்றானோடு இருக்கின்றாரே. காட்டிக்கொடுக்கின்றாரே. எளியவர் நமக்கென்றென்றொரு நாடு கிடைத்தாற்றான் நாமுய்யலாம். வாழலாம். நாடில்லாவிட்டால் உலகநாடெல்லாம் ஓடி யாரோ வாழ மாடாயுழைத்து மாளவேண்டியதே. சிந்தியுங்கள். செயற்படுங்கள். தமிழினமே ஒன்றுபடுங்கள்.

நம் நாட்டில் 1990 ஆனி 11ம் திகதி முதல் நம்இனம் சொந்தம் படும்பாடு கெடும்கேடு வாயினால் சொல்ல முடியாது. எழுத்தாலும் எழுத முடியாது. சுயநலம் படைத்தவர் விட்டபிழையால் படும்பாடு தமிழன் கணக்கிலடங்காது. இன்னும்தான் மாற்றாருடன் கூடி இனத்தாரை அழிக்கும் கயவர் இருக்கிறார்களே. வெட்கம். சுதந்திர வேட்கைகொண்டு உயிராயுதமாகப் போராடுகிறார்களே. இதையாவது அறிவிலிகள் நினைக்கிறார்களில்லையே. உண்மையுடன் உறுதியுடன் சுதந்திர விடுதலையடையப் புலிகளும் புலித்தலைவனும் வெற்றிகாண்பான். உண்மை தீர்ப்பளிக்கும் தமிழன் விடுதலை அடைந்து தமிழீழம் காண்பான். பெருவாழ்வடைவான்.


படிப்பகம்

www.padippakam.com

# தமிழன் வரலாறு

அண்டம் தோன்றி அதிலோர் உருண்டையான நம் உலகம் தோன்றிக் கல்தோன்றிக் மண்தோன்றிய காலத்தே முன்தோன்றி மூத்தகுடியானவன் தமிழன். தமிழனென்றால் இனியவன் இவன் மொழி தமிழ் தமிழென்றால் இனிமை என்பது கருத்து.

உலகின் உயிரினத்தோற்ற வளர்ச்சிமூலமாகக் குரங்கினமாகிக் குரங்கின் வளர்ச்சிமூலமாக விரித்தியடைந்து மனிதனாகினான். என விஞ்ஞான இயலாளர் கூறுகிறனர்.

மெஞ்ஞான இயலாரும் பல பிறப்புக்கள் பிறந்தே அதன் மூலம் வளர்ச்சியடைந்து மக்களினமாகி அதில் வளர்ச்சியடைந்து அறிவடைந்து பக்குவநிலையாகி ஆண்டவனை வணங்கி அருளைப்பெற்று ஆண்டவனுடன் இரண்டறக்கலந்தான் என்றனர்.

இவ்வாறான மக்களின் நம் முன்னையோர் ஆரம்பத்தில் காடுகளில் காய் கனி கிழங்கு வகைகளை உண்டு காலம் களித்து வந்தனர். காலம்செல்லச் செல்ல அநுபவம் ஏற்பட அறிவும் வளரக் கையசைத்துக் கதைத்தவர் வாயசைத்துக் கதைக்கத் தொடங்கினர். அகர முதலாக அம்மா, அப்பா, அப்பு, ஆச்சி என்ற தொடக்கமாகப் பேசத்தொடங்கினர். இதுவே தமிழ் மொழி. அது இனிய மொழி. அது பேசியோர் தான் தமிழர் அவர்கள் இனியவர் என்றவாறாம்.

திருவள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரத்து மேற்பட்ட ஆண்டே அகரமுதல எழுத்தெல்லாம் என்றார். இதைக் கொண்டு தமிழ் மொழி தொன்மையானது அது முதன்மையானது என ஊகிக்கலாம். தமிழன் இதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னாகவே வளம்பட்ட மொழியில் வளர்ச்சியடைந்த மக்கள் வாழ்ந்து பட்ட அநுபவ உயர்ச்சியடைந்த நிலையின் தரத்தை தன்னகம் அமைத்தே தன் நூலை ஆக்கியிருக்கிறார். அவர் காலத்திற்கு முற்பட்டே தமிழ் வள்மடைந்துள்ளது என்பது உண்மை. இனிய மொழி தமிழ் மொழி என்பதை "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என்றார் பின் வந்த பாரதியார்.

தமிழன் வாழ்வின் தரத்தை, அதன் உயர்ச்சியை அவன் வாழ்ந்த விதத்தை அவன் கலாச்சாரத்தை அவனது சட்டதிட்டங்களை, அவன் கண்ட கடவுள் முறைகளை இல்வாழ்க்கையில் வாழ்ந்த ஒழுங்கை, அவ்வழிமூலம் வீட்டின்பம் காணலாம் என்ற



படிப்பகம்

www.padippakam.com

பெரிய உண்மையை, இன்னோரன்ன பல உண்மைகளையும் வடித்துக்காட்டி ஈரடியில் குறட்பாவாக்கி என்றும் நிலைக்கும் வகையில் ஆக்கி இதுதான் தமிழன் வாழ்வின் சட்டப் பெட்டகம் எனப் பெருமை கொள்ளும்படி செய்து எக்காலம்வந்தாலும் அக்காலம்வரையும் அழியாததாய் ஆக்கிப் பெருமை கண்டார்.

வள்ளுவர் நூலின் மகிமையை கண்ட பல வேற்று மொழியாளரெல்லாம் தம்மொழியிலாக்கித் தாம் படித்து மகிழ்கின்றனர். இதைக்கொண்டு தமிழன் வாழ்வின் சிறப்பை ஆதாரங்களுடன் அறியக்கூடியதாகவே இருக்கிறது.

தமிழ் மொழி முதல் மொழி அது மூலமொழி என்றே மொழி ஆராட்சியாளர் கூறுகின்றனர். இவ்வாண்டு (1995) யூலை மாதத்தில் சென்னையில் பேரறிவு கொண்ட பட்டங்கள் கண்ட பல மொழி ஆராட்சியாளர் ஒன்று கூடிப் பல மொழிகளையும் பற்றிக் கலந்துரையாடி ஆராந்தனர். எல்லாமொமிகளிலும் தமிழ் சொற்கள் பல இருப்பதாய் ஒப்புக்கொண்டனர்.

இதைக்கொண்டு எல்லாமொழிகளுக்கும் முன்னதாகவே தமிழ் தோன்றி வளம்பட்டு ஆளுமைப்பட்டு பிறமொழிகளில் கலந்திருக்கவேண்டுமென நம்ப இடமுண்டு தமிழ் காலத்தால் கடந்தது. எப்போதோன்றியது எங்கே தோன்றியது என்பது ஆராட்சிக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது. தமிழன் கண்ட தமிழ் தமிழன் கண்ட இந்துசமயம் தமிழன் வாழ்வு இவையெல்லாம் காலம் கடந்ததாய் ஆராட்சிக்குரியதாகவே இன்றுமிருக்கிறது.

காடுகளில் வாழ்ந்தோர் முன்னேறி நதிக்கரைகளை நாடிக் குடியேறிப் பயிர்தொழில் செய்து வாழ்ந்தனர். அவ்வாறான காலத்து மத்தியாசியாவில் இருந்து தமிழன் இமாலயக் கைபர் கணவாய் வழியாக இந்திய இந்து நதிக்கரையோரம் குடியேறினர். இது இப்போது பாகிஸ்தானாக இருக்கிறது.

தமிழன் இங்கே குடியேறி வாழ்ந்து முன்னேறிய அடையாளச் சின்னங்களை மொகன்சதாரோ, கரப்பா எனும் இடங்களில் அகழ்வாராச்சியாளர் அகழ்ந்து ஆராந்து தமிழன் வாழ்வின் தரத்தை நிலை நிறுத்தினர். இந்து நதிக்கரை குடியேறியதால் இந்துக்கள் என்றும் அவன் கண்ட சமயம் இந்துசமயம் எனவும் இந்து நாகரீகம் எனவும் அது தமிழனது என்றும், கண்டு பல்களைக்களகங்களில் உலகமெல்லாம் இந்து நாகரீகம் எனப்பெயரிட்டு ஆராட்சிசெய்து பட்டங்கள் பெறுகின்றனர்.

பயிர்த் தொழில் மூலம் ஓய்வுநேரம் அதிகமானதால் சிந்தித்துத் தம்மை மேலாக்கித் தம் மொழியை மேலாக்கித் தம் சமயத்தை மேலாக்கி நாகரீக முதிர்ச்சி அடைந்தனர். மாட மாளிகைகள் கோவில்கள் கூட கோபுரங்கள் கட்டி வடிகால்கள் அமைத்து சீரோடு சிறப்போடு வாழ்ந்தார்கள்.

இறைவனே நம் மொழிக்கு இலக்கணம்கண்டான் இதைப்பின்பற்றி அகத்தியர் அகத்தியம்கண்டார். இதைப்பின்பற்றித் தொல்காப்பியர் தொல்காப்பியம் கண்டார் அவரதை எழுத்து சொல் பொருள், யாப்பு அணி எனப்பகுத்தமைத்தார். இதைப்பின்பற்றிப் பின்னுள்ளார் வழிநூல்களாகப் பல இலக்கிய நூல்கள் பல அறிஞர்களால் ஆக்கப்பட்டுத் தமிழ் வலுவடைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இலக்கண விதிகளுக்கமைய இலக்கியங்கள் அமைத்தனர். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசிவளையாபதி என ஐம்பெருங்காவியங்கள் கண்டனர். கம்பராமாயணம், வில்லிபுத்தூரார் பாரதம் என வரலாற் இலக்கியங்கள் இன்னுமின்னும் பல நூற்றுக்கணக்கான இலக்கிய நூல்கள் எழுந்தன. பண், பரதம், நாட்டியம் ஆகியவை கண்டு இயற்தமிழ்,இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழையும் வளர்த்தனர். நீதி கட்டிடயியல் வாணியம் வைத்தியம் சோதிடம் மாந்திரீகம், சமூகயியல் அரசியல் வரலாற்றியல், விஞ்ஞானம் முதலிய பல கலைகளெல்லாம் பல நூல்களாகி வளம்படுத்தினர் மெஞ்ஞானக்கலையையும் நூல்கள் பல ஆக்கி வளம்படுத்தினர்,. திருமந்திரம், தேவாரம், திருவாசகம், சேக்கிழார் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிசையாடற் புராணம், சிவ்ஞான பாடியம் சித்தியார் இன்னோரன்ன பல சமய நூல்கள் எழுந்தன.

ஒப்பாருமிக்காருமில்லாத தனிப்பட்ட இனமாகத் தமிழன் சகல விதங்களிலும் முன்னேறி இந்து நதிக்கரையிலே இந்துக்கள் என்ற பெயரோடு வாழ்ந்தனர்.

நவநாகரீகமான பரித்தி உடைகள், கண்டாரை கவர வைக்கும் பட்டுடைகள் அதற்கென மெருகூட்டும் வண்ணச்சாயங்கள் இன்னும்மெருகூட்டும் சருகைகள் பொருந்த உடைகள் தயாரித்து அணிந்தனர். இன்னும் எவ்விடையத்திலும் அவ்வாறு அமைக்கமுடியாத உடைகள் கை விரல் வண்ணத்தில் ஆக்கினர். எத்தனை தரம் ஒரு பெண் சுற்றி உடுக்கினும் உள்ளுடை தெரியும்பட்டாடைகளை கைவண்ணத்தாற் செய்து நுட்பத் தொழிலாளர் உடைய இனம் நம் தமிழினம். ஆங்கிலேயர் ஆட்சிகொண்ட போது இவ்வித நுட்பத்தொழிலாளர் கர விரல்களெல்லாம் துண்டித்தான். என வரலாறு கூறுகின்றது. இன்றுமின்னும் கரங்களால் பட்டுடை செய்து கட்டியங்கள் கூடுறும் பட்டினங்களாக பெனாரிஸ், பெங்களூர், காஞ்சிபுரம் இருக்கின்றன. பெங்களூர், காஞ்சிபுரம், பெரானஸ் ஓரியினல் என்றால் பெறுமதி விரும்பியே வாங்கியணிகின்றனர்.

ஆரியர் வந்தனர் கிற்றைச்சாதியினர்தான் முதல் இரும்பாயுதம் கண்டனர். அவர்களிடம் இரும்பாயுத உபயோகமறிந்த ஆரியர் இரும்பாயுதங்களைக் கொண்டு தமிழன் வாழ்ந்த சீரைச் சிறப்பை செழுமையாக்கி பெருமை கண்டனர். தாக்கினர். இருமஇபாயுதம் தெரியாத தமிழன் வெருண்டான், பயந்தான், பின்வாங்கினான். மிக இலேசாக த்தம் மடிப்படித்தினர். நலமெலம் கொண்டனர். புத்தியைப்பாவித்து நாதிகளைக்கினர் மாறுபடுத்தினர். கூறுபடுத்தினர் தாறுமாக்கினர் வேறுவேறாக்கினர் கூட்டங்கூட்டமாக இந்தியா முழவதும்பரவி பல இடங்களில் குடியேறினர். தமிழ் திரிபுபட்டது பல மொழியாகியது பல நாடாகியது பல இனமாகியது தமிழன் உயர்சி தாழ்வானது வழர்ச்சி குன்றியது தமிழன் முன்னே போக அவன் பின்னே போய் அன்றும் இன்றும் கறந்து கொண்டே வாழ்கின்றான்

தமிழனை கூறுபடுத்தி வேறு வேறு நாடாக்கி ஒற்றுமையை கொடுத்து பலவீனப்படுத்தித் தம் மேலானவர் என்றும் தமிழர் கீழானவர் என்றும் போதித்து ஆதை சாதித்து தமக்குத்தமிழர் உளைப்பெல்லாம் இலேசாகக் கிடைக்கக் கூடியவாறு பழக்கங்களை அமைத்துப் பாழ்படுத்தி என்றும் உயரமுடியாதவாறு எக்காலத்தும் தம் இனத்திற்கு எம்மினம் தெரிந்தும் அறிந்தம் அறியாதும் வசூல் செய்யக்கூடிய முறைகளை ஆக்கிக் தங்களை வணங்கினால் தங்களுக்குக் கொடையளித்தால் முத்தி நிட்சயம் என்றெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

நம்பச் செய்தனர். தன்கையில் காசியில் நீராடினால் காசியில் அஸ்தி போட்டால் கண்ணியமாகத் தங்கட்குத்தானம் செய்தால் மோட்சம் நிட்சயம் என்றாக்கி நம்பச்செய்தார்கள். என்னே இவன் கொடுமை. பல்ஆயிர ஆண்டுகளாகியும் இவர்களை இன்னும் அறிவாரில்லையோ. அட கடவுளே இந்த நவீன சமுதாயத்திற் கூட கடைவுடன் கை எடுத்துக் கும்பிடுகின்றாரோ. பத்து நாட் பட்டினி கிடந்து தொகுத்து அவன்வண்டி ஓ. வடிவமாகப் போய் கூட்டிவந்து தொண்டனிட்டுக் கால்மடித்து கை மடித்து கையைக் கைக்குள்ளாக விட்டு கடமை செய்வித்து காய்வகை கறிவகை, இலைவகை, கிழங்கு, அரிசி, பச்சையரிசி, இஞ்சி, தேன், நெய், உடைவகை, நல்லெண்ணை. அரப்பு, தேசிக்காய் கொடைவிழக்கு பாய் தலையணை செம்பு, கைப்பிரம்பு, முல்லை முசுட்டை பிரண்டை, காசு, பணம் இவையெல்லாம் கொடுத்து அட்டாங்க வணக்கம் செய்து என் பூர்வ புண்ணியமெனக்கு வாய்த்துவிட்டதென நம்பி அவன் பொருட்களை கொண்டு போக ஆளும் அனுப்பி மாளுகின்றோமே தாழுகின்றோமே இன்னும் புத்திவரவில்லையே இதை நினைக்கவே கவலையாக இருக்கிறதே.

இவர்கள் படையெடுப்பால் பல இனங்கள் தோன்றின பல நாடுகளாகின. பல மொழிகளாகின ஆனால் சமயம் மாறவில்லை. எல்லா இடங்களிலும் கோயில்கள் மக்களைக்கொண்டு கட்டுவித்தான். கட்டியவன் வெளியே அவன் உள்ளே அவன் மேலே இவன் கீழே சாமியைக் காணக் காசு, சாமியை வணங்கக் காசு அவன் வாயால் இரண்டு சொல் சொன்னாலோ சொல்லவில்லையோ. காசு இப்படி ஏமாற்றி மிக இலேசாக வாழ ஆயிரம ஆயிரம ஆண்டாய் அணாப்புக்கு எடுபடுகின்றோமே. இது என்று மாறும். காலம்பதில் சொல்லாதா? கடவுளை நம் முன்னே கண்ட கடவுள்தானே. நம்மொழியில் கடவுளைக்கண்ட சாதி. இப்போ ஏன் வேற்று மொழியில் பூசை அரிச்சனை. இவைகள் திருந்தவேண்டும். சமுதாயம்இரத்தத்தோடு ஊறிய விடயங்கள் சாக வேண்டும் ஈவதை ஏழைக்கு ஈயுங்கள். ஏமாற்றம்அடையாதீர்கள். ஏழைக்கீந்தால் ஏழ்பிறப்பும் தீயவை தீண்டா. இது முற்றிலும் பெரிய உன்மை. எத்தனை சாதியால் எத்தனை செய்தும் அத்தனை வாதிக்கும் நம் நம் உழைப்பைக் கொடுத்து நம்உயாச்சி குன்றிய தன்றி நமக்குநாடற்றதன்றி தமிழினம் அழிவதில்லை. தமிழ் அழியவில்லை. அவன் சமயம் இமயம் முதல் குமரிக் கண்டம் வரை ஏன் உலக நாடுகளிலும் கட்டியங்கள் கூறிக் கொண்டே வாழ்கிறது என்னும்எனக்கு வாழ்வுண்டு என்று அறைகூறுகின்றது.

ஓடி வந்த ஒரு பகுதியினர் தென்னிந்தியாவில் குடியேறினர். விட்டானா ஆசியன் இவர் பின்னே இவர் பின்,னே ஆரியரும் தொடர்ந்தனர். பல நாடுகளாகிப் பல இனத்தவராகிப் பல திரிபட்ட மொழியினராகிப் வாழ்ந்தாலும் சமயம் ஏறக்குறைய இந்து சமயமாகவே வாழ்கின்றனர். இந்து இந்து மக்கள் நாடு இந்து நாடு என்ற கருத்தினாலேயே இந்தியா என்ற பெயராக அமைந்திருக்க வேண்டும் நதிக்கரை குடியேறி நாகரீகம்அடைந்த நாடுகள் சீனா(கங்கை இந்து, பிரமபுத்திரா) இந்தியா. இவற்றுள் இந்தியா முதன்:மையானது. பரந்துபட்டிருந்தாலும் இந்தியா எங்கும் இமயம் முதல் குமரிக் கண்டம்வரை இந்து சமயம் சிறந்துபட்டே இருந்தது. தென்னிந்தியா குடியேறிய தமிழன் தன்னுள்ளே பிரிபு பட்டு மொழி திரிபுபட்டு தமிழ், கன்னடம் தெலுங்கு மலையாளம் எனக்கூறுபட்டு வேறு நாடுகளாகின.

இந்தியா எங்கணும் பல பிரிவினராகி பல திரிபுபட்ட மொழியினராகி பல குறுகிய நாடுகளாகி பல இனத்தவராகி ஒற்றுமையற்ற வேற்றுமைகண்ட போட்டியினராகிப்



படிப்பகம்

www.padippakam.com

தம்முள் தாமே தான் பெரிது, மற்றவர் சிறிது என்றும் உணர்வுண்டாகி ஓயாது சண்டை போட்டு மாளாது மாண்டனர்

அசைக்க முடியாத ஆலவிருட்சம் போல இருந்த நனி நாகரீகரான தமிழர் இக் கெதி அடைந்தமைக்கு ஆதி மூலமானவர் ஆரியரே. இதை இன்னும் மாற்றாதிருப்பது ஆரியர் ஆளாமல் ஆளுகின்ற ஆளுமையால் தமிழன் இரத்தத்தோடு ஊன்றிவிட்டதன்மையே காரணம். நவீன புத்தி சீவிகளே நானெழுதியதை சிந்தியுங்கள் ஆரியரால் அவர்கள் போட்ட சிக்கறுக்க முடியாத முடிச்சுகளால் மாழாமல் மாழுகின்றோம் ஓயாது மாழுகிறோம். வழி வழியாக மாழுகிறோம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மாழுகிறோம். துணிவுடன் புத்திசீவிகளைக் கொண்ட மக்களால் புரட்சி வேண்டும். நம் மொழியில் நம் இனத்தில் தூய்மையுடையோரால் பூசைகள் நடக்கவேண்டும் நம் நேரே இறைவன் விக்கிரக உருவத்தைக் காணவேண்டும் அர்ச்சனைகள் உச்சாடன மந்திரங்கள் போல எல்லோர் காதுகளிலும் தமிழில் உருப்பெறக் கேட்கவேண்டும். சிந்தியுங்கள் வருங்கால இளைஞர்களே. இளம் பெண்களே உங்களை சிந்திக்க விடுகிறேன். செயலாற்றுவீராக குன்றக்குடி அடிகளார் இச் செயல்திட்டத்திற்கு அடியிட்டவர். அவர் மறைந்துவிட்டார். தொடருங்கள் பணியை வெற்றியடையுங்கள்.

தென்னிந்தியாவில் குடியேறிப் பிரிவடைந்த தமிழன் ஆரியர் சூழ்ச்சி அதிகமாக்கிச் சேரர், சோழர், பாண்டியர் என முப்பிரிவினராக்கி தம்முள் தாமே சண்டை போட்டனர். முடியுடை மூவேந்தர் எனப் பெயருங் கொண்டனர். பல குறு நிலை மன்னரும் இருந்தனர். ஒன்றுபட்டிராது கூறுபட்டிருப்பது மாற்றானுக்கு வாசியே. தென்னிந்தியா தமிழ், கன்னடம் தெலுங்கு மலையாளம் பிரிவு நாடுகளில் கோயில்கள் பல எழுந்தன. கோபுரங்கள் எழும்பின போட்டியாக திட்டமிட்டு எழும்பின. நூற்றுக்கணக்கில் இல்லை பல நூற்றுக்கணக்கில் எழும்பின ஆரியனுக்கு ஓசியான வாசி இதையோசி தமிழா. தாங்கள் வேர்கள் என நம்பச்செய்து தாங்கள் கடவுட் பிரதிநிதிகள் எனத் தெரியப்படுத்தி தங்களுக்குத் தந்தால் தானம் செய்தால் தங்கள் கையால் வீபூதி தந்தால் எல்லாம்சித்தி வெற்றி என்று நம்பச்செய்தனர். தாம்மாத்திரமல்ல தம் வழி வழியினர் எக்காலத்தும் வாழக்கூடிய முறையில், தமிழர் வழிவழியாகப் பாடுபட்டு வயிறு முதுகெலும்போடு ஒட்டப் பத்துப் பதினைந்து நாட்பட்டினி இருந்து கை கட்டி வாய் பொத்தி வணக்கம் செய்து கொடுத்து அவன் வண்டிமுன்னாகப் பூசினிப்பழமாக வாளாத் தமிழன் உதவுகிறான். யாரைக் கண்டவுடன் தன்னையறியாது கையெடுத்தக் கும்பிடுகிறோம் எப்படி வந்தது வழிவழி பழக்கத்தில் வந்தது இவை எல்லாம் இரத்தத்தில் அணு அணுவாக ஊறிவிட்டது.

அடியிலே நாமறிய முடியாது இருட்டிலே பூட்டிவைத்திருக்கும் சாமியைக்காண பால் பழம் தேங்காய் பணம் கொடுக்கவேண்டும் சாமியைக் கும்பிடுவதோடு அவரையும் கும்பிடவேண்டும். சாமிக்கு என்ன சொன்னானோ அல்லது நம்மைத்திட்டினானோ நமக்கது தெரியாது. தமிழனுக்கு இன்றைய நிலையின் கொடுமை என்னேஎன்னே. சாமியைக் கும்பிடக்காசு கொடுத்து வேற்றுமொழி. கோட்டிலே நீதிகேட்கப் பணம் கொடுத்து வேறுமொழியாவும் வீட்டு மொழியில் நடக்குங்காலமாகவேண்டும். காலம் பதில் சொல்லட்டும். இளம் நங்கையரே நம்பியரே சிந்தியுங்கள். நம்மையறியாது நமக்குத் தெரியாது நம் உழைப்பு அவரிடம் போகிறதா இல்லையா சிந்தியுங்கள். நான் நாஸ்திகனல்ல. சிறந்த பக்திபூண்ட முருக பக்தன். எல்லாம் முருகன் தருகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

என்னில் தப்புக்கணக்குப் போட்டுவிடாது நீங்களே சிந்தித்துச் செயலாற்றி நன்மையடையுங்கள்.

தமிழர் சேரர் சோழர் பாண்டியர் என் முடியுடைமூவேந்தராக்கி குமரிக்கண்டம் வரை தம் மொழி தம் மதம் தம் கலாச்சாரம் வளர்த்து நன்றாகச் சீரோடு சிறப்போடு வாழ்ந்தனர்.

முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என முச்சங்கம் அமைத்துக் காலத்துக்குக் காலம் நூற்றுக் கணக்கான புலவர்கள் கொண்ட அவையமைத்து பல்லாயிரக்கணக்கான நூல்கள் ஆக்குவித்துத் தமிழை வளர்த்தனர். இக்காலத்தே தான் இறைவனோடு போட்டிபோட்ட நக்கீரனும் வாழ்ந்தான். இறைவன் தருமிக்குப் பாடிக்கொடுத்த பாவில் பிழையுண்டென்றான் இறைவன் நெற்றிக் கண்ணைக் காட்டித்தான் இறைவனெனக்காட்டினார். நக்கீரன் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் உம்பாட்டில் குற்றமே என்றான். தமிழன். தமிழன். தமிழ்ப்புலவன் மறங் கொண்ட திறம் கண்டவீரமுடைய உண்மையானன் எனக் காட்டினான் கோவில்கள் கோபுரங்கள் கட்டி இந்து மதம் வளர்த்தனர். பலகலைகளையும் வளர்த்தனர்.

மாற்றாரால் கூறுபட்ட இனமாகி மாறுபட்டு அடிக்கடி ஒற்றுமை குறைந்த தங்களுக்குள் சண்டையிட்டனர். ஓர் இனத்துள்ளே மாற்றானொருவன் தலைமைதாங்கினால் அவன் தான் வாழப்பிரித்தாளும் தந்திரங்களை உபயோகித்தே வாழுவான். தமிழன் அன்றிலிருந்தின்றுவரை நம்பியே கெடுகின்றான், நாமுயர நம் இனத்தில் களைநீக்கினாலே உயரலாம். காலம் பதில் சொல்லும்.

தமிழனுக்கு எத்தனை மாறுபாடுகள் சூழ்ச்சிகள் இருந்தாலும் அத்தனைக்கும் மேலாகத் பலவிதங்களிலும் முன்னேறிக் கலை கலாச்சாரம் வளர்த்துப் பலவித சமூக முன்னேற்றங்களிலும் முன்னேறிப் பண், பரதம், நாட்டியம், சங்கீதம், மேளம், மத்தனம், வீணை, யாழ் முதலிய இன்னிசைக் கலைகளிலும் முன்னேறிச் சமுதாயம் நன்னெறியில் வாழ்ந்து சிறப்பாக இருந்தான்.

தமிழ் மன்னரெலாம் நீதி கண்டேவாழ்ந்தனர். மணிகட்டிக் கொடிகட்டிச் செங்கோகோலோச்சினான். ஆவின் கன்றுக்காகத் தேர்க் காலிடை மகனை இட்டான். இரு பொய் கூறாதிருக்க மகனை இழந்தான் மனைவியை கூலிவேலை செய்யவிட்டான் அரிச்சந்திரன் தான் சுடலைகாத்தான். புறாவுக்காகத் தசையிட்டான் சிபி. முல்லைக்குத் தேர்விட்டான் மயிலுக்குப் போர்வைபோர்த்தினான் பாரி. வஞ்சிப்பத்தனால் ஏமாற்றப்பட்ட குற்றத்திற்காகப் பாண்டியன் அரியாசனத்தில். இப்படியே நீதி தவறாது செங்கலோச்சியே ஆண்டனர்.

கப்பல் கட்டிக் கடலெலாம் கப்பல் ஓட்டித்திரை கடலோடியும் திரவியம் தேடு என்ற ஔவையார் வாக்கின் படி உலக நாடெலாம் சென்று வணிகமாற்றித் திரவியம் கூட்டி வாழ்ந்தனர். காட்டிலே நாட்டிலே வீட்டிலே உழைப்பாற்றி உயர்வடைந்ததை விடவும் வெளிநாடுகட்குக் கடலிலே சென்றும் உழைத்துயர்ந்தான். நிலத்தினடியிலேயும் அகழ்ந்து பொன்னெடுத்தான் வைரம் இரத்தினம் கண்டான். இரும்புமினனும் காரீயம் இன்னும் பலபொருளதான் கண்டான் கடலினடியிலும் முத்து, பவளம், சங்கு வலம்புரிகண்டான் எடுத்தான் பல்லாற்றானும் உயர்ந்தே வாழ்ந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழன் கப்பல்மூலம் கிரேக்க நாடு வரையும் மேற்கே சென்றான். அயலிலே பர்மா. தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், கிழக்கிந்தியதீவுகள் எலாம் சென்று வணிக மாற்றித்தென் கிழக்கே அவுஸ்திரேலியாவரையும் சென்று வணிகமாற்றித் திரவியம் சேர்த்தான் செழிப்புடன் வாழ்ந்தான்.

சேரன் இமயம் சென்று கல்லெடுத்துக் கண்ணகிக்குக் கோவில் கட்டினான். சோழன் கங்கைமுதல் கடாரம்வரை ஆண்டான் மாற்றார் படையெடுக்கும் போது மாசிலா மனத்துடன் மக்களைப் போருக்கனுப்பி மாற்றாரைப் புறங்காணச் செய்த பெருங்குடித் தாய்மாரைஉடைய தமிழன் தன் நாடுகாக்கத் தாய்க்கு ஒரு மகன் படைக்கெனக் கொடுத்துப் பாது காப்பளித்த பரம்பரை.

ஒரு போரில் பங்கு பற்றி முற்காயம் பட்டிந்த மகனை ஒருவன் தாய்க்கு உன்மகன் புறங்காட்டிப் புறமுதுகில் காயப்பட்டிருந்தான் எனச் சொல்ல அவன் வாளையெடுத்து அவனப்படி இறந்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய என் மார்பையே அறுத்தெறிவேன் சத்தியஞ் செய்து, வாளுடன் களஞ்சென்று இறந்தோரைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துத் தன்மகன் முற்காயப்பட்டிறந்தான் என்பது கண்டு பெற்ற பொழுதிலும் பெரிதுஉவந்தாள்.

வஞ்சிப்பத்தனால் வஞ்சிக்கப்பட்டகோவலன் கள்வனெனக் காவலராற் பிடிபட்டுக் கொலைபட்டபோது, கண்ணகி அஞ்சாது காற்சிலம்புடன் அரசவை சென்று அரசனிடம் நீதி கேட்டுக் காற்சிலம்பைத் தணிவான வீரத்துடன் உடைத்துக் காட்டி நீதியை நிலை பெறச்செய்து மன்னர் பரம்பரை அழிந்தது மதுரை மாநகரம் எரிந்தது. அப்போ கண்ணகி ஆவினம் பெண்டிர் அறநெறியுடையோர் முதியோர் குழந்தைகள் தவிர்க ஏனையவை எரிக என்றார்.

பாதுகாப்புக்கு தேவாலயத்திருங்கள் என்று சொல்லித் தேவாலயத்திருந்தோருக்குக் குண்டு போட்டுப் பலநூற்றுகணக்கானவரைக் கொன்றழித்த, பாடசாலையில் குண்டு போட்டுப் பச்சிளங்குழந்தைகளை நூற்றுக்கணக்காகக் கொன்றழித்த கயவரான நீதி கெட்ட சிங்கள ஆட்சியாளரின் மூர்க்கங்கொண்ட சிங்களப் படையினருக்குத் தெரியுமா. தமிழ் பெண் கண்ணகியின் செயலை. இயமனுடன் போராடித் தன்தலைவனை மீட்டாள் சாவித்திரி. சமணசமயம் சென்ற நாவுக்கரசனைப் பக்தியினால் மீட்டார், திலகவதியார். மங்கையர்க்கரசியார் தம்பக்தி மேலீட்டால் சைவசமயம் நிலை நாட்டிச் சம்பந்தரால் உண்மை நிலை நாட்டினார். ஔவையார் காக்கைபாடினியார். காலைக் காரைக்காலம்மை அருந்ததி நாளாயினி, தமயந்தி, சந்திரமதி இன்னோரன்ன இன்னுமின்னும் எத்தனையே பெண்களெலாம் நெறிகொண்டு நீதி கண்டு வாழ்வமைத்து வாழ்ந்த தமிழன் பெண்ணினமே.

அகத்தியர் தொல்காப்பியர் இளங்கோகம்பன் வள்ளுவன் புகழேந்தி ஔவையார் ஒட்டக்கூத்தர் வில்லிபுத்தூரார் காளமேகம், நக்கீரன் கபிலர் இன்னோரன்ன பல்நூற்றுக்கணக்கான புலவர்களால் வளர்த்த தமிழை உயிரெனப் போற்றியதமிழர்.

சிவஞானமுனிவர் திருமூலர் அருணந்தி சிவாசாரியார் அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் சேக்கிழார் கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரியார், ஆழவாராதியார் ஆகிய இன்னோரன்ன இன்னும் பலராலும், சிவ நெறிகண்டு, தவநெறியடைந்த



படிப்பகம்

www.padippakam.com

தோராலும் இந்து சமயம் தமிழால் தழைத்தோங்கி வளர்ந்தது.

முன்னைய நம் தமிழ்ப்பெண் சுளகாற் புலியடித்து விரட்டினாள் இப்போதைய நம் தமிழ் வீரப்புலிப் பெண்கள் நடுக்களம் சென்று போராடி வெற்றியடைகிறார்கள். உயிராயுதமாகி எதிரியின் கப்பற்படையெலாம் அழிக்கிறார்கள். எதிரி குலைநடுக்கமாகிறான். மாற்றாரால் மறைக்கப்பட்டிருந்த வீரம் இப்போ நிமிர்ந்து நிற்கிறது. பண்டைய வீரம் வளர்ந்து நிற்கிறது. நம்படைவீரர் திறமை உலகெலாம் புகழ்பரவி நிற்கிறது.

ஆரியர் நம்மொடு சேர்ந்து கூடி நம்மையறியாது நம்மைத் தமக்காக்கித் தாம் சுகமாக வாழவழியமைத்து அதற்கான பழக்கங்களை நம்மிடம் திணித்துப் பழக்கி இறந்த அம்மாவுக்குக் கூட ஆண்டாண்டாய் வரிவாங்குகிறார்கள். நாம் மறந்தாலும் தாம் ஞாபகப்படுத்துவார்கள். அவருக்கே தேவையான வரிகொடுத்துக் கும்பிட்டு விழுந்து அட்டாங்கமாக வணங்கிச் சுகம் கிடைத்தது. சொர்க்கம் வந்தது காசி காஞ்சிபோன பலன் கிடைத்தது. புண்ணியம்வந்தது மடியில் விழுந்தது. என்று மிக உறுதியாக நம்புகிறோம். இல்லை நம்பச்செய்துவிட்டனர். அது அணு அணுவாக உடலுடன் உயிருடன் ஊறிவிட்டது. காலம் பதில் சொல்லட்டும். எல்லாம் தமிழ் ஆகட்டும். தமிழன் தானே எல்லாம் செய்யட்டும்.

ஆரியர் தங்கள் வேத ஒலியெலாம் இறைவன் அசரீரியாக தங்களுக்களித்த வாய்மொழி வாக்கியமடா. அது வழி வழியாகவந்த வாய்மொழி வேத ஒலியடா அதுவேறு எவருக்கும் தெரியப்படாதடா என்று கூடச்சொல்லி அது வேதமந்திரமடா வேதனைஎலாம் தீர்க்கும் என்றெலாம் நம்பச்செய்தனர்.

வால்மீகி இயற்றிய வடமொழி இராமாயணத்தில் தமிழ் மன்னனான இராவணனை அரக்கன் என்றே பாடிவைத்துத் தாம் தேவர் எனக் கருத்தமைத்தான். என் அண்ணாவின் மூத்தமகன் விவசாய விஞ்ஞான பட்டப்படிப்புக்காக வடஇந்தியாவிலுள்ள பூனாவுக்குச் சென்று படித்தான். அங்குள்ள அவன் சிநேகிதன் தான் தன் வீடு கூட்டிச்சென்றான். அவன் வீட்டிலிருந்த அனைவரும் இலங்கை வாழ் அரக்கனைக் கூட்டி வந்துவிட்டானென அனைவரும் முக்காடுபோட்டுக் கொண்டு அரக்கனைப் பார்த்தால் பாவம் என ஓடிவிட்டனர். சிநேகிதன் சிரித்துவிட்டு நீங்கவாங்க என்று கோட்டலில் உபசரித்தான். நம்மை இப்படி ஏளனப்படுத்திக் கீழினமாக்கினர். மேலினமான தங்கட்கு ஆசௌசம் பதினோரு நாள் தமிழனுக்கு முப்பத்தொரு நாள். அதற்கும் அவன்வந்து அவன் திறைகொடுத்தாலே அவன் தரும்பஞ்ச கௌவியம் தெளித்தாலே ஆசௌசம் கழியும். விராடபருவம் படித்தால் மழைபெய்யும் என்றனர். நம்பச்செய்தனர். மழையிலாது மிகக்குறைந்த மழையுடைய ஈசிரவேல் நாட்டிலேவேற்று நாட்டிலே மேலே ஓடும் முகிற் கூட்டத்தை விமானங்களாற் கூட்டி ஒதுக்கித் தன் நாட்டில் மழைபெய்யச் செய்கின்ற இக்காலம் சிந்தியுங்கள்.

பாலிய விவாகம், பெண்ணை வீட்டிற் பூட்டிப் பூட்டிவைத்தல், பெண்கள் கல்வியின்மை ஆண்வீட்டாருக் கடிமை, சீதனம். தலைவனிறந்தால் விதவை. அப்பெண் மொட்டையடித்து முக்காடிட்டு முளிவிசேசத்துக்கு உதவாதவள் எனப் பட்டங்கட்டி மூலையிலிருக்கச் செய்தல் உடன் கட்டை ஏறுதல் இன்னோரன்ன தமிழனது முன்சமூகத்தில்லாத வேண்டாத பழக்கங்களை எம் மேல் திணித்து நம்பச்செய்து நம் தமிழ் மக்களை



படிப்பகம்

www.padippakam.com

நாய்க்கோலமாக்கினர்.

இவர்களின் மாயதந்திர மந்திர வலைகளிற்சிக்கி உயர்வு தாழ்வு ஏற்பட்டு பொருளாதாரச் சிக்கல்கள் உண்டாகிச் சாதிபேதங்கள் உண்டாகி நீ, நான் என்றாகி கொள் குண்டுணி ஆளையாள் போட்டி போட்டுச் சமூகம் சமூகமாய் போட்டியாகிக் குறுநில மன்னர் மன்னராகிப் போட்டியாகி நாடு நாடாய்ப் போட்டியாகி நாடே சமூகமே தமிழினமே அழிந்து கொண்டே இருந்தது. ஆளையாள் காட்டிக்கொடுக்குமின மாகியது. புண்ணியவான் மகான் மகாத்மாவின் அகிம்சாதருமத்தால் இந்தியா சுதந்திரம் கிடைத்தது. நேரு தலைமையில் முதல் ஆட்சி நிறுவப்பட்ட போது உள்நாட்டு மந்திரியாக வல்லபாய்படேல் இருந்தார். அவர் ஒரு நாளையில் அறுநூறுக்கு மேற்பட்ட சமஸ்தான குறுநில ஆட்சியாளரை அடக்கி ஒரு குடைக்கீழ் கொண்டு வந்தார். கைதராபாத் முஸ்லிம் ஆட்சியாளர் உலகில் முதற்பணக்காரரான நிசாம் அடிபணிய மறுத்தார். உடன்படேல் திடீரென நாலாபக்கமும் படையெடுத்து நிசாம் ஆட்சியையும் முறியடித்தார். நம் இந்திய உபகண்டம் பட்டிருந்த பாடுவிளங்குகிற தல்லவா. இன்றும் அவர்கள் வீசியவலை அறுந்த பாடாயில்லை சமூகத்தோடு எச்ச சொச்சங்கள் ஊறியே இருக்கின்றன. கட்டப்பொம்மனைக் காட்டினான் எட்டப்பன். யாழ்ப்பாண வீரமன்னன் சங்கிலியனைக் காட்டினான் காக்கைவன்னியன்.
இன்று இலங்கைத் தமிழரின் நிலையைப் பாருங்கள். ஆளும்கட்சியான சிங்கள சமூகத்துடன் சேர்ந்து முண்டுகொடுத்து ஆதரிக்கின்ற காட்டிக் கொடுக்கும் கயவரைப் பாருங்கள். பல்லாயிரமாய் நம்மவர் இறந்தும் பண்பில்லாது இந்நிலையிற் கூட ஐந்து இலட்சம் அகதிகளாகிய நிலையைக் கண்டும் மனமிரங்காது காட்டி வால்பிடிக்கிறாரே தமிழர். தாங்கிப் பிடிக்கும் தமிழர் ஒன்று பட்டுச் சட்டென வெளியேறினால் ஆட்சியாளர் வீழ்ச்சி இதை அறியாதிருக்கிறாரே பரிதாபம். இவையெலாம் யாரால் வீசப்பட்ட விதையெனச் சிந்தியுங்கள். தமிழனை விலைகொடுத்தால் வாங்கலாம் என்ற எண்ணம் மாற்றனுக்குண்டு வெட்கமான காரியமல்லவா. என்று நாம் ஒன்றாவோம். நம்மைப் பிடித்த பாசியில் நாம் வழுக்கி விழாது நம்மை நாமறிந்து நாமாகி வாழும் காலம் வராதா. தமிழனின் இளைய உலகமே சிந்தியுங்கள்.

அப்பாடா ஆரியர்வந்து கூறுபோட்டுக்குறு குறுநாடாக்கி இனமாக்கி மாய்ந்து பட்டு மாண்டு கொண்டிருக்கும் வேளையிலே அவர்பின்னே ஆபுகானிஸ்தான் ஊடாகமுகமது நபியின் இறுக்கமான போதனை கொண்டமுகமது சமயம் பரப்பும் மொகலாயர் வந்தனர். அடிக்குமேல் அடி இடிக்குமேலிடியாக மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பசாசு என்பது போல மொகலாயர் வாள் வேண்டுமா அல்லது குர் ஆன்வேண்டுமா என்றனர். வாள் வைத்திருப்பவனைக் கண்டாற் பயப்படத்தானே வேண்டும் ஆண்களைப் பிடித்தனர் பெண்களைப் பிடித்தனர். கொள்ளை அடித்தனர். கோவில்களை இடித்தனர். நம் மூர்த்திகரமான கோவில்கள் இருந்த இடங்களில் மசூதிகள் கட்டினர். அயோத்தியில் இராமர் கோவிலை இடித்து மசூதி கட்டினர். முஸ்லீம்களாக்கினர். முகமது மதத்துக்காகக் கொலை செய்தாலும் சொர்க்கம் நிச்சயமென்று குர் ஆனில் எழுதிவிட்டான். முகமது சமயத்தைப் பெருக்கடாபெருக்கு இனத்தைக் கூட்டடா கூட்டு எத்தனை பெண்களையும் கட்டடாகட்டு இலக்கத்தொகையைக் கூட்டடா கூட்டு அல்லா அள்ளித்தருவார் என்றான் முகமது. எச்சமயத்துமில்லாத கட்டுப்பாடுகள் இறுக்கமான போதனைகள். போனவன் திரும்பமுடியாத சூழ்நிலைகள். ஒருவனைச் சமயம் சேர்த்தால் ஒருகோடி



படிப்பகம்

www.padippakam.com

புண்ணியமென்று விட்டான் முகமது. முஸ்லீம் மதமானவர் வேறுமதமாவது முயற்கொம்புதான்.

தமிழன் வாறாண்டி என்று அச்சம் சோனகருக்கும் சோனகன் வாறாண்டி என்ற அச்சம் தமிழனுக்கும் இன்று மந்தப் பயமுண்டு. இப்பவும் நம்மவரிடம் சோனகன் வாறான்பிடிச்சுக்கொண்டு போயிடுவான் என்று குழந்தைகளுக்குச் சொல்லும் பழக்கமுண்டு. நம்மிடமிருந்த பெண்களைப் பிடித்த பயம் தான் பெண்களை மசூதிக்கு வணக்கத்துக்கு அழைத்துச் செல்வதுமில்லை.

எல்லா இடங்களையும் இடித்தழித்துக்கொண்டு கலைப்பொக்கிஷங்களெலாம் அழித்துக்கொண்டு பலவந்தமாகத் தம்மதத்தில் சேர்த்துக்கொண்டு தெற்கே தஞ்சாவூர் வந்து இந்தியாவிலேயே பெரியதோர் நூலகத்தை இடிக்கவந்தபோது அப்போதைய அந்நாட்டு மந்திரி முகமதிய நூலேடுகளெலாம் சேர்ந்து வைக்கப்பட்டிருக்கிறது. என்று சொன்னாற்போல் இடிக்கவந்தவர் வணக்கம் செய்துவிட்டார்.

ஆங்கிலேயர் ஆட்சி கண்டபோது இந்நூலகத்தைக் காட்டிக்கொடுத்து அந்நூலகத்தில் இருந்த அறிவுநூல்களையே கைப்பற்றி நூலகத்திலிருந்த நம்மவனைக் கூட்டிச்சென்று ஆங்கிலம் கற்பித்து அவர் மூலம் மொழிபெயர்ப்பித்து விஞ்ஞான உன்மைகளை அறிந்தார்கள். இன்று உலகிலே மேலாக இருக்கும் ஆங்கிலேய நாட்டார். இஸ்லாமியரின் தொழில் வியாபாரம். அவர்கள் மரக்கலம் (கப்பல்) மூலம் பல நாடுகள் சென்று பல நாட்டுப்பொருட்களை கொண்டு வந்து ஒன்று பெற்றதைப் பத்தாகச் சொல்லிப் பயந்தவன் பாதிவிலை கேட்டு வாங்கி நம்மவர் பொருளாதாரத்தை நாமறியாது நம்மவர் இரத்தத்தை உறுஞ்சித் தம்மவர் உல்லாசபுரியில், உண்டு கெட்டவன் சோனகன் என்ற நிலையில் உண்டனர். பல பெண்களை மணந்தனர். ஒரே காலத்தில் பல பெண்களை மனைவிகளாக வைத்திருந்து பேருண்டி உண்டு பல மக்களைப் பெருக்கி இந்தியாவிலேயே முஸ்லிம் மக்களைப் பெருக்கிவிட்டான். ஆபிரிக்காவிலே இருந்த ஒரு முஸ்லிம் மன்னனுக்கு நூற்று நாற்பத்தாறு பிள்ளைகள் இருந்தார்கள் அவனிறந்தபோது இருபத்தேழு மனைவியர் இருந்தார்கள் என்று நான் பேப்பரில் படித்தேன். மரக்கலக்காரராகி மரக்காயர் என்ற பெயரும் சோனகனுக்கு வந்தது. ஊசிநூல் விற்பான் பின் கோடிக்கணக்கில் லாபமீட்டி பெரிய முதலாளியாகுவான். சுதந்திரம் இந்தியாவுக்குக் கிடைத்தபோது ஜின்னா பாகிஸ்தான் கேட்டுப் பெற்றான். ஜின்னாவின் பேரன் பிராமணன். மொகலாயன் எப்படி மதம் மாற்றினான். அடிமைப்படுத்தி அதிகாரப்படுத்தித் தணித்தே ஆக்கினான். இன்று உலகிலே யாவருக்கும் பயமாக இருக்கும் சமூகமாகச் சோனகன் தொகை கூடிவிட்டனர். ஐம்பத்திமூன்று நாடுகள் முஸ்லீம்கள் ஆட்சி நாடுகளாக உள்ளன. இருபத்தேழு நாடுகள் சோனகன் ஆதரவு இல்லாது ஆளமுடியாத நாடுகள் உள்ளன. மேலைநாட்டுப் புத்தி சீவிகள் சிந்திக்கின்றார்கள். தமக்கு அடுத்த எதிரி முஸ்லீம்கள் தான் என நம்புகின்றனர். ஐக்கியநாடுகள் சபையில் சோனகனாகிய அரபுநாட்டானுக்கு வீட்டோ ஓட்டுண்டு. அந்தளவுக்குச் செல்வாக்குண்டு. சோனகனான மொகலாயர் இந்தியா முழுவதும் ஆண்டகாலமும் உண்டு. அப்போது மதத்தை அதிகாரம் கொண்டே பரப்பினர்.

ஆப்கானிஸ்தான் ஊடாக ஐரோப்பாக் கண்டம் வரை சென்றான். தரைமார்க்கமாகவும் வியாயாரம் செய்து திரவியம் சேர்த்தான். வியாபார மத்திய தானமான கொன்ஸ்ரான்ரி நோப்பிளைப்பிடித்தான். கி.பி ஆயிரத்துநூறாம் ஆண்டிலிருந்து கி.பி. ஆயிரத்தைந்து



படிப்பகம்

நூறு ஆண்டுவரை முகமதியரும் கிறிஸ்தவரான மேலை நாட்டாரும் நானூறு ஆண்டுகள் யுத்தம் செய்தனர். இது வேசிலுவையுத்தம் இயேசுநாதர் பிறந்தபெத்லே கேம்புனித நகரான எருசலேம் முஸ்லிம்கள் கையிலேயே இன்றும் ஓர் பகுதி இருக்கிறது. இன்றும் அப்பகுதியில் ஈஸ்ரவேல் யூதருக்கும் சோனகருக்கும் சண்டை நடந்த கொண்டே இருக்கிறது. சண்டையில் சோனகர் சிலுவையுத்தத்தில் ஆண்கள் தொகை குறைந்து பெண்கள் தொகை கூடியதால் தான் முகமது பல பெண்களை மணம் செய்து மக்கள் தொகையைக் கூட்டினால் மகாபுண்ணியம் என முகமதுவின் பின் வந்தோர்குர் ஆனில் இணைத்தனர்.

இந்தியாவில் தனிப்பெரும் மன்னர் பரம்பரையாக மொகலாயர் டில்லியில செங்கோட்டையில் முஸ்லிம் பிறைக்கொடி கட்டி ஒப்பாரில்லாது ஆண்டனர். வியாபாரமூலம் பொருட்களெலாம் குவித்துப் பொருளாதார பலத்துடன் வாழ்ந்தனர். தமிழன் பெலமிழந்தான் ஆண்டசாதி ஆளப்படும் சாதியாகினான் அடுத்துக் கெடுத்து அதட்டிக் கெடுத்து அதிகாரப் படுத்திக் கெடுத்து அக்கிரமங்கள் செய்து கெடுத்துத் தமிழ்ச் சமுதாயம் கீழாகியது.

டில்லியில் செங்கோட்டையில் மொகலாய மன்னர் வாழ்ந்த அரண்மனைச் சரித்திரங்களை அறிந்தாற் தெரியும். நூற்றுக்கணக்கான நாயகிமார். அவர்களுக்கு ஏவல்ஆளர். அவர்களை அலங்கரிக்கக் கோடிக்கணக்கான பெறுமதியுடைய இரத்தினங்கள் முத்து, பவளம், வைரம் பொன். இப்படியே மக்கள் உழைப்பை உறிஞ்சி இரத்தத்தைக் குடியாமற் குடித்து உழைப்பெலாம் தம்மிடம் ஒதுக்கித் தாம் உல்லாசமாக வாழ்ந்தனர்.

மொகலாய மன்னர் பரம்பரையிலுள்ள சாசகான் தன் மனைவி மும்தாஸ் ஞாபகமாக தாஸ்மகால் கட்டினான். இல்லை கட்டுவித்தான். நிழலே இல்லாத கட்டிடம். அதைவாயாற் கூடவர்ணிக்க முடியாத எழுத்தால் எழுதமுடியாத அழகுடைய பெரும் மாளிகை. உலக ஏழு அதியங்களில் இம் மாளிகையும் ஓர் அதிசயமானது. இதை வடிவமைத்துக் கட்டிய பொறியியலாளன் தமிழன். அங்கு நாள் வீதம் வேலைசெய்த இருபத்தீராயிரம் பேர்தமிழர். இருபது வருடங்கள் வரை தாஸ்மகால் கட்டி முடியக் காலமாகியது.

யார் வீட்டுச் சொத்து யார்வீட்டு உழைப்பு யார்வீட்டு இரத்தம் யார்வீட்டு மூளையார் தொழிலாளர் எல்லாரும் தமிழர்களே. இதற்கு வைரங்கள் இரத்தினங்கள் வண்டில்களில் ஏற்றியே வந்ததாம் முழுவதும் பளிச்சிடும் பளிங்குக் கற்கள் மாபிள்கற்கள். தடாகங்கள் பல நூற்றுக்கணக்கான அறைகள் அலங்காரமண்டபங்கள் வளைவுகள் சயன அறைகள். மொகலாயமன்னர் உல்லாசமாகச் சொர்க்க புரியில் வாழ நம்மவர் பொருளாதாரம் நம்மவர் உடலுழைப்பு உதவியது. இல்லை உதவச் செய்வித்தனர். என்னே கொடுமை. ஒரு பெண்ணுக்காக அவர் காதற்கிழத்திக்காகத் தமிழளிரத்தம் தாரைவார்க்கப்பட்டது. அவனுக்குப் பல நூற்றுக்கான ஆசை நாயகியருமுண்டு. இவர்களிப்படி வாழ நம்மவர் உழைப்பே உதவியது. இவைகளை நினைத்தால் இரத்தம் கொதிக்கிறதல்லவா.

www.padippakam.com

# தமிழன் வரலாறு II

ஆண்ட தமிழன் ஆளப்படுவோனாகினான். கப்பல் ஓட்டிக் கடலெலாம் சென்று உலக நாடெலாம் வியாபாரம் செய்து பொருள் குவித்த தமிழன் கப்பலால் வந்த பொருட்களை ஒன்றுக்குப்பத்தாக அவன் சொல்லும் விலை கொடுத்து வாங்கும் தமிழனாகினான். மாற்றாருக்காக வாழும் தமிழனாகினான். இல்லை ஆக்கப்பட்டான்.

நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தமிழர் உழைப்பெலாம் அடுத்தவரக்குரியதாய் மாற்றார் உல்லாச வாழ்க்கை வாழ்வதற்குரியதாய் மாறியது. தமிழன் பொருளாதாரம் சிதைந்தது. வறுமை மேலிட்டது. வீரம் குறைந்தது. ஒற்றுமை குறைந்தது. சுய நலம் கூடியது. காட்டிக் கொடுத்து உழைக்கும் இனமாகியது. வால் பிடிக்கும் இனமாகியது. சிறு சிறு குறுநில ஆட்சிகள் பலநூற்றுக்கணக்காகத் தோன்றின. ஆளையாள் போட்டிகளம் ஏற்பட்டன. சண்டைகளும் இடையிடை உண்டாகின. தமிழன் சமுதாயம் சீரழிந்தது வறுமை தாண்டவமாடியது. இவைகளை நினைத்துச் சிந்தியுங்கள்.

இவற்றை விட உள்நாட்டுப் படையெழுச்சிகளும் நடந்தன. பல்லவர் படையெழுச்சி. சாளுக்கியர் படையெழுச்சி. இவர்களும் சிலகாலம் வல்லமை கொண்டு தமிழரைத் தாக்கித் தமதாக்கிச் சில காலமாண்டனர். நம் இந்து சமயத்துக்கு முகமது சமயப்போட்டியோடு சமண சமயப் போட்டி புத்த சமயப் போட்டிகளும் ஊடுருவின. இக் காலத்தே நம்மவர் கடும் பக்தியால் பிறந்த சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரியார் போன்றோரால் அத் தாக்கம் அவ்வளவாகத் தாக்கவில்லை. அப்பாடா தமிழன் வாழ்வில் எத்தனை போட்டியடா.

மொகலாய அவுரங்கசீப் மன்னன் ஆட்சிக் காலமாகிய பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தே மிகக் கடுங்கோலாட்சியாக ஆண்டான். அழகுப் பெண்களைப் பிடிப்பித்தான். மன்னன் எவ்வழி குடிகழும் மவ்வழி. ஒன்று பிழைத்தால் ஒன்பதும் பிழைக்கும். ஏவலாளரான சோனகரும் பெண்களைப் பிடித்தனர். கற்பழித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளையடித்தனர். சமயம் பரப்பினர். இத் தாங்கமுடியாத கொடுமையாலேயே நாட்டை விட்டு மானம் மரியாதையைக் காக்க வேண்டி இரவோடிரவாகப் பெரு வள்ளங்களில் தங்கள் அணி அடுக்குகளோடு சென்றவரே யாழ்ப்பாணக் குடியேற்றக் காரர். இவ் வரலாறு யாழ்ப்பாண வைபவ மாலையில் எழுதப்பட்டுண்டு. என் பரம்பரை கூடக் காரைக்காலிலிருந்து வந்த எட்டாம் தலைமுறை நான்.
இன்று இலங்கைத் தமிழர் சிங்கள ஆட்சியாளரின் அட்டூழியமான குண்டுகள் வீச்சுத் தாக்குதலுக்கும் கற்பழிப்புக்கும் கொள்ளையடிப்புக்கும் தாங்கமுடியாது தமிழ் நாடு சென்று அகதிகளாகி அல்லற்பட்டு வாழ்கின்றனர். காலம் காலமாகத் தமிழனை விடுகிறார்களில்லையே. இலங்கையில் பழைய காலத்தே இராவணன் ஆண்டான் என இராமாயணம் கூறுகிறது. இராவணன் பத்து நாடுகளின் தலைவன். அதனால் அவனைப் பத்துத் தலை இராவணன் என்றனர். தசக்க்கிரீவன் என்றனர். நீதி கண்ட மன்னன். வீர மிக்க மன்னன். தனித் தமிழ் மன்னன். இந்து சமய மன்னன். புட்பக விமானம் உடைய மன்னன். அவர் மனைவி மண்டோதரி அழகிற் சிறந்த கற்புடைய மங்கை. இராவணன் சிவ நெறி பூண்ட சமய பக்தன். யாழ் வாசிப்பதில் பெயர் போனவர். கைலயங்கிரியையே தன் விமானம் பறக்கத் தடையாயிருக்கெனப் பெயர்க்க நினைத்தவன். அதற்கிறைவனால் தண்டிக்கப்பட்வன். இறைவனால் சிறந்த பக்திமான் என ஆட்கொள்ளப்பட்டவன். இப்படிப்பட்ட திறம்பட்ட மன்னனை வால்மீகி அரக்கன் என இராமாயணத்தில் பாடிவிட்டான். அதனால் எற்பட்ட தாக்கத்தாற்தான் தமிழரை இந்திய வடநாட்டார் அரக்கரென இலங்கைத் தமிழரை நினைக்கின்றனர். இராவணன் பழைய மண் மூடிய திருக்கேதீஸ்வரம் கட்டினான். தன் தாய்க்கு ஈமைக் கடன் செய்யவே திருக்கோணாமலையில் வெந்நீர் ஊற்றுக் கிணறுகள் ஆக்கினான். இராவணன் வெட்டு என இன்றும் இருக்கிறது. சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலமாகவே தமிழன் இருந்திருக்கிறான். யாழ்ப்பாண குடியேற்ற காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாடியே முல்லைத் தீவிலிருந்து இலங்யைின் கிழக்குக் கரையாகத் திருகோணமலை, மட்டக்களப்பு முப்பனை பொத்துவில் தென் கரையோரமாகக் கதிர்காமம், தெய்வந்துறைஇ மாத்தறை, உடுகமம், வலிகமம், பாணந்துறை கொழும்பு நீர்கொழும்புஇ புத்தளம், சிலாபம், மன்னார் அவ்வாறு இலங்கையின் கரையோரங்களைச் சுற்றி உள் நோக்கிப் பயிர் செய்யுமிடமெலாமிருந்திருக்கிறார்கள். ஊர்ப் பெயர்களைக் கொண்டும் இலங்கையைச் சுற்றி இருக்கும் நகுலேஸ்வரம், நாகேஸ்வரியம்மன் ஆலயம், திருக்கோணேஸ்வரம், மட்டக்களப்பு தான்தோன்றி ஈஸ்வரம், கதிர்காமம், பாணந்துறை பிள்ளையார், முன்னேச்வரம், திருக்கேதீஸ்வரம், சிவனொளிபாதமலை ஆகிய கோவில்களைக் கொண்டும் ஊர் காணி உறுதிப் பெயர்களைக் கொண்டும் அறியக் கிடக்கிறது. இப்பகுதிகளிலுள்ள சிங்கள மக்களின் மூன்றாம் நாலாம் தலைமுறை தமிழன் பேராகவே இருக்கிறது. இலங்கையின் ஆதிக் குடி தமிழினமே என்பது விளங்குகிறது.

யாழ்ப்பாணக் குடியேற்றம் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆரம்பமானது என முன் கூறியிருக்கிறேன்.
சிங்களவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டே வந்தவர்கள். வட இந்தியாவிலுள்ள லாலா நாட்டில் நீதியீனமான முறையில் நடந்து பெண்களைக் கற்பழித்துக் கொள்ளையடித்துக் கேவலமான முறையில் நடந்ததால் இவனையும் அவன் சிநேகிதர் எழுநூறு பேரையும் கப்பலில் ஏற்றிக் கடலில் அலைய விட்டான். கடலில் அலைந்த கப்பல் காற்றினால் அடையுண்டு புத்தளத்துக்கருகில் தம்பண்ணை எனுமிடத்தில் கரை சேர்ந்தது. அவர்கள் இறங்கி இலங்கை நாட்டினுள்ளே சென்று அப்போதிருந்த தலைவி குவேனியுடன்



படிப்பகம்

www.padippakam.com

விசயன் தொடர்புபட்டிருந்துகொண்டு பாண்டிய நாட்டுக்கு இரகசிய தூதனுப்பித் தன் நிலைமை சொல்லி தனக்கொரு இராசகுமாரியையும் தன் தோழர்களுக்கு எழுநூறு பெண்களையும் அனுப்பி வைக்கும்படி கேட்டான். பாண்டியன் உடன் அனுப்பினான். நம்பிக் கெட்ட தமிழன் தன் சாதி அழிய தன்னினம் அழியத் தானே மண் போட்டான். அவனனுப்பியிராவிட்டால் சரித்திரம் வேறாகி இருக்கும்.

சிங்களவன் இரத்தத்தில் பாதி தமிழ் பாதி சிங்களம். இன்னும் ஒரு காது குத்தும் வழக்கம் இருக்கிறது. பாதி தமிழ் என்பதற்காகவே என நான் நினைக்கிறேன். உள்நாடுகளிலே இருக்கும் சிங்களவர் இன்றும் தமிழ்க் கலாச்சாரமுடையோராக இருக்கின்றனர். இவர்களின் மொழி சிங்களம் சாம்பாறுமாதிரியானது. தாய் தமிழ், தந்தை பாளி. அக்கள் அதையும் கேட்டு இதையும் கேட்டு இரண்டையும் கலந்து ஏக்கதை கோக்கதை மொக்கதை என்று உண்டாகியிருக்கலாம். இவைகளோடு சமஸ்கிருதம் ஆங்கிலம் டச்சு போர்த்துக்கீஸ் கலந்து சாம்பாறான மொழிதான் சிங்களம். சிங்கள மொழி உலகிலேயே வேறெந்த நாட்டிலுமில்லை. பெண்களின் பெயர்கள் இன்றும் லீலாவதி, சோமாவதி, நந்தாவதி, கல்யாணி எனும் தமிழ்ப் பெயர்களே. பல இரத்தக் கலப்பு மக்கள். பல மொழிக் கலப்பு மொழி. அவர்கள் மொழி. இப்படிப்பட்ட இவர்கள் ஆதி அந்தமிலாத தமிழினத்தை அழிக்கின்றானே. அழித்தழித்து, அடித்தழித்து அண்டமேல் நின்று குண்டுகள் போட்டழித்துக் கொள்ளையடித்துக் கற்பழித்துக் கொன்றழித்து அகதிகளாக்கி மருந்தின்றி உணவின்றி இருக்க இடமின்றிப் பட்டினியாக்கி மாண்டு மடியச் செய்கின்றாரே. இந்த நிலையில் தன்னினத்தைக் காட்டிக் கொடுத்து ஆட்சியாளருடன் ஒத்துழைக்கும் தமிழர்களை என்ன செய்ய வேண்டும். அதை உங்களிடம் விடுகிறேன்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் விசயன் ஆட்சியிலிருந்து தேவநம்பியதீசன் வரை இந்து சமயமே அநுட்டித்தார்கள். தேவநம்பியதீசன் காலத்தில் அசோகன் மகன் மகிந்தன் புத்த சமயத்தை இலங்கைக்கு கொண்டு வந்து மன்னனைக் கண்டு போதனை செய்து மன்னனையும் மக்களையும் சாதனையாக்கிச் சமயம்பரப்பினர். புத்தர், இந்து சமயத்தவர். இந்து சமயத்தில் சில திருத்தங்களுடன் வட நாட்டில் சுத்தோதன ராசாவின் மகனான இளவரசன் அரச போகத்தையும் தன் மனைவியான யசோதரையையும் தன் ஒரே மகனான இராகுலனையும் விட்டுத் துறவடைந்து அரச மரத்தின் கீழிருந்து நாற்பதாம் நாள் ஞானம் பெற்று புத்த சமயம் ஆக்கினார்.

இந்தியாவில் அசோகன் கலிங்கத்துப் போரில் பல்லாயிரக் கணக்கில் உயிரிழந்து வெற்றி கண்டார். தன்னால் மக்கள் பெருந்தொகை அழிந்து விட்டதே என்று மனம் வருந்தி வேதனைப்பட்டிருந்த நேரத்தில் புத்தரின் போதனையாகிய ஆசையை நீக்குமின். அறிஞராய் வாழுமின். அறம் பல செய்மின். மறம் பல கடிமின். தன்னுயிர்போல் மன்னுயிர் நினை எனுமிவைகள் பசுமரத்தாணிபோல் அசோகன் மனதில் பதிந்தன. அசோகன் புத்த சமயமாகினான். தன்நாட்டிலும் வெளி நாடுகளான பர்மா, சீனா, யப்பான், இலங்கை நாடுகளிலும் தன்மகன் மகிந்தனையும் தன் மகள் சங்கமித்தையையும் தூதனுப்பி புத்த சமயம் பரப்பினான். இவனது சேவை தன்னாட்டில் வாய்க்கவில்லை. தென்னாட்டிலும் இந்து சமய பக்தியாளரான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகரின் தேவார திருவாசகங்களால் புத்தம் தமிழரிடம் மாண்டது. இலங்கையில் சிங்களவரிடம் புத்தம் வளர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கைக்குத் தமிழ் நாட்டார் அடிக்கடி படையெடுத்து வெற்றியுங் கண்டு ஆட்சியும் நடத்தினர். தமிழ் மன்னனான எல்லாளன் நல்லாட்சி புரிந்தான். இலங்கையின் தென் பகுதியான உறுகுணைப் பிரிவில் ஆட்சி கண்ட கவந்தீசன் எல்லாளனுக்குத் திறைகட்டி அரசாண்டான். கவந்தீசனுக்கு மனைவி விகாரமகாதேவி வயிற்றில் கைமுனு, சதாதீசன் எனுமிரு ஆண்கள் பிறந்தனர். கைமுனு உணர்ச்சியடைந்து தன் சிநேகிதர்களைக் கூட்டிப் படைப் பயிற்சியளித்து ஆயிரம் பேர் வரை சேர்த்து தந்தை மறிக்கவும் எல்லாளனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். எல்லாளனும் துட்டகெமுனுவும் யானை மீதிருந்து போர் செய்த போது எல்லாளன் யானை கால் சறுக்கி யானை வீழ அதன் முதுகின் கீழ் அகப்பட்டிறந்தான். துட்டகெமுனு வெற்றியடையவில்லை. தற்செயலாக யானை வீழ்ந்ததால் வெற்றியடைந்தான். எல்லாளனுடம்பை சகல அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்து சமாதி கட்டி இன்னும் அச் சமாதிக்கு மரியாதை செய்யப்படுகிறது. கண்டுல எனும் யானை சறுக்கி இராவிட்டால் சரித்திரம் வேறாகி இருக்கும். இலங்கையில் தமிழன் நிலையும் வேறாயிருந்திருக்கும்.

யாழ்ப்பாணம் குடியேறிய தமிழர் தமக்கெனத் தமிழர் ஆட்சியமைத்துப் பல்லாற்றானும் சிறப்புற ஓங்கிச் சீராக வாழ்ந்தனர். நல்லூர் தலைநகராக்கி நல்லாட்சி செய்தனர். பரராசசேகரம், செகராசசேகரம் அவர்கள் ஆட்சிக்காலம் பொன்னானது. இவர்கள் பல தமிழ் நூல்கள் ஆக்கினர். வைத்திய நூல், சோதிட நூல் ஆக்கினர். மக்கள் எவ்வித குறையுமின்றி வாழ்ந்தனர். கலை, கலாச்சாரம் நன்றாக வளர்ந்தது. சங்கிலியன் ஆண்டபோது இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தனர்.

மேலை நாட்டாருக்குத் தம் இறைச்சியைப் பதப்படுத்தி மாரிகாலத்துக்கென வைக்கக் கீழை நாட்டாரின் வாசனைத் திரவியமான கராம்பு, ஏலம், மிளகு முதலியன அவசியமானது. இப்பொருள் வணிகம் தரைமார்க்கமாக ஆபுகானிஸ்தான் ஊடாக கொன்ஸ்ரான்ரிநோப்பிள் ஊடாக நடந்தது. சிலுவை யுத்தத்தில் கொன்ஸ்ரான்ரிநோப்பிள் முகமதியர் கையானதால் வணிகம் தடைப்பட்டது. வாசனைத் திரவியம் கிடையாது விட்டது. ஆனால் அவர்களுக்கது அவசியம் தேவை. அது இல்லாததால் அடிவயிற்றடி விழுந்தது. இந்தச் சூழ்நிலையில் பூமி தட்டை என்ற மனப்பாங்கு நீங்கிப் பூமி உருண்டையானது என்ற எண்ணம் உண்டானது.

கீழைத் தேசப் பாதை காணவேண்டும். வாசனைப் பொருட்கள் பெறவேண்டும். என்று திட்டமிட்டு நான்கு திசைகளிலும் புறப்பட்டனர். வடக்கே தெற்கே சென்ற கப்பல்கள் பனிக்கட்டியில் மோதி மாண்டனர். மேற்கே கொலம்பஸ் தலைமையில் போன கப்பல் மாதக் கணக்காய் ஓடி மனஞ் சலியாது சென்று மேற்கிந்திய தீவுகள் கண்டு வட தென் அமெரிக்கா கண்டனர். கிழக்கே கி. பி. 1487ல் பார்த்தலோமையாதியாஸ் தலைமையில் சென்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கண்மையாயுள்ள நன்நம்பிக்கையில் பெரும் புயற் காற்று வீசப் பயந்து பின்வாங்கி வந்து விட்டான். இதன் பின் கி. பி. 1497ல் வஸ்கொடிகாமா தலைமையில் சென்ற கப்பல் நன்னம்பிக்கைமுனை வரக் காற்றடித்தது. திரும்புவோமென்றிருந்த சமயத்தில் தற்செயலாகத் தமிழ் மாலுமி கண்டு உதவி புரிந்து கள்ளிக்கோட்டை வரை சென்று, காட்டிவிட்டான். போர்த்துக்கேயனான வஸ்கொடிகாமா கீழைத் தேச பாதைகண்டான். தமிழ் மாலுமிதான் வழிகாட்டினான் என்ற வரலாற்றைத் தென்னாபிரிக்காத் தமிழ் அறிஞர் மொறிசியஸ் தீவில் நடந்த தமிழாராச்சி மகாநாட்டில் காரண காரியங்களுடன் அத்தாட்சிப்படுத்தி


படிப்பகம்

www.padippakam.com

ஆராய்ச்சிக் கட்டுரை கொடுத்தார்.

கீழைத்தேசப் பாதை கண்டனர். கண்டவுடன் போர்த்துக்கேயர் கி.பி 1505 ம் ஆண்டில் இலங்கை வந்தனர். இந்தியாவந்தனர். கீழைத்தேசமெலாம் வந்தனர். வியாபார நோக்கமாக வந்த போர்த்துக்கேயர். நம் நாடுகளின் சீரழிந்த நிலைகளைக் கண்டு தமதாக்கினர். ஆட்சியும் செய்தனர். போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயம் பரப்பினர். கோயில்களை இடித்தனர். வீடுவீடாகச் சென்றனர். இந்து சமயமான எங்கள் சமயம் அநுஷ்டித்தோரைத் தாக்கினர் விபூதி பூசப்படாதெனப் பணித்தனர். ஆரியரால் சாதி பேதமாக்கப் பட்டுத் தாழ்ந்திருந்தோர் கத்தோலிக்க சமயம் சேர்ந்தனர். விரதமநுஷ்டித்தோர் இரவிரவாக விரதம் பிடித்துச் சாப்பிட்ட இலைகளைக் கூரையுள் ஒழித்தும் விபூதியை அணிந்தும் வாழ்ந்தனர். இவர்கள் செய்த கொடுங்கோலாட்சி சொல்லமுடியாதது. இவர்கள் கொடுங்கோன்மை பதினேழாம் நூற்றண்டின் முற்பகுதியில் ஒல்லாந்தர் வருகையுடன் முடிந்தது. போர்த்துக்கேயர்களுக்குக் காக்கைவன்னியன் காட்டிக் கொடுத்தே சங்கிலியன் தோல்வியடைந்தான். இவனே யாழ்ப்பாணக் கடைசியரசன். இவன் குதிரையிலிருக்கும் சிலையொன்று முத்திரைச் சந்தையில் இன்றுமுள்ளது.

ஒல்லாந்தர் வந்தனர். தம்வியாபார நோக்கமாக வந்த போர்த்துக்கேயர். நம் நாடுகளின் சீரழிந்த நிலைகளைக் கண்டு தமதாக்கினர். ஆட்சியும் செய்தனர். போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயம் பரப்பினர். கோயில்களை இடித்தனர். வீடுவீடாகச் சென்றனர். இந்து சமயமான எங்கள் சமயம் அனுஷ்டித்தோரைத் தாக்கினர் விபூதி பூசக் கூடாதெனப் பணித்தனர். ஆரியரால் சாதி பேதமாக்கப் பட்டுத் தாழ்ந்திருந்தோர் கத்தோலிக்க சமயம் சேர்ந்தனர். விரதமநுட்டித்தோர் இரவிரவாக விரதம் பிடித்துச் சாப்பிட்ட இலைகளைக் கூரையுள் ஒழித்தும் விபூதியை அணிந்தும் வாழ்ந்தனர். இவர்கள் செய்தகொடுங்கோலாட்சி சொல்லமுடியாது. இவர்கள் கொடுங்கோன்மை பதினேழாம் நூற்றண்டின் முற்பகுதியில் ஒல்லாந்தர் வருகையுடன் முடிந்தது. போர்த்துக் கேயர்களுக்குக் காக்கைவன்னியன் காட்டிக் கொடுத்தே சங்கிலியன் தோல்வியடைந்தான். இவனே யாழ்ப்பாணக் கடைசியரசன். இவன் குதிரையிலிருக்கும் சிலையொன்று முத்திரைச் சந்தையில் இன்றுமுள்ளது.

ஒல்லாந்தவர் வந்தனர். நம்நிலை கண்டனர் தம்மடிமைப்படுத்தினர். ஆட்சிகொண்டனர் புரட்டஸ்தாந்து சமயம் பரப்பினர். எல்லோரும் கரைநாடுகளைப் பிடித்து மதங்கள் பரப்பினரேயன்றி இலங்கையின் மலை நாட்டிலான கண்டி இராச்சியம் கி.பி. 1851ம் ஆண்டுவரை ஆட்சி நடந்து கொண்டே இருந்தது.

ஒல்லாந்தர் பின் ஆங்கியேர் வந்தனர். கி.பி. 1796ல் இலங்கையைத் தம்மடிமைப்படுத்தினர். ஆட்சி கொண்டனர். கி.பி. 1815ம் ஆண்டில் கண்டியை ஆண்ட விக்கிரமராசசிங்கனின் மந்திரியாக இருந்த ஏலேலப்பனே விக்கிரமராசசிங்கனை ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தான். காட்டிக் கொடுத்த ஏலேலப்பனைக் கட்டையிற் கட்டிச் சுட்டார்கள். விக்கிரமராசசிங்கனைப் பிடித்து அவனுடன் நூறாண்டின் பின் உங்கள் நாடு எங்கள் வழி வழியாரிடம் ஒப்படைப்போம் என உடன்படிக்கை செய்து அவனுக்கும் அவன் வழியினர்க்கும் வருடாவருடம் சன்மானம் தருவதாகவும் சொல்லி விக்கிரமாராசசிங்கனை இந்தியாவிலுள்ள வேலூருக்கு இராசமரியாதையுடன்



படிப்பகம்

www.padippakam.com

அனுப்பிவைத்துப் பராமரித்தும் வந்தனர். இவ் உடன்படிக்கை தமிழிலேயே எழுதப்பட்டது விக்கிரமராசசிங்கன் தமிழ் மன்னனே. இவர் ஞாபகமாக இவரைக் கப்பலேற்றி அனுப்பிய இடத்தில் பேரன்சிலிங்கோ கட்டிடம் கொழும்பில் கட்டியுள்ளான். பதினாறாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஏறக்குறைய நாலரை நூற்றாண்டுகளுக்கு மேலை நாட்டார் ஒருவர் பின் ஒருவராய் ஆண்டனர். நம் நாட்டில் இலங்கையில் தமிழரும் சிங்களவரும் வாழ்ந்தனர். போர்த்துக்கேயரால் கத்தோலிக்கமும் ஒல்லாந்தரால் புரட்டஸ்தாந்து சமயமும் ஆங்கிலேயரால் சமய சுதந்தரமும் அவர்கள் கலாச்சார அடையாளங்களும் சில நம்மிடம் கலந்தன ஆங்கிலேயர் நயமாக நடந்து நம்கையைப்பிடித்து நம்தலையிற்குட்டிப் பிரித்தாளும் தந்திரங்கள் உபயோகித்துத் தம்மொழியை இலேசாக நயமாகப் புகுத்தி தம் கலை கலாச்சாரம் உடை நடைபாவனை இவைகளை நாமே பின்பற்றி நடக்கக் கூடியவாறாக்கி தங்கள் நாட்டுப் பொருட்களை நாங்களாகவே விரும்பிவேண்டக் கூடியவையாக்கி தங்கள் நாட்டு நவீன இயந்திர வகைகளை எங்கள் மேலாக்கி இலேசாக நமக்குத் தெரியாமலே மூட்டைப் பூச்சி போல் உறிஞ்சிக்கொண்டே இருந்தார்கள்.

நம் யாழ்ப்பாணத்தில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க புரட்டேஸ்தாந்து மதங்கள் ஓரளவு பரவின. ஆறுமுகநாவலர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய படியால் சைவமும் தமிழும் தழைத் தோங்கியது. பல சைவப்பாடசாலைகள் ஆக்கினார். சமய போதனைகள் நடக்கச் செய்தார். இந்தியாவில் சிதம்பரத்தில் கூட தமிழ்ப் பாடசாலை ஆக்கினார். அது இன்றும் நன்றாக நடைபெறுகிறது பல பெரிய நூல்களெல்லாம் அச்சியந்திரசாலை தாபித்து அச்சேற்றினார். ஒழுக்கம் சைவ ஆசாரம் அவர் காலத்திருந்து தழைத்தோங்கியது. தமிழன் வளர்ச்சி இலங்கையில் யாழ்ப்பாணத்தில் வட, கீழ் மாகாணங்களில் தமிழர் வாழுமிடமெலாம் தமிழும் சைவமும் வளர்ந்தன. நாவலரைப்பின்பற்றி சுவாமி ஞானப் பிரகாசர், சி.வை. தாமே தரம்பிள்ளை விபுலானந்தஅடிகள் இன்னோரன்ன பெரியார்கள் அரிய சேவைகள் செய்தார்கள் விபுலானந்தஅடிகள் யாழ் நூல் ஆக்கிப் பெருமை கண்டார். இயல் இசை நாடகம் வளர்த்தனர்.

தமிழ் நாட்டிலே பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டிலே தமிழும் சமயமும் வளர்க்கப் பல பெரியார்கள் தோன்றினார்கள். பாரதியார், பாரதிதாசன், சேதுப்பிள்ளை, உ.வே.சாமிநாதையர், கா.சுப்பிரமணியம், பெரியார் ஈ.வே.ரா, மறைமலையடிகள், அண்ணாத்துரை, கருணாநிதி, கண்ணதாசன், அண்ணாமலைச் செட்டியார், கல்கி, கிருபானந்தவாரியார், நெல்லையப்பாபிள்ளை, மீனாட்சிசுந்தரம்பிள்ளை, கி.வா. ஜகந்நாதன், குன்றக்குடி அடிகளார், பெருஞ்சித்திரனார் போன்ற இன்னோரன்ன பல பெரியார்கள் தோன்றிச் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்டார்கள்.

இந்தியாவுக்கு 15.08.1947 ல் சுதந்திரம் கிடைத்தது. மகாத்மாகாந்தியின் அகிம்சை வெற்றி கண்டது. ஆட்டுக்கு விலை பேசும் போது குட்டிக்கு விலைபேசாதவாறு இலங்கைக்கு 04.02.1948 ல் சுதந்திரம் கிடைத்தது. D.S. சேனநாயகா அப்போதிருந்த தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களைச் சலுகை காட்டித்தம்வசமாக்கி ஒற்றையாட்சியாக்கி சுதந்திரம் பெற்று விட்டான். அவன் போட்ட சூழ்ச்சி அப்போதைய சுயநலம் படைத்த தமிழர் தலைவர்களுக்கு விளங்கவில்லை. சேனநாயகா திட்டமிட்டு தமிழன் வாழ் குடிநிலங்களைப் பறிக்கக் கல்லோயாத்திட்டம் தீட்டிச் சேனநாயகா சமுத்திரமாக்கி வெற்றி கண்டான். இதையடுத்து அவன் பின் வந்தவர் கந்தளாய்த்



படிப்பகம்

www.padippakam.com

திட்டம், அல்லைத்திட்டம், மொரவீவாத்திட்டம், வெலிஓயாத்திட்டம் எனப் பலதிட்டங்கள் தீட்டி தமிழர் நிலமெலாம் சிங்களவர் குடியேற்றம் போட்டு நிலமெலாம் கொள்ளையடித்தனர். கொள்ளையடிக்கின்றனர். சிங்கள ஆட்சியாளர்.

இந்தியாவில் சுதந்திரத்துக்காகத் தோளோடு தோளாக வேலைசெய்த ஜின்னா வெண்ணெய் திரண்டுவர சுதந்திரம் கிடைக்க இருக்கச் சமயமறிந்து தனக்குப் பாகிஸ்தான் வேண்டுமென்று கேட்டான். பெற்றான் மேல் கீழ் பாகிஸ்தான் பிரித்தாளும் நரித்தந்திர முடைய ஆங்கிலேயன் இந்தியவை பிரித்து விட்டாற்போராடுவர். இலங்கை சேர்த்துவிட்டாற் போராடுவர் என்பது அவர்களுக்குத் தெரியும். நம்தலைவர்கள் விட்ட பிழை தமிழன் இனம் மறக்கமுடியாதது.

உலகில் முன் தோன்றி முன் நாகரீகமடைந்து முன் சமயங்கண்டு முன் மொழிகண்டு பேரோடு புகழோடு வாழ்ந்த சாதி பேரளவில் தமிழராகி வாழுகின்றோம். நாடின்றிச் சாகின்றோம் வறுமையால் வாடுகின்றோம். நம் உழைபெலாம் நம்மையறியாது உறிஞ்சப்படுகின்றோம்.

ஆரியனுக்கு, மொகலாயனுக்கு மேலை நாட்டினர்க்கு, இந்தியத்தமிழ், நாட்டுத்தமிழன் வடக்கேயுள்ள பார்ப்பனீயத்துக்கு இன்னும் ஆராருக்கோ உழைக்கின்றோம். நாம்மாடாய் உழைக்கின்றோம் நம்மிடம் ஒன்றுமே இல்லை. ஆனைதின்ற விளாங்கனிதான் நாம்.

கப்பல் கட்டியதமிழன், கடலோடியதமிழன். உலகெலாம் வணிகம் நடத்திய தமிழன் இமயமிருந்து குமரிக் கண்டம் வரை கொடி கட்டியதமிழன், நீதி கண்ட ஆட்சி நெறிமுறைப்படி நடத்திய தமிழன், வீரங்கொண்டதமிழன், பக்திகொண்டதமிழன், விவேகமுடையதமிழன், தனக்கெனத் தனிமொழி சமயம் கண்டதமிழன். இவனுக்கு இன்று நாடிருக்கா. ஒர் இஞ்சி நிலமிருக்கா சிந்தியுங்கள்.

தாய்லாந்திலே அரசியல் ஆண்டாண்டாய் தொடங்கும் ஆரம்ப நாளன்று திருவெம்பாவை பாடியே தொடங்கிறார்கள்.

கம்போடியாவிலே சென்றமாதம் இந்தியா இலங்கை மலேசியா சிங்கப்பூர் தாய்லாந்து எல்லா நாடுகளும் ஒன்றாகக் கூடிக் கம்பராமாயணப் பெருவிழா கொண்டாட்டப்பட்டது.

யாவாவிலே பிள்ளையார் சிலை அகழ்வாராய்ச்சியில் அகப்பட்டு இலங்கை கொண்டுவந்து தமிழர் வாழுமிடமெலாம் காட்டினார்கள், கிழக்கிந்திய தீவுக் கூட்டங்களிலே தமிழர் இருந்திருக்கிறார்கள். பால தீவிலே இன்றும் தமிழ் விழாக்கள் தமிழ் ஆடல் பாடல் நடக்கிறது. இந்துசமுத்திரத்தில் சங்கிலிக்கொழுவல் போல பலசின்னஞ்சிறு தீவுகளாலான செசல்ஸ் தீவுக் கூட்டத்திலே தமிழர் வாழுகிறார்கள் தமிழ்க்கலாசாரம் இன்றும் இருக்கிறது. அவுஸ்திரேலியாவிலே அடலெயிற் துறைமுகத்திலே தமிழ்ப் பெயருடைய கப்பற் பலகை புதைபொருள் ஆராய்ச்சியானர் கண்டெடுத்தனர். அங்குள்ள சுதேசிகள் தமிழ் இனத்தவரென ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள்.

மொறிசியஸ்தீவிலே தமிழர் இருக்கிறார்கள் தமிழ் ஆராய்ச்சி மகா நாடு நடத்தினார்கள். அம்மகாநாட்டிலே தென்னாபிரிக்காவில் உள்ள படித்தறிந்த பட்டதாரி அறிஞர்



படிப்பகம்

www.padippakam.com

நன்னம்பிக்கை முனையிற் பயந்தவனுக்குப் பயம்நீக்கிப்பாதை காட்டிக் கன்னிக்கோட்டையில் சேர்த்தார் என்று ஆவணங்களுடன் அத்தாட்சிப் படுத்திக் காட்டினார். அரபு நாட்டிலே அத்திவாரமொன்று வெட்டியபோது அநுமான் சிலை அகப்பட்டது. மேற்கிந்திய தீவுகளிற் கிரிக்கற் ஆடும், உலகில் பங்குபற்றி வெற்றிகொள்ளும் வீரர்கள் தமிழர்களே.

உலகில் தமிழர் ஆராய்ச்சி மகாநாடு நடத்தித் தொடக்கிவைத்த தனிநாயகமடிகளார் தென்னமெரிக்க அந்தீஸ்மலைச் சாரலிலே பீர நாட்டிலே தமிழன் கலைகலாசாரமமைந்த தமிழன் கட்டிடப்பாங்கான கட்டிடங்கள் தான் கண்டதாக எழுதியிருக்கிறார். இப்படியெலாம் உலகம் பரவிப்புகழுடன் இருந்திருக்கிறார்கள் தமிழர்கள். மேலை நாட்டார் நானூற்றைம்பது வருடம் எங்கள் பெலவீனங்களைக் கண்டு மாறிமாறி அரசாண்டனர். எங்களை அறியாமலே எங்களைத் தம்மவர் போலாக்கி அன்றும் சுதந்திரம் கிடைத்த பின்பும் அவர்கள் எங்களை ஆளுகின்றார்கள்.

தமிழன் கலையெலாம் இந்து சமுத்திரத்தடியிலே கிடக்கிறதென ஆராச்சியாளர் அறைகின்றனர். கடல் கோள் ஏற்பட்டபோது குமரிக்கண்டத்தில் பெரும் பகுதியை இந்து சமுத்திரம் விழுங்கி விட்டது.

ஆங்கிலேயர் கீழை நாட்டை அடிமைப்படுத்திய போது மாற்றாரால் சூழ்ச்சியாக வறுமைப் படுத்தப்பட்ட தமிழ் மக்களைக் கண்டு தாங்கள் பிடித்த உலக நாடெலாம் தோட்டங்கள் போட்டுக் கூலிப் பட்டாளமாகக் கொண்டு சென்று குறைந்த கூலி கொடுத்து நிறைந்த வேலை செய்வித்து நிறையச் சம்பாதித்துத் தங்கள் நாட்டில் குவித்து மாட மாளிகைகள் அடுக்கு மாளிகைகள் இயந்திர கூடங்கள் உற்பத்திச் சாலைகள் அமைத்து உலகிலே குபேரராக இன்றும் வாழ்கின்றார்கள்.

தமிழன் உழைக்கப்பிறந்தான். யாரோ வாழப் பிறந்தான். தான் சாகாது சாகப்பிறந்தான். மாற்றாரால் தாழ்த்தப்பட்டான். ஆண்டசாதி ஆளப்படும் சாதியாகினான். காலம் காலமாக ஆரியருக்கு மொகலாயருக்கு மேலை நாட்டாருக்கு முதுகேலும்பு ஒடியப் பாடுபட்டுழைக்கும் சாதியானான்.

சுதந்திரம் 4.2.1948 ல் கிடைத்த பின் சிங்களவன் திட்டமிட்டு மட்டந்தட்டி தமிழனை இலங்கையில் இனத்தையே இல்லாமற் செய்ய வேண்டுமென்று தமிழனைச் சொல்லி சொல்லி மாறி மாறி வந்த சிங்கள அரசினர் அடுத்துக்கெடுத்துக் கொடுத்துப் பிரித்து வெருட்டிக் கலைத்து நம் நாடுவந்து குண்டுபோட்டுக் கொன்று கொள்ளையடித்துக் கற்பழித்துத் தென்கீழ் ஆசியாவிலேயே பிரபலமான எங்கள் பொக்கிஷமான யாழ்நூலகத்தை எரித்துச் சாம்பராக்கி இனத்தையே இல்லாமற் செய்கின்றானே சிங்களவன். இன்னுமா கட்சி பேதம். ஐந்து லட்சம் அகதிகள் வீடின்றி, படுக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, உழைக்கத் தொழிலின்றி, குடிக்க மருந்துமின்றி, கழிக்க கழிவிடமின்றி, அலைகின்றாரே. இன்னுமா காட்டிக் கொடுப்புகள். இன்னுமா வேறுபாடுகள். இனியாவது ஒன்றுபடக்கூடாதா. இனமே சிந்திப்பாய் நாடிருக்கா? நாடு பெறவேண்டும். சுதந்திரம் மிக்க வீறுகொண்ட வீர மிக்க இனமாக வேண்டும். நம்மை நாமே ஆளவேண்டும். தீரமிக்க இனமாக உலகம் போற்ற வாழவேண்டும். ஒன்றுபட்டு புதிய சமுதாயம் கண்டு பழைய சமுதாய பழக்க வழக்கங்களுக்குச் சாவுமணி அடிக்க வேண்டும். புதிய புதிய திட்டங்கள்



படிப்பகம்

www.padippakam.com

கீழைத்தேய கப்பற்பாதை காணவந்த வஸ்கொடாகாமாவுக்குத் தமிழ் மாலுமிதான் தீட்ட வேண்டும். புதுமையான வாழ்வு வாழ வேண்டும். பயிரினம் செழிப்புடன் வளர வேண்டும். சோலைகள் கூட வேண்டும். வீட்டிலே இராட்டினம் இயங்க வேண்டும். ஆண்களும் பெண்களும் சரி நிகர் சமமாக கூடி உழைக்க வேண்டும். வீரம் வளர வேண்டும். வீட்டுக்கு ஒரு மைந்தன் நாட்டுக்கு விருப்புடன் விடவேண்டும். பாடசாலைகள் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் சிறப்புடன் இயங்க வேண்டும். உயர்வு தாழ்வு நீங்கவேண்டும். சாதிபேதம் சாகவேண்டும்.
சகலரும் ஒன்றெனநினைக்க வேண்டும். கோவில்களில் தமிழில் பூசை செய்யவேண்டும். வைத்தியசாலைகள் வளரவேண்டும். முதியோர் நிலையங்கள் அமைக்கவேண்டும். அறநெறி ஓங்கவேண்டும். வாசிகசாலைகள் வளரவேண்டும். பொது நூல் நிலையங்கள் ஆகவேண்டும். தமிழில் நீதி வழங்க வேண்டும். விளையாட்டுக் கழகங்கள் இயங்க வேண்டும். ஆடல்கள், பாடல்கள், இயல், இசை, நாடகம், வளரவேண்டும். பண் பரதம் வளரவேண்டும். ஆளுக்காள் உதவியாக இருக்கவேண்டும். சீதனம் தொலையவேண்டும். எல்லாவிதங்களிலும் புதுமையான மனிதனாகத் தமிழன் வாழ வேண்டும். தமிழா பட்டது போதுமடா. வால் பிடித்துக் கெட்டது போதுமடா. உன்னை உணர்வாய் மாற்றான் பிரித்து நம்முதுகில் சவாரி செய்தமுறையை உணர்வாய். நம் கையைப் பிடித்து நம் தலையிற் குட்டி நம்மை அழித்ததை உணர்வாய்.

இனியாவது நெஞ்சுரம் கொண்டு நிமிர்ந்து வீரங் கொண்ட வேங்கையாகிப் புலிக்கொடி ஏற்றிப்புகளுடன் வாழ்வோம். தமிழீழம் போற்றுவோம்.





படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

மாற்றாரால்
துண்டாக்கப்பட்டதால்
ஒன்றுமில்லையாகினோம்.
என்பதை அறிந்து இனியாவது
துண்டுபடாது ஒன்றுபட்டு
ஒத்துழைத்து
வீறுகொண்ட வீரதீரராகிச்
சுதந்திரம் அடைந்து
வளம் பல கண்டு
நலம்பல காணும்
தமிழ் ஈழம் பெற்று
ஆளும் சாதியாகிப் புலிக்கொடியேற்றி
உலகம் போற்றும்
புகழுடன் வாழ்வோம்.
இதுவே என் இதயத்துடிப்பு

வணக்கம்

இ. நாகராசா
யாழ். வேலணையூரான்
தமிழ் ஈழம்



படிப்பகம்